# உதயன்

www.onlineuthayan.com

**34** பக்கங்கள் சுடர் 27 கதிர் 350 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 25 **சனிக்கிழமை** (10/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00








வெலிக்கடைச் சிறைச்சாலை கூரையின் மீது ஏ.கே.47 துப்பாக்கிகளுடன் கைதிகள் ஏறி நிற்கின்றனர்.

(மேலும் படங்கள் 4A பக்கத்தில்)



சிறைக் கலவரத்தில் காயமடைந்த அதிரடிப் படைச் சிப்பாய் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்படுகிறார்.

# கொலைக்களமானது வெலிக்கடை சிறை

## –13 பேர் சாவு; 32 பேருக்கு மேல் காயம்
## –ஆயுதக் களஞ்சியம் கைதிகள் வசம்
## –அதிரடிப் படையுடன் துப்பாக்கிச் சண்டை

கொழும்பு, நவம்பர் 10

கொழும்பு வெலிக்கடைச் சிறையில் கைதிகளுக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் நேற்றுமாலை பயங்கர சண்டை வெடித்தது. இந்தக் கலவரத்தில் குறைந்தது 13 பேர் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. 32 பேர் காயமடைந்தனர். இவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.

சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்தைக் கைதிகள் கைப்பற்றி துப்பாக்கிகளை எடுத்து விசேட அதிரடிப்படையினருடன் கடும் சண்டையில் ஈடுபட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. நவீன ஏ.கே. ரக துப்பாக்கிகளை ஏந்தியபடி கைதிகள் சிறைக்கூரையில் ஏறிநின்றனர்.

இந்த மோதலில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நள்ளிரவு வரை 13 சடலங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டிருந்தன என்று அனில் தெரிவித்தார். அவர்களில் குறைந்தது 11 பேர் கைதிகள். தப்பிச் செல்ல முற்

பார்க்க பக்கம் 4

# 13 ஒழியுமா இல்லையா?

## ஜனாதிபதியிடம் கேட்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, நவ. 10.

''மாகாணசபை முறைமை முழுமையாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் எனக்கூறும் ஜனாதிபதி 13ஆவது திருத்தச் சட்டம் ஒழிக்கப்படுமா இல்லையா? என்பதை வெளிப்படையாகக் கூறவேண்டும்'' - என்று நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

''கடந்த மூன்று வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர், சர்வதேச மனித உரிமைகள் பேரவை என்பவற்றுக்கும் இந்திய அரசுக்கும் நாட்டு மக்களுக்கும் சுயமாகவே அளித்த அனைத்து வாக்குறுதிகளிலும் இருந்து இந்த அரசு விலகிச் செல்கின்றது'' என அவர் குற்றஞ்சுமத்தினார்.

வரவு - செலவுத்திட்ட உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சுமந்திரன் இதனைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பார்க்க பக்கம் 4

# கட்டுப்பாடுகள் திணிப்பால் இலங்கையர்கள் கவலை

## நவிப்பிள்ளை தெரிவிப்பு

பாலி, நவ.10

தம் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்து இலங்கை மக்கள் கவலை அடைந்துள்ளார்கள் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை (நவநீதம்பிள்ளை) தெரிவித்துள்ளார். இலங்கையில் நிலையற்ற தன்மை தொடர்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

''இன்றும் அது (இலங்கை) முரண்பாடு நிறைந்த இடமாகவே இருக்கின்றது. பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. தம்மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்து அந்த மக்கள் கவலை கொண்டுள்ளார்கள் என்றே எனக்குக் கிடைக்கும் அறிக்கைகள் எல்லாம் கூறுகின்றன'' என்றார் நவிப்பிள்ளை.

இந்தோனேசியாவின் பாலித் தீவில் ஜனநாயக மாநாடு நடந்துவருகின்றது. நவிப்பிள்ளையும் அதில் கலந்துகொண்டுள்ளார். அங்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இலங்கை பற்றிக் கூறினார்.

இலங்கையில் நிலையற்ற தன்மை தொடர்வதால் ''பயத்திலிருந்து தப்புவதற்காக அல்லது தமது சொந்தப் பாதுகாப்புக்காக அவர்கள் வெளியேறுவதைத் என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது'' என்றும் அவர்

பார்க்க பக்கம் 4

## திருநீறு அணிந்தார் கனேடிய பிரதமர்



பெங்களூர்,நவ. 10

பெங்களூருக்குநேற்று முன்தினம் வந்திருந்த கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பர் சோமேஸ்வரர் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். கனடாவிற்கான துணைத் தூதரகத்தையும் பெங்களூரில் திறந்து வைத்துள்ளார்.

இந்து சமய முறைப்படி பாதணிகளைக் கழற்றி விட்டு கோயில் பிரகாரத்துக்குள் சென்றார் ஹாப்பர். சோமேஸ்வர ஆலய பிரதம குருக்கள் சால்வை போர்த்தியும், மலர் மாலையணிவித்தும் அவரை வரவேற்றார். விசேட பூசைகளிலும் கலந்து கொண்ட ஹாப்பர்,

கோவில் உட்பிரகாரத்தைச்

பார்க்க பக்கம் 4

## பிள்ளைகளை துன்புறுத்திய தந்தைக்கு சிறை

யாழ்ப்பாணம், நவ.10

சிறுவர்களைப் பராமரிக்கத் தவறியமை மற்றும் அவர்களை அடித்துத் துன்புறுத்தியமை ஆகிய குற்றங்களுக்காக தந்தை ஒருவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இதே குற்றஞ்சாட்டப்பட்ட மற்றொரு தந்தை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த இரண்டு வழக்குகளும் ஊர்காவற்றுறை நீதி

பார்க்க பக்கம் 4

## புலிகளின் முன்னாள் தளபதி பிரான்ஸில் சுட்டுக்கொலை

பாரிஸ்,நவ. 10

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் சுட்டுக்கொல்லப்பட்டார். பரிதி என்றழைக்கப்படும் நடராசா மதீந்திரன் என்பவரே நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுடப்பட்டார். இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் மூத்த தளபதிகளில் ஒருவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த இருவர், இவர் மீது சுட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கிழக்கு பாரிஸில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பணியகத்திலிருந்து பரிதி வெளியே வந்த போது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மூன்று தடவைகள் சுட்ட தாக்குதலாளிகள்

பார்க்க பக்கம் 4

## யாழ். – கொழும்பு பஸ் சேவை மேலும் மேம்படும்

யாழ்ப்பாணம்,நவ.10

வடமாகாணத்துக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு முதலீட்டாளர்கள் பலர் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறிக்கும், தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண ஆளுநரின் கொழும்பு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ். - கொழும்பு தேசிய போக்குவரத்து மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது. வழித்தட அனுமதியைப் பெற்றுக்கொள்ளாத தனியார் பஸ்களும் இந்த வழியில் சேவையில் ஈடுபடுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. அவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. (த-5)

## பொன்சேகாவின் கட்சியிலிருந்து டிரான், அர்ஜுன திடீர் விலகல்

கொழும்பு, நவ.10

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பிரதித் தலைவரான அர்ஜுன ரணதுங்கவும் செயலாளரான டிரான் அலஸும் நேற்று அக் கட்சியிலிருந்து திடீரெனப் பதவி விலகினர்.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையே இவர்களின் இந்த முடிவுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், தமது இந்த முடிவுக்கான காரணத்தை தற்போது அறிவிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''கட்சியின் பிரதித் தலை

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்கத்துக்கு ஏற்பட்ட நிலைதான் இலங்கைக்கும் வரும்: ஐ.தே.கட்சி

கொழும்பு, நவ.10

ஐஸ்லாந்து, கிரேக்கம் போன்ற நாடுகளுக்கு ஏற்பட்ட நிலைமைதான் இலங்கைக்கு ஏற்படப்போகின்றது. நாட்டில் மனித உரிமைகள் நல்ல முறையில் இல்லை. இதனால், வெளிநாட்டு நன்கொடைகள் கிடைப்பதில்லை. இந்த நாடு சீரழிந்து வருகின்றது. வளங்கள் குறைந்துகொண்டு வருகின்றன.

- இவ்வாறு தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நேற்று சபையில் ஆரம்பித்துவைத்து உரையாற்றிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்துக்குத் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி. இது ஏழைகளுக்கு எதிரானதாக உள்ளதால் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியது.

"100 ரூபாவைக் கொடுத்துவிட்டு 90 ரூபாவைப் பிடித்துக்கொள்ளும் விதமாக இந்த வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்திற்கு அமையவே இது தயாரிக்கப்பட்டுள்ளது" - என்று ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

**ஒரு பிரிவுக்கே நன்மை**

இந்த வரவு - செலவுத்திட்டத்தை எதிர்க்கின்றோம். மோசடிமிக்க அரசைப் பாதுகாக்கவேண்டிய தேவை எமக்கில்லை. நல்லதை நல்லது என்று கூறுவோம். பிழை என்றால் பிழையைச் சுட்டிக்காட்டுவோம்.

இந்த வரவு - செலவுத்திட்டம் இல்லாதவர்களை மேலும் இல்லாதவர்களாக்கி விட்டது. உள்ளவர்களுக்கு மேலும் கொடுத்துவிட்டது. ஒரு பிரிவினர் மாத்திரமே இதன் மூலம் நன்மையடைகின்றனர்.

2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பக்கங்கள்தான் மாறியுள்ளன. அதில் கூறப்பட்டுள்ளவைதான் இதிலும் உள்ளன. ஒருசில குடும்பங்களைத் திருப்திப்படுத்தும் பட்ஜெட்தான் இது.

**திருத்தம் வேண்டும்**

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின்போது திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும் என்று விரும்புகிறோம்.

நாட்டின் கடன் சுமை அதிகரித்திருக்கின்றது. அதைக் குறைக்க எந்த யோசனையும் இந்த வரவு- செலவுத் திட்டதில் முன்வைக்கப்படவில்லை.

நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்கு கடனாளிகளாக மாறியுள்ளனர்.

இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக நாம் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிறு வியாபாரிகள் மீது வற் 'வரி' சுமத்தப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு 50 கோடி ரூபாதான் ஒதுக்கப்பட்டுள்ளது. சமய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியைப் பார்த்தால் ஒரு முஸ்லிம் பள்ளிவாசலுக்கு 3,000 அல்லது 4,000 ரூபாகூடக் கிடைக்காது.(உ-சி)

## ஆறுதலாகக் கூட்டமைப்புடன் பேசுவாராம் மஹிந்த

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஆறுதலாக பேசப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

2013ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஜனாதிபதி, பின்னர் தேநீர் விருந்தில் பங்கேற்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், பொன்.செல்வராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பீலிக்ஸ் பெரேராவுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு சென்று அவர்களுடன் உரையாடியுள்ளார்.

நீதித்துறை விவகாரங்கள் குறித்து அவர்களுடன் பேசிய மஹிந்த ராஜபக்ஷ, "உங்களுடன் ஆறுதலாக பேசவேண்டும். ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கு அடித்தளம் போட்ட பட்ஜெட்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

2014ஆம் ஆண்டு இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கு அடித்தளம் போடும் விதமாக 2013ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அமைந்துள்ளது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அது மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2014ஆம் ஆண்டில் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கு அடித்தளம் இடக்கூடிய ஒன்றாக இந்த 2013ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அமைந்துள்ளது.

பொருளாதாரத்தில் புதுயுகம் படைக்கும் பட்ஜெட்டாக இது உள்ளது. எமது முக்கிய பிரச்சினையாக இருப்பது நாம் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பது. அதற்காக நாம் அரச வருமானத்தை அதிகரிக்கவேண்டும். குறைந்த வட்டி மூலமான கடன்களால்தான் இது சாத்தியப்படும்.

18.8 சதவீதத்தால் இறக்குமதியைக் குறைத்துள்ளோம். ஏற்றுமதியை அதிகரிக்க இந்த பட்ஜெட் ஊடாக எதிர்பார்த்துள்ளோம். அமெரிக்காவும், ஐரோப்பாவும் 60 சதவீத ஏற்றுமதியை எம்மிடம் பெறுகின்றன. இந்த நாடுகள் எம்மீது சில அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றன.

பசுமை விவசாயத்தை நோக்கிப் பயணிக்கவேண்டும். அதற்கான முன்மொழிவும் இதில் உள்ளது. இது மொத்தத்தில் பசுமை பொருளாதாரத்தை நோக்கிச்செல்லும் பட்ஜெட்டாகவே அமைந்துள்ளது - என்றார்.

## பூக்கன்று நடும்வரவு செலவுத்திட்டம்

### கிண்டலடிக்கிறது முன்னிலை சோஷலிசக் கட்சி

2013 வரவு - செலவுத் திட்டம், உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்குப் பதிலாக வீதி ஓரங்களில் பூக்கன்றுகளை நடுவதற்கே பயன்படும் என முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் புபுது ஜயகொட இவ்வாறு தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 290 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதிலும் அதிகமாக நகர அலங்காரத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

# உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்காது ஜெனிவாவுக்கு காவடி எடுக்கும் அரசு

## சபையில் ரவி கருணநாயக்க கிண்டல்

கொழும்பு, நவ. 10.

வாக்குறுதிகளைக் கொடுத்து ஏமாற்றுவதில் இலங்கை அரசு சாதனை படைத்துவிட்டது என்ற தோரணையில் அரசை விமர்சித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9:30 மணிக்கு சபாநாயகர் சமல்ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்ட உரை மீதான முதல் நாள் விவாதம் ஆரம்பமானது. அதில் உரையாற்றும் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு விமர்சனம் செய்தார்.

இந்த அரசு எந்தச் சந்தர்ப்பத்திலும் உறுதியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதில்லை. சொல்வது ஒன்று செய்வது வேறொன்றாகவே இருக்கின்றது.


போர் முடிவுக்கு வந்த காலம்முதல் இனப்பிரச்சினை தீர்வுக்கு பேச்சுக்களின் மூலம் நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்படும் என்று கூறி வருகின்றது. அது வெறும் வார்த்தையே.

அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு, 13 ஆவது திருத்தம் என்பன தொடர்பாக அரசிற்குள்ளேயே மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன என்றும் கூறினார்.

**நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணானது.**

ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருந்துகொண்டு நிதி அமைச்சராகவும் இருக்கின்றார் மஹிந்த. அவரால் முன்வைக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (பட்ஜெட்) அரசமைப்பின் 148/3 ஆம் பிரிவுக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. அதனை வெறுமனே மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் மட்டும் அங்கீகரித்துவிட முடியாது என்றார்.

கடந்த காலங்களில், 1986 ஆம் ஆண்டு முதல் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பல தீர்ப்புக்களையும் ஆதாரங் காட்டி தனது வாதத்தை மெருகூட்டி,



தான் ஒரு மூத்த சட்டத்தரணி என்பதையும் உறுதிப்படுத்திவிட்டார் கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரன்.

**கேள்விகளுக்கு விடையில்லை**

கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்காமல் கால அவகாசம் கேட்பது பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது.

ஐ.தே.க. உறுப்பினர்களான ரவிகருணாநாயக்க, தயாசிறி ஜயசேகர ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு விடையளிக்காமல் கால அவகாசம் கோரப்பட்டது. அமைச்சர்களும் சபையில் இல்லை. ஆளுங் கட்சிக் கொறடாவான தினேஷ் குணவர்த்தனவே கால அவகாசம் கோரினார்.

ரவிகருணாநாயக்க நான்காவது தடவையாகவும் தயாசிறி ஜயசேகர ஐந்தாவது தடவையாகவும் கேள்விகளைக் கேட்டுள்ளார். ஆனால் தொடர்ந்தும் கால அவகாசம் கோரப்படுவது கவலையளிக்கிறது என்று சபாநாயகரிடம் முறையிட்டார். எதிர்க்கட்சித் தலைவரும் இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் அக்கறை கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**அமைச்சர்களுக்கு ஆலோசனை**

இவற்றைக் கேட்டுக் கொண்ட சபாநாயகர் கேள்விகளைக் கேட்கும் உரிமை சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. அதேபோன்று பதில் அளிக்கும் கடப்பாடும் அமைச்சர்களுக்கு உண்டு. எனவே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இயன்றவரை காலங்கடத்தாமல் கேள்விகளுக்கான விடைகளை வழங்க வேண்டும் என ஆலோசனை கூறினார் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ.

**முடியுமானால் திறந்த பொருளாதார கொள்கையை இரத்துச் செய்யுங்கள்**

விவாதத்தை ஆரம்பித்து ஒரு மணி நேரம் உரையாற்றினார் ஐ.தே.க. உறுப்பினரான ரவி கருணாநாயக்க. இந்த நாட்டில் புயலும் சூறாவளியும் ஏற்பட்டால் கூட அதுவும் எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சி என்கின்றனர் அரசினர். தாம் செய்தவை எல்லாம் தவறு பிழை என்று குற்றம் கண்டு பிடிக்கின்றனர். குறைகூறுகின்றனர், அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையையும் உங்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் இரத்துச் செய்யுங்கள் பார்ப்போம் என்று சவால்விட்டார்.

முறையாக செயல்படாததினாலேயே இன்று ஜெனிவாவுக்கு காவடி எடுக்க வைத்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை அரசு ஒப்புக் கொள்கின்றது. ஜனாதிபதியினால் சுயமாக நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி இருந்தால், இன்று சர்வதேச மனித உரிமை ஜெனிவா மாநாட்டிலும் காவடி எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்றும் ரவி கருணா நாயக்க இடித்துக் கூறினார்.

**சுருட்டுக்கடை கூட நடத்த முடியாதவர் பொருளாதாரம் பற்றிப் பேசுகின்றார்**

ஆளும் தரப்பில் பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம பேசும்போது ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத்திட்டம் முற்றிலும் நீண்டகால அபிவிருத்தியையும் வறுமை ஒழிப்பையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு மேற்கொண்ட துரித அபிவிருத்தியினால் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்த 10 லட்சம் சமுர்த்தி பயனாளிகள் இன்று நடுத்தர வர்க்கத்தினராக மேம்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்ட சரத் அமுனுகம, ஒரு சுருட்டுக்கடையைக் கூட சரியாக நடத்த முடியாதவர்கள்தான் இன்று பொருளாதாரம் தொடர்பாக விமர்சிக்கின்றனர் என்றும் சாடினார்.

**ஆளும் தரப்பினரின் இடையூறுகள்**

தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரன் இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதியும், அமைச்சர்களும் சர்வதேச சமூகத்திற்கும் தாமாகவே வழங்கிய வாக்குறுதிகளைப் பட்டியல் போட்டுக் காட்டினார்.

ஆனால் வழங்கிய வாக்குறுதிகளில் ஏதாவது ஒன்றை நடைமுறைப்படுத்தி உள்ளனரா என்றும் சவால்விட்டார். சுமந்திரனின் போரால் பாதிக்கப்பட்ட அரசதரப்பினர் அடிக்கடி இடையூறு செய்து கொண்டே இருந்தனர்.

எனினும் அவர்களுக்குப் பதிலடி கொடுத்துக்கொண்டே சுமந்திரன் தான் சொல்ல வந்த அனைத்தையும் சொல்லி முடித்தார்.

ஆளும்தரப்பில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பொருளாதார விளக்கம் அளித்தார். ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்டத்தைப் புகழ்ந்து தள்ளினார். அதே வேளை ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி வரவு - செலவுத்திட்டத்தை வன்மையாகக் கண்டித்தார்.

நாடாளுமன்றம் இன்று சனிக்கிழமை கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளம் உரிய காலத்தில் கிடையாவிடில் போராட்டம்

## சுன்னாகம் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் எச்சரிக்கை

*யாழ்ப்பாணம், நவ.10*

***சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை உரிய வேளையில் வழங்க வேண்டும். இதற்கு நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஊழியர் தொழிற் சங்கத்தினர் அறிவித்துள்ளார்.***

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதத்துக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாமையால் பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவு ஊழியர்கள் தொழிற்சங்கம் கூடி எடுக்கப்பட்ட தீர்மானம் அடங்கிய கடிதமும் சங்க நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நேற்றுச் சங்கப் பணியாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை சங்க நிர்வாகம் நடத்தியது.

இதில் செப்ரெம்பர் மாதத்துக்கான கொடுப்பனவை உடன் வழங்குவதாகப் பணியாளர்களிடம் உறுதியளிக்கப்பட்டது.

பெரும் நட்டத்தில் செயற்பட்டு வரும் இந்தச் சங்கம் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளதோடு பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

அத்துடன் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்களிலும் பொருள்களின் கையிருப்பு மிகக் குறைந்துள்ளதால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

# இடைநடுவில் விடப்பட்ட வீதி திருத்தப் பணிகள்



வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் சுமார் 6 கிலோ மீற்றர் நீளமான வாரிவிட்டான் வீதியின் திருத்தப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதால் வீதியால் பயணிக்கும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2 வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வீதியின் திருத்தப் பணிகள் கடந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் ஒப்பந்தகாரர்கள் மிகவும் இழுபறியில் வீதித் திருத்தப் பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

கடந்த 3 மாத காலமாக வீதித் திருத்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுவிட்டன. இதனால் வீதியின் திருத்தப் பணிகளுக்காக பறிக்கப்பட்டிருந்த கல், மணல் என்பன நாளாந்தம் களவாடப்பட்ட வண்ணம் உள்ளன. சுமார் 6 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியின் ஊடாக மருதங்கேணி, வத்திராயன், ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய இடங்களுக்குச் செல்லும் மக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதித் திருத்தப் பணிகள் தொடர்பாக வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளது. குறித்த வீதி நீண்ட காலமாகமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காட்சியளிப்பதால் வீதியின் இரு மருங்கிலும் கொட்டப்பட்டுள்ள கல், மண் வீதியெங்கும் பரப்பப்பட்டு போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலும் உள்ளது. இது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

''என்றிப்' திட்டத்தின் கீழ் இந்த வீதியின் புனரமைப்புபணி இடம்பெற்றது. ஒப்பந்தகாரர் கடந்த 3 மாத காலமாக திருத்தப் பணிகளில் ஈடுபடவில்லை. இது தொடர்பான மேலதிக விவரங்களை என்றிப் திட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்குமாறு தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிப்பாளருடன் கடந்த 2நாள்களாக தொலைபேசிஊடாகதொடர்பை ஏற்படுத்திய போதும் அவர் பதிலளிக்கவில்லை.(ம-14)

## மாதகல் மேற்கில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.10

மாதகல் மேற்கில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு பற்றைகளை துப்புரவு செய்வதற்குரிய உபகரணத் தொகுதிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் கடந்த மாதம் 22 ஆம் திகதியே மக்கள் மீளக்குடிமர்வுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்த மக்கள் மீளக்குடியமர்ந்து 15 நாள்களை கடந்த நிலையில் அவர்களுக்கான உதவிகள் எவையும் வழங்கப்படாதிருந்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு டனிஷ் அகதிகள் பேரவையும் யாழ். மாவட்ட செயலகமும் உபகரணங்களை வழங்கியுள்ளன.

220 குடும்பங்களுக்கு இந்த உதவிப் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

பற்றைகளை துப்புரவு செய்வதற்குரிய கத்திகள், மண்வெட்டிகள் அடங்கிய உபகரணப் பொதிகளே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு இந்திய வீடமைப்புத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ம-5)



*ஆனைக்கோட்டை உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலய உளநல ஆசிரியை சுபானுஜா தவநாயகம் எழுதிய 'முகங்கள்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் எஸ்.திலீபன் தலைமையில் நடைபெற்றது. நூலை யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி எஸ்.யோகேஸ்வரன் வெளியிட யாழ். கல்வி வலய உளநலப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெ.புத்திசிகாமணி பெற்றுக்கொள்கின்றார். அருகில் நூலாசிரியர், அதிபர் ஆகியோர் உள்ளனர். (ம-9)*

# வல்வை பரவைக் கடலில் ஆரம்பமாகியது மீன்பிடி

வல்வை பரவைக் கடலில் மீண்டும் மீன்பிடித் தொழில் நடைபெற்று வருகின்றது. இதனால் இந்தப் பகுதிகளில் இறால் மற்றும் மீன் வகைகள் காலை மற்றும் மாலை வேளைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

வல்வைப் பரவைக் கடலில் மேற்கொள்ளப் பட்டு வந்த சிறுகடல் மீன்பிடித் தொழில் குடாக்கடல் நீரேரியை மாற்றி அமைக்கும் மேம்பாட்டு திட்டத்தின் பிரகாரம் சமுத்திரத்தின் உப்பு நீர் . உட்பிரவேசிக்காது தடை அணைக் கதவுகள் நிறுவப்பட்டதை அடுத்துத் தடைப்பட்டது. சமுத்திர நீர் வற்றுப் பெருக்கு இல்லாமையால் இந்த வருடம் கோடைப் பருவத்தில் நீர்வற்றி வறண்டு காணப்பட்டது. அத்துடன் மண்டான் அச்சுவேலி வல் லைப் பகுதியில் உப்பும் விளையவில்லை.

அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து குடாக்கடல் நீரேரியில் நீர் நிரம்பி இருப்பதாடு வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கு ஏற்றவாறு தொண்டமானாறு தடைக் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் சமுத்திரத்துக்குள் வெள்ளம் ஓடியதால் மீன் வகைகள் பரவைக் கடலுக்கு வந்து சேர்ந்துள்ளன.

அத்துடன் பரவைக் கடலில் இறால் வகையும் உற்பத்தியாகி இருப்பதால் மீன் பிடித் தொழில் நடை பெறுகின்றது. வல்லைப் பரவைக் கட லில் பிடிக்கப்படும் மீன் வகை மற்றும் இறால், நண்டு என்பன காலை வேளையில் அச்சுவேலி பொதுச் சந்தையி லும் மாலை வேளைகளில் நெருப்புமூட்டி மற்றும் வல்லைப்பாலம் ஆகிய இடங்களி லும் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

வல்லைப் பரவைக்கடல் இறால், நண்டு, மீன் வகைகளை யாழ்-பருத்தித்துறை பிரதான வீதியால் பயணிப்போர் மற்றும் வீடு திரும்பும் அரச பணியாளர் கள் காத்து நின்று கொள்வனவு செய்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. (ம-11)

# மதிய உணவு தயாரிக்க வசதியான இடம் இல்லை

## மல்லாகம் கோட்டைக்காடு அ.த.கவில்

மல்லாகம் கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கு மதிய உணவு தயாரிப்பதற்கு வசதியான இடம் இன்மையால் சமையல் செய்வோர் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். பின்தங்கிய பாடசாலையாக உடுவில் கோட்டத்தில் இந்தப் பாடசாலை உள்ள போதும் போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு சமையல் கூடம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் இந்தப் பாடசாலைக்கு இதுவரை குறித்த சமையல் கூடமும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்று பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது. (ம-86)

## நிகழ்வுகள் இன்று

**வர்த்தகக் கண்காட்சி**

யாழ்.மாவட்ட சமுர்த்தி செயலகத்தால் நடத்தப்படும் ''வாழ்வின் எழுச்சிக்கு சமுர்த்தி சக்தி' எனும் தொனிப்பொருளினான வர்த்தகக் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சமுர்த்திப் பயனாளிகளின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் விற்பனையும் இடம்பெறவுள்ளது. இதில் சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஆ.பி.பி.திலகசிறி கலந்து கொள்ளவுள்ளார். (ம-14)

**பொதுக்கூட்டம்**

வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை பணியகத்தில் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவர் அ.ஜனர்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-23)

**அபிவிருத்திக் கூட்டம்**

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நிறுவன அபிவிருத்திக் கூட்டமும் ஆளுநர் சபைக் கூட்டமும் முற்பகல் 11 மணிக்கு யாழ். கிளை தலைமையகத்தில் நடைபெறவுள்ளன. இந்தக் கலந்துரையாடலில் வீடமைப்புத் திட்டம், நன்னீர், சுகாதாரம், நடமாடும் மருத்துவ சேவை தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-14)

**பயிற்சிப் பட்டறை**

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தனி மனித ஆளுமை தொடர்பான பயிற்சிப் பட்டறை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலன் கருத்துரைகளை வழங்கவுள்ளார். (ம-14)

**பரிசளிப்பு விழா**

இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி ந.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-253)




*உடுப்பிட்டிச் சந்தியில் பல வருடங்களாக இயங்கி வரும் உடுப்பிட்டி சனசமூக நிலையத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் முன் மாதிரியாக நிலைய இளைஞர்கள் நிலையத்தைச் சுற்றி உள்ள புற்களை வெட்டி சிரமதானம் செய்கின்றனர். (ம-253)*

## இந்திய வீட்டுத் திட்டத்தில் நெடுந்தீவில் 275 வீடுகள்

யாழ்ப்பாணம்,நவ.10

நெடுந்தீவு இந்திய வீடமைப்புத் திட்டத்தில்275 வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையைச் சேர்ந்த பட்டதாரி பயிலுநர்களுக்குமான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 17 ஆம் திகதி சனிக்கிழமையும் இந்திய வீடமைப்பு விடயம் தொடர்பான பொறுப்பதிகாரி வாசில் மற்றும் பொறியியலாளர், உத்தியோகத்தர்கள் நெடுந்தீவின் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தால் போராடுங்கள்; பிரதிபலனைப் பார்ப்போம்

## ஐ.தே.கவுக்கு அரசு சவால்

கொழும்பு, நவ.10

வரவு-செலவுத்திட்டத்துக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி சபையில் அறிவித்ததையடுத்து, ''வீதியில் இறங்கிப் போராடுங்கள். மக்களின் பிரதிபலன் எப்படி இருக்கும் எனப் பார்ப்போம்'' என்று சவால் விடுத்த அரசு, ஐ.தே.கவின் கோரிக்கைகளை மக்கள் 28 தடவைகள் நிராகரித்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியது.

அத்துடன், அனைத்துத் தரப்பினரிடமும் கலந்துரையாடப்பட்ட பின்னரே பட்ஜெட் முன்வைக்கப்பட்டது என்றும் அது தெரிவித்தது.

வரவு-செலவுத்திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் உரையாற்றிய போதே பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

**மக்களால் நிராகரிப்பு**

எதிர்க்கட்சியினர் எதனை விமர்சிக்கின்றனர் என்று எமக்குத் தெரியவில்லை. இவர்களது பேச்சில் பொருளாதாரம் குறித்து எதுவும் இருக்கவில்லை. ஆனால், எமது யோசனைகளை மக்கள் ஏற்றுள்ளனர்.

குறிப்பாக, நீங்கள் கூறும் கருத்துகளைப் பொதுமக்கள் ஏற்பதில்லை. ஒரு தடவையல்ல, 28 தடவைகள் உங்களது கருத்துகளை மக்கள் நிராகரித்துள்ளனர்.

பரந்த அளவில் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டது. சகல மாவட்டங்களுக்கும் சென்று அனைத்துத் தரப்பினரினதும் கருத்துகள் உள்வாங்கப்பட்டன.

தொழிற்சங்கங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள், மாணவர்கள் என முக்கிய தரப்புகளிடமிருந்தும் கருத்துகள் பெறப்பட்ட பின்னரே வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**முன்பின் முரண்**

வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் ரவி கருணாநாயக்க முன்வைத்த கருத்துகள் முன்னுக்குப்பின் முரணானவையாகும்.

அதேவேளை, வறுமை ஒழிக்கப்பட்ட நாடாக இதை மாற்றுவதே அரசின் இலக்காகும். உணவு, பாதுகாப்பு ஆகியன குறித்தும் கவனஞ்செலுத்தப்படுகின்றது. தொழில்நுட்பம், கல்வி ஆகியவற்றுக்கான யோசனைகளும் இருக்கின்றன.

பூகோள மயமாக்கலால் இன்று பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிகூட வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் நாம் 6.5, 7 சதவீதமான பொருளாதார வளர்ச்சி வீதத்தை தக்கவைத்திருப்பது மிக முக்கியமானதாகும்.

**வறுமை ஒழிப்பே நோக்கம்**

வறுமையை ஒழிப்பதே எமது பிரதான இலக்காக இருக்கின்றது. சிசு மரண வீதம் 8.5 வீதத்தால் குறைந்துள்ளதுடன், தாய் மரண வீதம் 1972ஆம் ஆண்டிலிருந்து 33.33 சதவீதமாகக் குறைந்துள்ளது.

எமது நாட்டின் மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணும் உச்ச மட்டத்தில் இருக்கின்றது. சார்க் நாடுகளில் இந்நிலைமைகளில் நாமே உச்சமட்டத்தில் இருக்கின்றோம். கல்விக்கு, சுகாதாரத்துக்கு நிதி போதாது எனக் கூறுபவர்கள் இந்தப் பெறுபேற்று நிலைவரங்களை ஆய்வுசெய்து பார்க்கவேண்டும். அநேகமானோர் - அதாவது ஒரு மில்லியன் மக்கள் இன்று வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். வறுமை நிலையிலிருந்து அவர்களை நாம் நடுத்தர மட்டத்துக்கு கொண்டுவந்தோம்.

இந்நிலையில், எதிர்க்கட்சியினர் வீதியில் இறங்கிப் போராடினால் அந்த மக்கள் என்ன செய்வார்கள் என்பது எமக்குத் தெரியவில்லை. குறிப்பாக, பெருந்தோட்டத்துறையும் இன்று முன்னேற்றமடைந்துள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றமே இந்த மாற்றத்திற்குக் காரணமாகும்.

**விவசாயம்**

அடுத்ததாக நாம் விவசாயத்துறையை எடுத்து நோக்கினால், அத்துறையிலும் மிகவும் சிறந்த நிலையில் வறுமை ஒழிக்கப்பட்டுள்ளது. எனவே, சுருட்டுக் கடையொன்றைக்கூட திறக்காதவர்களுக்குப் பொருளாதாரத்தை பற்றி பேசமுடியாது - என்றார்.

## பிள்ளைகளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மன்றில் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே தண்டனை வழங்கப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த சுமார் 40 வயதுடைய தந்தையே தனது பிள்ளைகளை-சிறுவர்களை பராமரிக்கத் தவறியுள்ளார் என்றும் சிறுவர்களை அடித்துத் துன்புறுத்துகிறார் என்றும் தகவல் கிடைத்தது.

இந்தத் தகவல் ஊர்காவற்றுறை பிரதேச செயலக நன்னடத்தை அதிகாரிக்குக் கொண்டு செல்லப்பட்டது. 2010 ஆம் ஆண்டு இடம்பெற்றது.

இதுதொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சிறுவர்கள் சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

இந்த வழக்கு நீதிவான் மகேந்திரராஜாவின் நடவடிக்கையால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வந்தது.

விசாரணையின் போது சந்தேகநபரான தந்தை தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அவருக்கு ஒருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதில் 5 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் ஏனைய 7 மாதங்களும் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை என்றும் தெரிவிக்கப்பட்டது. இது தவிர ஆயிரத்து 500 ரூபாஅபராதமும் விதிக்கப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின் மேலும் ஒரு மாத காலச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

இதே குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை கரம்பொன்னைச் சேர்ந்த தந்தை ஒருவருக்கு எதிராக [illegible] நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செ[illegible]து. 11 பிள்ளைகளின் தந்தையா[illegible]வர் மீதும் தனது பிள்ளைகளை பரா[illegible]காமை மற்றும் அடித்துத் துன்புறுத்துகின்றமை ஆகிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. வழக்கு நீதிவான் மகேந்திரராஜாவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆரம்ப விசாரணையின் பின்னர் சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4)

## புலிகளின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பரிஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கொலையாளிகளை தேடி வலை விரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டும் இதே காலப்பகுதியில் பரிதியை கொல்ல முயற்சி செய்யப்பட்டது. ஆளமான கத்திக்குத்துக்கு உள்ளான அவர் உயிர் தப்பியிருந்தார்.

இந்தக் கொலைக்கு இலங்கை அரச புலனாய்வாளர்கள் மீது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும் இணையத் தளங்களும் குற்றஞ்சாட்டியுள்ளன. அரசு இது பற்றி கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. (உ-த)

## திருநீறு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிரதம குருக்களுடன் இணைந்து சுற்றிப் பார்த்தார். தென்னிந்தியாவிலுள்ளவர்கள் கனடா வருவதற்கும், கனேடிய அரசைத் தொடர்பு கொள்வதற்கும் பெங்களூர் துணைத் தூதரகம் உதவுமென அவர் தெரிவித்தார். (த)

## பொன்சேகாவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வராகக் கடமையாற்றிவந்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவும் செயலாளராகக் கடமையாற்றிவந்த நானும் இன்று (நேற்று) கட்சியிலிருந்து விலகியுள்ளோம். எமது இந்தத் தீர்மானத்திற்கான காரணத்தை இப்போதைக்கு அறிவிக்க முடியாது'' - என்றார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக டிரான் அலஸும் கட்சியின் நலனுக்காக அர்ஜுன ரணதுங்கவும் முன்னின்று செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

இருப்பினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நாட்டில் இல்லாதொழிக்க வேண்டும் என்று சரத் பொன்சேகா தலைமையில் கடந்த மாதம் 18ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டணியின் கூட்டத்தில் இவர்கள் இரு[illegible]கொண்டிருக்கவில்லை. (உ-சி)

## கொலைக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்ட போது சில கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றார்கள் அதிகாரிகள்.

**சண்டையின் பின்னணி**

நேற்று மதியம் ஒரு மணியளவில் வெலிக்கடை சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் திடீர் சோதனையில் இறங்கினர்.

இதன்போது கைதிகளின் பெருந்தொகையான கையடக்கத்தொலைபேசிகளை அவர்கள் மீட்டனர். வழக்கமாக இத்தகைய தேடுதலில் சிறைக் காவலர்களே ஈடுபடுவர்.

கைதிகள் பலர் கைகள் கட்டப்பட்டு தாக்கப்பட்டனர் என்று வேறு கைதிகள் கூறினர்.

இதனால் ஆத்திரமடைந்த கைதிகள் முதலில் விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் மீது கற்களை வீசித் தாக்கத் தொடங்கினர். இரு தரப்புக்கும் இடையில் சண்டை வெடித்தது.

கலவரத்தில் ஈடுபட்ட கைதிகள் வெலிக்கடைச் சிறையிலுள்ள ஆயுதக் களஞ்சியத்தைக் கைப்பற்றி அங்கிருந்த பெருமளவான துப்பாக்கிகளைத் தம்வசப்படுத்தினர் என்று பொலிஸார் கூறினர்.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர்.

எனினும் கட்டு மீறிய சண்டையால் மேலும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டனர்.

**துப்பாக்கிச் சூடு**

கைப்பற்றிய ஆயுதங்கள் சகிதம் சிறைச்சாலை கூரைமீது ஏறிநின்றவாறு கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டதுடன் அதிரடிப் படையினரை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததால் வெலிக்கடைப் பகுதி பெரும் சண்டைக்களம் போலாகியது. கைதிகளின் தொடர் சூட்டை அடுத்து கவச வாகனங்கள் மூலம் அதிரடிப்படையினர் சிறையினுள் போனதை சாட்சிகள் கண்டுள்ளனர்.

ஒரு கட்டத்தில் 4 கைதிகள் கூரையிலிருந்து ஒரே நேரத்தில் சுட்டுள்ளனர். நிலைமை கட்டு மீறியதால் சிறைச்சாலைக்கு எதிரிலும் 'பேஸ் லைன்' பிரதான வீதியில் தெமட்டகொட வரையில் போக்குவரத்து நேற்று நள்ளிரவு வரை தடைப்பட்டிருந்தது.

**உதவிக்கு இராணுவம்**

நிலைமையைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்காக விசேட அதிரடிப்படையினருக்கு உதவியாக இராணுவத்தினரும் அழைக்கப்பட்டனர். ஆயுதங்களுடன் கூரையில் நின்ற கைதிகளை சுட்டு வீழ்த்துவதற்காக குறிபார்த்து சுடும் படையினரும் அழை[illegible]பட்டிருந்தனர்.

[illegible] கலவர நிலையைப் பயன்[illegible] ப[illegible]கள் சிறைச்சா[illegible]திலை உடை[illegible] தப்பியோடியுள்ளனர் என்றும் அதிகாரிகள் அஞ்சுகின்றனர். ஓட்டோ ஒன்றில் அவ்வாறு தப்ப முயன்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். நேற்றிரவு 9.30 மணிவரை சிறைச் சாலையினுள் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருந்தன. 9.40 மணிக்கு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

சண்டையில் காயமடைந்தவர்களில் 14 பேர் விசேட அதிரடிப்படையினர் என்று பொலிஸார் கூறுகின்றனர். படுகாயமடைந்த அதிரடிப்படையினர் ஒருவருக்கு அவசரமாக இரு சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டன. படையின் பிரதிப் பொறுப்பதிகாரியான ஆர்.எம். [illegible]வணவும் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார். (உ-16)

## கட்டுப்பாடுகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குறிப்பிட்டார்.

இலங்கையில் இருந்து படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்பவர்களை அந்த நாடு பெரும் எண்ணிக்கையில் திருப்பி அனுப்பி வருகையில் நவிப்பிள்ளையின் இந்தக் கருத்து வந்துள்ளது.

ஜனநாயக மாநாட்டில் ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கிலார்ட்டும் கலந்துகொண்டிருந்தார்.

புகழிடம் தேடி வந்தவர்களுக்கு தரமான உடல், உள ஆரோக்கியத்துடன் கூடிய வாழ்வுக்கு உரிமையுண்டு என்பதை அங்கு சுட்டிக்காட்டிய நவிப்பிள்ளை அரசியல் தஞ்சம் கோருவோரை ஆஸ்திரேலியாவுக்கு வெளியே தடுத்து வைத்தல் சில சமயம் இந்த உரிமையை மறுப்பதாகும் எனவும் கூறியுள்ளார். (உ-த)

## 13 ஒழியுமா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்ட உரை நாட்டின் பொருளாதாரம் தொடர்பானதாக இருந்ததை விட அரசியல் விமர்சனமாகவே இருந்தது.

**சந்தேகம்**

அரசியல் தீர்வு தொடர்பாக, மாகாண சபை முறைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். ஜனாதிபதியின் கூற்று மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த காலங்களில் அளித்த வாக்குறுதிகளில் இருந்து விலகிச் செல்வதையே அது காட்டுகிறது.

2009 ஆம் ஆண்டு மே 26 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ மூனும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையை இங்கு தொட்டுக் காட்டுகிறேன்.

**மறந்தவைகள்**

''13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு கூடுதலான அக்கறையுடன் செயல்படும். அதிகாரப் பகிர்வின் மூலம் நிரந்தரமான சமாதானம் ஏற்படுத்தப்படும்'' என்று அந்த அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

2009 மார்ச் மாதம் சர்வதேச மனித உரிமைகள் சபையில் பேசிய ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி மஹிந்த சமரசிங்க, ''தீர்க்கப்படாத இனப்பிரச்சினையால் நாடு மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. சர்வகட்சி மாநாட்டின் மூலம் நிரந்தரமான தீர்வு அவசியம்'' என்றார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டுக் கலைந்தது.

ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி பரிந்துரைகளையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு மே மாதம் இந்தியாவுக்குச் சென்ற வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் என்ன கூறினார்?

தமிழ்க் கட்சிகளுடன் துரிதமான பேச்சுக்களை நடத்தி 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் மேலாக அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படும் என்றார்.

இத்தோடு நின்றுவிடவில்லை. இந்த ஆண்டின் முற்பகுதியில் பெப்ரவரி மாதம் இங்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் 13 ஆவது திருத்தச் சட்டம் மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

**வாக்குறுதிகள் காற்றில்**

கடந்த மூன்று வருடங்களாக வழங்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளும் முற்றாக மீறப்பட்டுள்ளன. ஒருசிறு பகுதி கூட நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசு தமிழர்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றியே வந்துள்ளமை இப்பொழுது உறுதியாக்கப் பட்டுவிட்டது.

நேற்று இந்தச் சபையில் உரையாற்றிய ஜனாதிப[illegible]மது [illegible]ட்டின் பிரச்சினையைத் [illegible]க்க நாம் வெளியே செல்லவேண்டிய அவசியம் இல்லை. வெளித் தலையீடுகளும் தேவை இல்லை. எமது பிரச்சினைகளை நாமே சு[illegible]யாதையுடன் தீர்க்க முடியும் என்றார்.

அப்படியானால் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதிலும், இதுவரை அளித்த உறுதிமொழிகளிலும் இருந்து அவர் விலகிச் செல்வதாகவே தெரிகின்றது.

**சர்வதேசத்தை மதியுங்கள்**

நாம் சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் இருக்கின்றோம். எல்லா நாடுகளின் நட்புறவும் அவசியம்.

எமக்குத் தேவைப்படும் போது இந்தியாவைப் போற்றுவதும், தேவையில்லை என்றால் தூற்றுவதும் தவறு. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் சர்வதேசத்தால் ஏற்படும் பின்விளைவுகளுக்கான முழுப்பொறுப்பையும் இந்த அரசே தீர்க்க நேரிடும் - என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிப் பிரதேச சபை மீது கிளிநொச்சி வர்த்தகர் வழக்கு

## எதிர்கொள்வோம் என்கிறார் தலைவர்

கிளிநொச்சி, நவ.10

கரைச்சி பிரதேச சபை மீது கிளிநொச்சியைச் சேர்ந்த வர்த்தகரான இரத்தினசிங்கம் சரவணபவானந்தன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டடத் தொகுதியில் தனக்குக் கடை வழங்கப்படாததை எதிர்த்தே அவர் நீதிமன்றத்தை நாடி உள்ளார்.

இவரது மனு மீது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று விசாரணை நடந்தது. கடைகளுக்கு உரிமங்கள் வழங்குதை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை நிறுத்துமாறு நீதிமன்றம் அப்போது இடைக்காலத் தடை விதித்தது. உரிமம் வழங்கும் பணி நாளை நடைபெற இருந்ததாக மனுதாரர் நீதிமன்றில் சுட்டிக் காட்டியிருந்தார்.

கடைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறைமையை பிரதேச சபை முழுமையாக விளக்க வேண்டும் என்று பிரதேச சபை செயலாளருக்கு மாவட்ட நீதிமன்றம் பணிந்துள்ளது.

கிளிநொச்சி பொதுச் சந்தை தற்காலிகமாக அம்பாள் குளம் பகுதியில் இயங்கி வருகிறது. புதிய சந்தை கட்டடத் தொகுதியின் ஒரு பகுதி வேலைகள் பூர்த்தியான நிலையில் அந்தக் கடைகளை வர்த்தகர்களுக்கு வழங்கும் நடவடிக்கையை பிரதேச சபை இப்போது மேற்கொண்டுள்ளது.

''அரசியல் செல்வாக்குக்குட்பட்டு கடைகள் வழங்குவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனால் நீண்டகாலமாக கிளிநொச்சி பொதுச் சந்தையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தாம் பாதிக்கப்படப் போவதாகவும் மனுதாரர் கருதுகின்றார்'', என்று அவரது சட்டத்தரணியான விஜயராணி சதீஸ்குமார் நேற்றிரவு உதயனைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தகவல் தெரிவித்தார்.

இது தொடர்பில் 15 வர்த்தகர்கள் சபைக்குக் கடிதம் எழுதியிருந்தனர் என்றும், அதற்கு சரியான பதில் வழங்கப்படாத் நிலையில் தனது மனுதாரர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

கடை வழங்குவதில் அரசியல் தலையீடு என்பதை பிரதேச சபைத் தலைவர் மறுத்தார்.

''கிளிநொச்சி பொதுச் சந்தைக்கான கட்டடத் தொகுதி புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 180 கடைகளின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. அம்பாள் குளத்தில் உள்ள தற்காலிக சந்தையில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கே கடை வழங்குவதில் முன்னுரிமை வழங்க எண்ணியிருந்தோம். எனினும் இறுதி முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கு 296 வரையிலான வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்'' என்றார் அவர்.

சந்தையில் மேலும் கடைத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டதும் விண்ணப்பித்த அனைவருக்கும் கடைகள் வழங்கக்கூடியதாக இருக்கும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

''இதுவரை எவருக்கும் கடைகள் வழங்கப்படவில்லை. அது தொடர்பான விவரங்களும் வெளியிடப்படவில்லை. வழக்குத் தொடர்ந்த வர்த்தகர் முன்னர் நீண்டகாலமாக சந்தையில் வர்த்தகம் செய்தவர்தான், தற்போது அம்பாள்குளத்தில் அவர் வர்த்தகம் செய்யவில்லை. இதனால் இவ்வாறானவர்களின் வேண்டுகோள்களை அடுத்த கட்டத்திலேயே பரிசீலிக்க முடியும்'' என்கிறார் பிரதேச சபைத் தலைவர்.

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கென மேலும் இரண்டு கடைத்தொகுதிகளும் மாடி கட்டடத் தொகுதியும் கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

# கிளினிக் வந்த வயோதிபர் மயங்கிச் சாவு

யாழ்ப்பாணம், நவ.10

மாதாந்தக் கிளினிக்குக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற வயோதிபர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் பழைய வெளிநோயாளர் பிரிவுக்கு வெளியே இடம்பெற்றது.

சம்பவத்தில் ஏ.செல்வராசா (வயது -70) என்பவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் பிற்பகல் வரை அவர் எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவரவில்லை.

மயங்கி விழுந்த அவரை உடனடியாக உள்ளே கொண்டு சென்று பரிசோதித்த போது அவர் உயிரிழந்துவிட்டமை தெரியவந்தது. சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-4)

# விவரங்களைப் பதிவு செய்ய அதிபர்களுக்கு வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.10

இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள், அழைக்கப்படாதவர்கள் தமது சுயவிவரங்களை இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் ஸ்ராலின் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கை அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சை தரம் I, தரம் II ஆகியவற்றுக்கு விண்ணப்பித்தவர்கள், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் நியமனம் கிடைத்தவர்கள் விண்ணப்பித்தும் நேர்முகப் பரீட்சைக்குத் அழைக்கப்படாதவர்கள், அதிபராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டவர்கள் ஆகியோர் தமது முழுமையான விவரங்களை ஆசிரியர் சங்கத்தில் பதிவு செய்து கொள்வதன் மூலம் பாதிக்கப் பட்டவர்களுக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவாக இருக்கும் எனவும்

**தமது முழுமையான விவரங்களை ஆசிரியர் சங்கத்தில் பதியவும்**

எமது சங்கம், பாதிப்புக்கள் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததன் அடிப்படையிலேயே தற்பொழுது அந்த நியமனங்கள் கிடைத்துள்ளன எனவே சம்பந்தப்பட்டவர்கள் தமது விவரங்களை அனுப்பி வைப்பதன் மூலம் மேலும் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என கேட்டுக் கொண் டுள்ளார். (ஐ-4)

# உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் கோயில்களின் விடிவு எப்போது?

## சபையில் கேட்டார் சஜித்

கொழும்பு, நவ. 10

போர் முடிந்து மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபட முடியாத நிலை தொடர்கிறது. இந்தத் தடை எப்போது நீங்கும் என ஐதேக. நாடாளுமன்ற உறுப்பினரான சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

நாட்டில் இந்துமத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? இப்பணிகளுக்காக 2009, 2010 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அவற்றைச் சீரமைப்பதற்கு நீங்கள் ஒதுக்கி உள்ள நிதி போதுமானதா? என்று சஜித் பிரேமதாச, பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

பிரதி அமைச்சர் எம்.கே. டி.எஸ். குணவர்த்தன அதற்குப் பதில் அளித்தார்.

அரசு கடந்த பத்து வருடங்களில் 24 கோடியே 49 ஆயிரத்து 250 ரூபாவை இந்துக் கோயில்களின் புனரமைப்புக்காக வழங்கியுள்ளது- என்றார் அவர்.

2005 ஆம் ஆண்டில் ஒருகோடி பத்து லட்சம் ரூபா, 2006 ஆம் ஆண்டில் ஆறு கோடியே 70 லட்சம் ரூபா, 2007 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 90 லட்சம் ரூபா, 2008 ஆம் ஆண்டில் ஏழு கோடியே 34 லட்சத்து 70 ஆயிரம் ரூபா, 2009 ஆம் ஆண்டில் 5 கோடியே ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 250 ரூபா,2010 ஆம் ஆண்டில் 6 கோடியே 94 லட்சத்து 20 ஆயிரம் ரூபா. வழங்கப்பட்டுள்ளது.அதில் 21 கோடியே 9 லட்சத்து 61 ஆயிரத்து 487 ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றார்.

### தடை எப்போது நீங்கும்?

அமைச்சரின் பதிலில் கூறப்பட்டுள்ள தொகை போதுமானதாக இல்லை என்று சுட்டிக் காட்டினார் சஜித். ''போரின்போது வடமாகாணத்தில் பெருமளவிலான கோயில்கள் அழிக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் புனரமைக்கப்படவில்லை. அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று பல பிரதேசங்கள் இன்னும் தடை செய்யப்பட்ட . பிரதேசங்களாகவே இருக்கின்றன. அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் கோயில்களுக்குச் சென்று வழிபட அனுமதி இல்லை. போர் முடிந்து மூன்று வருடங்கள் கடந்தபோதும் இந்தத் தடைகள் நீக்கப்படவில்லை. எப்போது இந்தத் தடைகளை நீக்கி அந்த மக்களைச் சுதந்திரமாக வழிபட இடமளிக்கப் போகின்றீர்கள்?'' என்று இடைக் கேள்வி ஒன்றையும் அவர் எழுப்பினார்.


(த-02)

# வெலிக்கடைச் சிறைக் கலவரக் காட்சி...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'தூக்குக் கயிற்றில் நிஜம்' வெளியீடு சென்னையில்




'ராஜீவ் படுகொலை. தூக்குக் கயிற்றில் நிஜம்' என்னும் நூல் வெளியீட்டு விழா சென்னையில் இடம் பெறவுள்ளது.

மாவீரர் நாளுக்கு முன்பாக எதிர்வரும் 23 ஆம் திகதி சென்னை தியாகராஜர் நகரில் உள்ள சேர் பி.டி. தியாகராஜர் அரங்கத்தில் இந்த புத்தக வெளியீட்டுவிழா நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பழ. நெடுமாறன், வைகோ, சீமான், திருமாவளவன், ஜவாகிருல்லாஹ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்துகொள்ள வுள்ளனர். முக்கிய தலைவர்களின் விரிவான அணிந் துரையில் இருந்து சில வரிகளை மேற்கோள் காட்டிய விளம்பரம் தான் மேற்படி புத்தகம். விரிவான அணிந்துரைகள் புத்தகத்தில்இடம்பெற்றுள்ளனஎன்றுதெரிவிக்கப்பட்டது. (வ)

# சுய தொழில் உதவிகள் இனி பொருள்களாக

தென்மராட்சி, நவ.10

நலிவுற்ற குடும்பங்க ளுக்கு யுனிசெவ் நிறுவன அனு சரணையுடன் சுய தொழில் உதவிகள்வழங் கப்பட்டு வருகின்றன. இந்த உதவிகளை பயனாளிகளின் விருப்பத்துக்கேற்ப பொருள் களாக வழங்கச் சமூக சேவை கள் திணைக்களத்தினர் ஏற் பாடுகளை மேற்கொண்டுவ ருவதாக தெரிவிக்கப்பட்டது.

**இந்த உதவிகளை பயனாளிகளின் விருப்பத்துக்கேற்ப பொருள்களாக வழங்கச் சமூக சேவைகள் திணைக்களத்தினர் ஏற்பாடுகளை மேற் கொண்டுவருவதாக தெரிவிக்கப்பட்டது.**

சுயதொழில் உதவி கோரிய விண்ணப்பத்தில் பயனாளி மேற்கொள்ள உத்தேசித் துள்ள சுயதொழிலின் அடிப் படையில் அவற் றினைக் கொள்வனவு செய்து வழங் கப்படவுள்ளன. உதாரண மாக கால்நடை வளர்ப்புக்கு விண்ணப் பித்தவர்களுக்கு அவர்கள் விரும்பும் கால்நடை கள் கால்நடை வைத்தியரின் சிபார்சின் பின்னர் கொள்வ னவு செய்து வழங்கப்படும்.

உதவியாக வழங்கப்படும் பணம் உரிய தேவைக்குப் பயன் படுத்தப்படாமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் வழங்கப்படும் உதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு வருகி றதா என்பதை மாதாந்தம் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க அந்தந்தப் பிர தேச சமூக சேவைகள் அதி காரிகள் பணிக்கப்பட்டுள் ளதாகவும்தெரிவிக்கப்பட் டது.

(3-9)

# மு.கா.தலைமை இரட்டை வேடம்

அம்பாறை, நவ.10

இரவில் ஒன்றும் பகலில் ஒன்றும்பேசும்வேடதாரித்தலை குமையாக இன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைமை மக்க ளால் இனம் காணப்பட்டுள் ளது. கிழக்கு முஸ்லிம்கள் இத் தலைமை மீது முற்றாக நம் பிக்கை இழந்துள்ளனர் என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம். எஸ். சுபைர் குற்றம் சாட்டியுள்ளார்.

வாழைச்சேனை, கோர ளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துக்குட்பட்ட விளை யாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங் கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ் வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்களின் ஒரே தலைமை தாமே என்று தம் பட்ட மடிக்கும் முஸ்லிம் காங் கிரஸ் தலைமை முஸ்லிம் கள் மத்தியில் செல்லாக் காசாக மாறியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர் தல் பிரசார மேடைகளில் அரசுக்கு எதிராக ஆக்ரோச முழக்கங்களை எழுப்பிய முஸ் லிம் காங்கிரஸ் தலைமை மறுகணம் அரசுக்கு ஆதரவு நிலைப்பாட்டையெடுத்து மக்களின் உணர்வுகளுக்குத் துரோகமிழைத்தது.

இதன் மூலம் அவரது அர சியல் வியாபாரத் தன்மையை நன்கு புரிந்து கொண்ட கிழக்கு முஸ்லிம்கள் முற்று முழுதாக நம்பிக்கை இழந் துள்ளனர். முஸ்லிம் காங் கிரஸ் தலைமையின் அரசி யல் வியாபாரம் இனிமேலும் கிழக்கு முஸ்லிம்களிடம் எடுபடப் போவதில்லை.- என்றார்.

(ச-30)

# இலங்கை தமிழர்களுக்கு உதவ மலேசியாவில் புதிய நாடாளுமன்ற குழு உருவாக்கம்

'இன்று மலேசிய வர லாற்றில் ஒரு புதிய அத்தி யாயம் பிறந்துள்ளது. தமி ழர்கள் பிரச்சினையை மனித உரிமைகள் அடிப்படையில், பல்லினங்களைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் களின் கூட்டமைப்பு முன் னெடுத்துள்ளது. இந்த விடயம் பாராட்டத்தக்கதோடு அவர்களது முதிர்ச்சியையும் காட்டுகிறது' எனச்சுவாராம் மனித உரிமைக் கழகத்தின் தலைவர் வழக்கறிஞர் கா.ஆறுமுகம் தெரிவித்துள் ளார்.



இலங்கை இராணுவம் தமிழ் மக்கள்மீது மேற் கொண்ட போரினால் இடம் பெயர்ந்த தமிழர்களுக்காக, மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலேசிய நாடாளுமன்றக் கூட்ட மைப்பு ஒன்றை நிறுவி யுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2009-ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட மிகமோசமான இலங்கை இராணுவத் தாக்குதலில் இருந்து தப்பி, தற்காலிக முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த நான்கு இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

தங்களது வீடு, நிலம், உடைமைகள் அனைத் தையும் பறிகொடுத்த நிலையிலும், குடும்பங்கள் சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையிலும் வாழ்வாதா ரத்திற்குப் போராடும் தமி ழர்களுக்கு இந்த மலேசிய நாடாளுமன்றக் கூட்ட மைப்பு தகுந்த இராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்கும் என்கிறார் அதன் தலைவர் டத்தோ ஜொஹாரி அப்துல். இவர் சுங்கைப்பட்டாணி நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.

இந்த நாடாளுமன்றக் கூட்டமைப்புக்குச் செயலா ளராக தெலுக் இந்தான் பாராளுமன்ற உறுப்பினர் மனோகரன் மாரிமுத்து செயல்படுவார். இந்த அமைப்பின் மூலம் இடம் பெயர்ந்த மக்களுக்காக இலங்கை அரசு மேற்கொள் ளும் மனித உரிமை சார்புடைய நடவடிக்கைகளை மலேசியா கண்காணிக்க இயலும் என்கிறார் ஈப்போ பாராட் நாடாளுமன்ற உறுப்பினர் எம். குலசேகரன்.

மேலும், இந்தக் கூட்ட மைப்பில் பொக்கோ சேனா பாராளுமன்ற உறுப்பினர் டத்தோ மாபூஸ் ஒமார், கோத்தா மலாக்கா நாடாளு மன்ற உறுப்பினர் சிம் தோங் இம், சுபாங் நாடாளுமன்ற உறுப்பினர் சிவராசா ராசையா, பாலேக் புலாவ் நாடாளுமன்ற உறுப்பினர் யுஸ்மாடி, செனட்டர் இராம கிருஷ்ணன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.(3)

# உலகின் 194 ஆவது நாடாக தமிழீழத்தை அறிவியுங்கள்

## லண்டன் மாநாட்டில் முழங்கினார் ஜி.கே.மணி

''2009ஆம் ஆண்டு மே மாதத்தில் 5 இலட்சத்திற்கும் மேலான தமிழ் மக்களை முல்லைத்தீவின் மூலையில் தள்ளி, முள்ளிவாய்க்காலில் நச்சுக் குண்டு வீசியும், துப்பாக்கியால் சுட்டும் உலகின் மிகப்பெரிய இனப் படுகொலை நிகழ்த்தப்பட்டது. இப்படுகொலையை அரங் கேற்றியோர் மீது போர்க்குற றம் சுமத்தி அவர்களைக் கைதுசெய்ய வேண்டும். அத்துடன், உலகின் 194ஆவது நாடாக தமிழீழத்தை அறி விக்க வேண்டும்.''

**ஐ.நா. நிபுணர் குழு, இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறது.**

இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் இந்தி யாவின் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி.

பிரிட்டனின் அனைத்துக் கட்சி தமிழ் நாடாளுமன்றக் குழுவும், பிரிட்டன் தமிழ் அமைப்பும் இணைந்து, லண்டனில் உள்ள பிரிட்டன் நாடாளுமன்ற அரங்கில் சர்வதேச தமிழர் மாநாட்டை நடத்தினர். 7ஆம் திகதி முதல் நேற்றுவரை இந்த மாநாடு நடைபெற்றது.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சித் தலைவர் ஜி.கே. மணி மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டில் நடத்தி முடிக்கப்பட்ட இனப் படு கொலையால் உலகெங்கும் வாழும்தமிழர்களுக்கு ஏற்பட்ட மனவலியும், அதிர்ச்சியும் இன்னும் விலகவில்லை. இந்தச் சூழலில் இம்மாநாடு நடைபெறுகிறது.

இலங்கையில் உரிமை கேட்டுப் போராடிய தமிழர் களுக்கு உரிமை வழங்க வேண்டிய இலங்கை அரசு, இல்லாத காரணங்களைக் கூறி கடந்த 2006ஆம் ஆண்டில் ஈழத்தமிழ் மக்கள் மீது போர் தொடுத்தது.

இலங்கைப் போரில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டுள்ள னர். இந்தப் படுகொலைகள் தொடர்பில் விசாரணை நடத்திய ஐ.நா. நிபுணர் குழு, இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறது.

கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு இனப்ப டுகொலையை ராஜபக்ஷ அரசு நடத்தியதற்கு ஏரா ளமான ஆதாரங்கள் உள்ளன என்றும், இது குறித்து பன்னாட்டு விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்றும் தருஸ்மன் தலைமை யிலான ஐ.நா. குழு பரிந்து ரைத்திருக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக அயர்லாந்து தலைநகர் டப்லினில் நடைபெற்ற இலங்கை இனப்படுகொலை குறித்த மக்கள் தீர்ப்பாயத் தில் இலங்கைப் போரின் போது போர்குற்றங்கள் நடைபெற்றது உண்மைதான் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

இவை தவிர 'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்ட ஆதாரங்களும் இலங்கையில் போர்க் குற்றங்கள் நடந்திருப்பதை உறுதி செய்திருக்கின்றன. எனவே, இலங்கைப் போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கு ஆணையிடவேண்டும்.

இதற்குக் காரணமான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது போர் குற்ற வழக்குத் தொடரப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

மேலும், இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழமுடியாது என்பது பல தருணங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகளைப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகப் புரியும்.

தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தமிழ் கட்சி வேட்பாளர்கள்தான் வெற்றி பெறுவார்கள். சிங்களவர்கள் பகுதிகளில் சிங்களக் கட்சி வேட்பாளர்கள் தான் வெற்றி பெறுவார்கள். தமிழர்களுக்கு வாக்களிக்க சிங்களவர்களோ, சிங்களவர் களுக்கு வாக்களிக்க தமிழர் களோ தயாராக இல்லை.

இருதரப்பினரும் இணைந்து வாழத் தயாராக இல்லை என்பதையே இது காட்டுகிறது. அதுமட்டு மின்றி 1976ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு தனி நாடு என்ற வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்து தமிழ் கட்சிகள் போட்டியிட்ட போது தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள அனைத்து இடங்களையும் தமிழ் கட்சிகள் கைப்பற்றின.

இதுமட்டுமில்லை. இலங்கை இனச்சிக்கலுக்கு தமிழ் ஈழம் தான் தீர்வு என்று கூறுவதற்கு ஆயிரமாயிரம் காரணங்கள் உள்ளன. எனவே, தமிழர்களுக்கு தனி நாடு அமைத்துக் கொடுப்ப தற்கான நடவடிக்கைகளை உலக சமுதாயம் மேற்கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையில் பிரிட்டனுடன் இணைந்துள்ள தேசிய இனமான ஸ்கொட் லாந்து மக்கள், தங்களது 312 ஆண்டுகால உறவை முறித் துக்கொண்டு தனிநாடாக பிரிந்து செல்ல முடிவெடுத் துள்ளனர். இதற்கான பொது வாக்கெடுப்பு விரைவில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்பே மோண்டி நீக்ரோ, கிழக்குத் தீமோர், தெற்கு சூடான் என ஏராளமான நாடுகள் புதிதாக உருவெடுத் துள்ளன. இந்த வரிசையில் உலகின் 194ஆவது நாடாக தமிழ் ஈழத்தை அறிவிக்க வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கந்தறு கோலம் காட்டும் அரசின் வரவு- செலவுத் திட்டம்

"பதுரு பட்ஜெட்" (பாய் பட்ஜெட்) என்று சிங்களப் பொது மக்களால் பெயர் சூட்டப்பட்ட வரவு- செலவுத் திட்ட முறைமையின், விளைவான திடீர் விலை உயர்வுகள் இனி அடிக்கடி நடைமுறைக்கு வரும் என்பதனை வாசகர்கள் தமது மனங்களில் நிலையாக இருத்திக் கொள்ளலாம்.

ஆம். நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று நாட்டின் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் சமர்ப்பித்த அடுத்த நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டம், அடிக்கடி விலை உயர்வுகளைக் கொண்டுவரும் எனக் கொள்ளலாம்.

உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலை உயர்வுகளை நியாயப்படுத்த, அவ்வப்போது காரண காரியங்கள் அரச தரப்பால் நாடாளுமன்றிலும் சரி, அரசியல் மேடைகளிலும் சரி முன்வைக்கப்படும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். சர்வதேச பங்குச் சந்தையில் வீழ்ச்சி, உலகச் சந்தையில் விலையேற்றம் என்று பல வகையான காரணங்கள் அவ்வேளைகளில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும்.

அடுத்த ஆண்டுக்கான அரசின் மொத்த வருமானம் 1, 280 பில்லியன் ரூபாவாக இருக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால் உத்தேச செலவினமோ 2, 520 பில்லியன் ரூபாவாக - அண்ணளவாக- இரட்டிப்பு மடங்காக உயர்ந்து நிற்கிறது.

அதாவது, துண்டுவிழும் தொகை 1, 240 பில்லியன் ரூபாவாக இருக்கும். அதனை அரசு எவ்வாறு ஈடுசெய்யப்போகிறது? மக்களுக்கு வெளிப்படுத்தாமலே பல்வேறு வழிமுறைகளால் அவர்களிடமிருந்து பிறாண்டிக் கொள்வதனை விட வேறெதுவும் செய்ய வாய்ப்பில்லை.

இப்போதே, உணவுப் பொருள்கள் உட்பட பாவனைப் பொருள்களுக்கு அடிக்கடி விலைகளை உயர்த்தி வரும் அரசு, அடுத்த வருடத்தில் குறைந்தது வாரத்துக்கு ஒரு தடவை என்ற விதத்தில் விலை உயர்வுகளை மக்கள் தலைகள் மீது சுமையாக்கும் என்று எதிர்பார்ப்பது தப்பன்று.

அரச துறைப் பணியாளர்களுக்கும், அரச ஓய்வூதியர்களுக்கும் அரசின் வரவு- செலவுத் திட்டம் மிகப்பெரும் ஏமாற்றத்தையும் விரக்தியையும் உண்டாக்கியுள்ளது. அவர்களது சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அடிப்படைச் சம்பளத்தின் 5 சதவீதத்தாலேயே உயர்த்தப்பட்டுள்ளன. சோறு கேட்டவனுக்கு வெறும் கீரையைக் கொடுத்தது போன்ற நிலை இது.

நாட்டின் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நிவாரணங்கள் அல்லது மானிய உதவிகள் குறித்து வரவு- செலவுத் திட்டத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அடிமட்ட மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் அரசுக்கு அக்கறை எதுவும் இல்லை என்பதனை இது அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது.

எதிர்கால இலங்கையின் தூண்களாக விளங்கப் போகின்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தனக்கு அக்கறை இல்லை என்பதனை அரசு மீண்டும் ஒரு தடவை அப்பட்டமாகத் தொட்டுக் காட்டியுள்ளது. உயர்கல்வி- பல்கலைக்கழகக் கல்வி- நாட்டின் பல்துறை வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று நாம் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

அது தொடர்பில், பல்கலைக்கழகக் கல்விக்கு தேசிய உற்பத்தியில் இருந்து ஆகக்குறைந்தது 6 சதவீத நிதியை ஒதுக்க வேண்டும் என்று கோரி பல்கலைக்கழக ஆசான்கள் சுமார் மூன்று மாதங்களுக்கு மேலாகப் போராட்டம் நடத்தினர். அதனால் உயர்கல்வி மாணவர்களின் கல்வி அத்தனை மாதங்களும் இடைவெளி கண்டு பாதிப்பு உண்டானது. அதன் பின்னரும் கல்வித் துறைக்கு தேசிய உற்பத்தியில் 4.1 சதவீதத்தையே வரவு- செலவுத் திட்டத்தில் அரசு ஒதுக்கியுள்ளது!

மேலும், போர் முடிவுற்ற பின்னரும், நாட்டின் வரவு- செலவுத் திட்டத்தில் ஏனைய பிரதான அமைச்சுக்களை விட பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக நிதி இந்த அரசினால் ஒதுக்கப்பட்டு வருகிறது.

அதே வரிசையில், இம்முறையும் ஆகக் கூடிய நிதி ஒதுக்கீடு பாதுகாப்பு அமைச்சுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது என்பது மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு, கிழக்கு அபிவிருத்தியும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் வரவு- செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் அவர்களின் புனர்வாழ்வு நலத்திட்டங்கள், வீடமைப்பு மற்றும் புனர்நிர்மாணத் திட்டங்களுக்கு ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. யானைப் பசிக்குச் சோளப்பொரி போட்டது போன்று என்றே அதனைக் குறிப்பிடலாம்.

அதேவேளை, போருக்குத் துணைபுரிந்த படையினருக்கு வீடமைப்பு வசதி செய்து கொடுப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது அரசு. ஆனால் போரினால் பாதிக்கப்பட்டு, அந்தப் பாதிப்புகளில் இருந்து இன்னமும் மீளமுடியாதிருக்கும் தமிழ் மக்களுக்கு உதவுவதற்கான எவ்வித அசுகைதானும் தென்படவில்லை.

போர் முடிவுற்று விட்டாலும், படை பலத்தைப் பெருக்கிக் கொண்டே இருப்போம். நாட்டில் ஏனைய துறைகள் நலிந்து போனாலும் பரவாயில்லை. விலை உயர்வுகளால் பட்டினிச் சாவுகள் வந்தாலும் கூட நாட்டின் பாதுகாப்பு என்ற வகையில் படையினரையே தோளில் தூக்கி வைத்திருப்போம்.

வேண்டுமானால், தமிழர் பிரதேசங்களுக்கு, தமிழர்களுக்கு அனைத்துலகத்துக்குக் காட்டுவதற்காக, அதனுடன் வாதாடுவதற்காக அடையாள ஒதுக்கீட்டைச் செய்வோம் என்ற தொனியில் அரசு பேசுகிறது; இனியும் அந்த வழியே செல்லும் என்பதனை, மஹிந்த அரசு தனது எட்டாவது வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் எடுத்தியம்பி உள்ளது. அந்த வகையில் எதனைச்சொல்ல...? கந்தறு கோலம் காட்டும் வரவு- செலவுத் திட்டம் என்று கொள்வதை விட வேறேது பொருத்தம்...?

# கிராம முன்னணிப் பாடசாலைகளிலும் மாணவரின் அனுமதியில் கட்டுப்பாடு

## நகரப் பகுதிக்கு மாணவர் செல்ல இதுவும் காரணமாம்

யாழ்ப்பாணம்,நவ.10

கிராமப் புறங்களில் உள்ள முன்னணிப் பாடசாலைகளிலும் மாணவர் அனுமதியில் கட்டுப்பாடு நிலவுகிறது. இதன் காரணமாகக் கிராமப்புற மாணவர்கள் நகரத்தை நாட வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய அவல நிலைமைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் உள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைகளில் அனுமதி வழங்குவதில் கல்வித் திணைக்களம் பாடசாலைக்குப் பாடசாலை மாறுபட்ட ரீதியில் நடைமுறைகளைப் பின்பற்றுகிறது. இதனால் பெற்றோர் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கூட்டத்தில் கலந்து கொண்டோர் சுட்டிக்காட்டினர்.

இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மேற்கண்ட விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்காது தடைசெய்யப்படுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

வசதிபடைத்தோர் நகரப் பாடசாலைகளை நாடுகின்ற போதும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோரின் பிள்ளைகள் பெரும் அசௌகரியம் அடைகின்றனர்.

கிராமப்புறங்களில் உள்ள குறிப்பிட்ட முன்னணிப் பாடசாலைகளுக்கு வசதிகளை வழங்குவதை விடுத்து பின் தங்கி நிற்கும் பாடசாலைகளுக்கும் ஆசிரியர் மற்றும் பௌதிக வளங்களை வழங்க வேண்டும்.

பின்தங்கிய பாடசாலைகளை வளமாக்க வேண்டும். இதன் மூலம் நகரப் பகுதிகளை நோக்கி மாணவர்கள் செல்வது தடுக்கப்படும். மாணவர் அயல் பாடசாலைகளில் கல்வி கற்க வழி ஏற்படும்- என்று நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (ம-68)

# காணாமற்போனோர் குறித்து மூன்று பிரிவுகளாக விசாரணை

## மனித உரிமைகள் ஆணைக்குழு தகவல்

யாழ்ப்பாணம்,நவ.10

2006 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் காணாமற் போனவர்களை 3 பிரிவுகளாகப் பிரித்து விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

காணாமற்போனவர்கள் தொடர்பில் இலங்கை அரசு உரிய விசாரணைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று தொடர்ச்சியாக சர்வதேச அமைப்புக்கள் இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றன.

2006 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் கடத்திச் செல்லப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பில் 590 முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இவர்களில் 128 பேர் மட்டும் வீடு திரும்பியுள்ளனர். எஞ்சிய 462 பேரில் 272 பேர் வீடு திரும்பவில்லை என்று அவர்களது உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

எஞ்சிய 190 பேர் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

காணாமற்போனவர்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கொழும்பு அலுவலகத்தினர் யாழ்ப்பாணத்தில் வந்து காணாமற்போனவர்களின் உறவினர்களிடம் விசாரணை மேற்கொண்டனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் காணாமற்போனவர்கள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போனவர்கள், இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போனவர்கள், துணை ஆயுதக் குழுக்களால் கடத்திச் செல்லப்பட்டு காணாமற்போனவர்கள் என்று 3 வகையாகப் பிரித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-5)

# சைவத் திருமுறை விழாவும் சமய செயற்பாட்டு பரிசளிப்பும்

வலி.தென்மேற்கு,நவ.10

ஆனைக்கோட்டை, இந்து சமய விருத்திச் சங்கத்தின் சைவத் திருமுறை விழாவும் சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஆசியுரையை மூத்த நயினார் ஆலய குருக்கள் சிவஸ்ரீ க.கிருஷ்னேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார். இளைப்பாறிய உப அதிபர் க.கதிரேசு வாழ்த்துரையை வழங்குவார். இந்து சமய விருத்திச் சங்கத்தைச் சேர்ந்த இ.சரவணபவன் வரவேற்புரையை வழங்குவார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஷ்னானந்தன் ஆகியோர் சிறப்புரை வழங்குவர்.

காலை 8.30 மணிக்கு மூத்த நயினார் கோயிலில் நடைபெறும் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு ஆலயத்திலிருந்து திருமுறைச் சுவடிகளும் சைவ சமய குரவர்களின் திருவுருவப் படங்களும் வீதிவலமாக விழா மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்படும். மாணவர்களின் பண்ணிசையும் இடம்பெறும். (ம-115-100)

# கொழும்புத்துறையில் பஸ் தரிப்பிடம்

கொழும்புத்துறை, நவ.10

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பஸ் போக்குவரத்து மார்க்கத்திலுள்ள பயணிகளின் நன்மை கருதி கொழும்புத்துறையில் புதிய பஸ் தரிப்பிடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் உதவி அதிபராக கடமையாற்றிய அமரர் ந.பரமேஸ்வரியின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தால் இந்த பஸ் தரிப்பிடம் அன்பளிப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

சமூகப் பிரமுகர் செ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதம முகாமையாளர் எஸ்.ஏ.அஸ்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பஸ்தரிப்பிடத்தை திறந்து வைத்தார். (ம-135)

# மட்டுப்படுத்தப்பட்டுள்ள சேவையால் பயணிகள் பெரும் நெருக்கடியில்

தென்மராட்சி, நவ.10


சாவகச்சேரி கனகம்புளியடி சந்தி யூடாக சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் இ.போ.ச. பஸ் மற்றும் தனியார் மினிபஸ் சேவைகள் அனைத்தும் தினமும் காலை 7 மணி தொடக்கம் 7.30 மணிக்குள் சென்று விடுகின்றன. இதன் பின்னரும் அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் தமது பணிகளுக்கு உரிய நேரத்துக்குச் செல்ல முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

754, 775 மார்க்க பயணிகள் வாகனங்கள் காலை 7மணிக்கும் 7.30 மணிக்கும் இடையில் சாவகச்சேரிக்கு சென்று விடுகின்றன. கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் 794 மார்க்க பஸ் சேவை காலை 7 மணிக்கு வந்து செல்கின்றது. இதனால் அரச உத்தியோகத்தர்களும் மாணவர்களும் பஸ் சேவைகளின்றி சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

அடுத்த பயணிகள் சேவை முற்பகல் 10.30 மணிக்குப் பின்னரே கனகம்புளியடி சந்திக்கு வருவதால் தாமதமாக வரும் உத்தியோகத்தர்கள் , மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உரிய நேரத்துக்கு தமது வேலைகளுக்குச் செல்ல முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்த மார்க்கங்களில் ஒரு இ.போ.ச. பஸ்ஸும் ஒரு மினிபஸ்ஸும் சேவையில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளம் ரயில் நிலைய வேலைகள் துரித கதியில்



துணுக்காய்,நவ.10

மாங்குளம் ரயில் நிலையத்தை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த 1991 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போரினால் மாங்குளம் ரயில் நிலையம் முற்றாகச் சேதமடைந்தது. அதற்குப் பின்னர் தற்போது அதனை மீளவும் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது மழைக்கு மத்தியிலும் ரயில் நிலையத்தை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாங்குளம் ஒரு மையமான இடத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்து கிழக்குப் பக்கமாக முல்லைத்தீவுக்கும், மேற்குப் பக்கமாக மல்லாவி, துணுக்காய், வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளுக்கும் செல்ல முடியும்.

இங்கிருந்து ரயில் சேவைகள் இடம்பெறுமாயின் நாட்டின் தென்பகுதிக்கும், வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்துக்கும் இங்குள்ள மக்கள் சிரமமில்லாது பயணிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாங்குளத்தில் இன்னமும் சீரான வகையில் அமைக்கப்படாத மலசலகூடங்கள், பஸ் தரிப்பிடங்கள் ஆகியவற்றை அமைப்பதன் மூலமாக இங்கு வரும் மக்களின் சிரமங்களைக் குறைக்க முடியுமெனப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(க-415)

### புதுக்குடியிருப்புக் கோட்டத்தில்

# முழுமையாக அழிவடைந்த 3 பாடசாலைக் கட்டடங்கள்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மந்துவில் அரசரட்ணம் மகாவித்தியாலயம், ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை, வேணாவில் அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளினதும் நிரந்தரக் கட்டடங்கள் முழுமையாக அழிவடைந்து கற்குவியல்களாகக் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்தில் உள்ள 22 பாடசாலைகளும் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகளில் சுமார் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலையின் சகல கட்டடங்களும் அழிக்கப்பட்டு கற்குவியல்களாக குவிந்துகிடக்கின்றன.

இதைப் போன்று மந்துவில் அரசரட்ணம் மகா வித்தியாலயம், வேணாவில் அ.த.க.பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளின் நிரந்தரக் கட்டடங்களும் இறுதிப் போரின் போது முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. தற்போது மேற்படி மூன்று பாடசாலைகளும் நிரந்தரக் கட்டடங்கள் இன்றி தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

### மாற்று ஆற்றல் உடையோருக்கான மருத்துவ பரிசோதனை இனிமேல் வெள்ளிக்கிழமைகளில்

# கிளிநொச்சி வைத்தியசாலையில்

கிளிநொச்சி,நவ.10

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் மாற்று ஆற்றல் உடையோருக்கான மருத்துவப் பரிசோதனை இனிமேல் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்று ஆற்றல் உடைய கிளிநொச்சி மாவட்ட மக்கள் மாவட்ட சமூக சேவைகள் பிரிவு மற்றும் புனர்வாழ்வுப் பிரிவு ஆகியவற்றில் உதவிகள் பெறுவதற்கு வைத்திய அதிகாரியின் மருத்துவ சான்றிதழ் பெறுவது அவசியமாகிறது. மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்குத் தினமும் மாற்று ஆற்றல் உடையவர்கள் வைத்தியசாலைக்கு வருவதால் இவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியதையடுத்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகள் தோறும் காலை 8.30 மணி தொடக்கம் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும் எனவும் மாவட்டத்தில் உள்ள மாற்று ஆற்றல் உடையவர்கள் வெள்ளிக்கிழமைகளில் மருத்துமனைக்கு வருகை தந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

**ஒவ்வொரு வெள்ளிக் கிழமை தோறும் காலை 8.30மணிக்கு ஆரம்பம்.**

# துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையில்

### தடுப்பதற்கான முயற்சிகள் தீவிரம்

அக்கராயன்,நவ.10

துணுக்காய் அம்பலப் பெருமாள்குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையிலுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அம்பலப்பெருமாள் குளம் துணுக்காய்ப் பிரதேசத்தின் முக்கிய குளமாக விளங்கி வருகின்றது. இதன் நீர்க் கொள்ளளவு 9 அடியாகும். இந்த நிலையில் இங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், குளத்துக்கு நீர் வரத்து தொடர்ந்து இடம் பெறுவதாலும் குளம் நிரம்பியதுடன் மேலதிக நீர் வான் பாய்கின்றது.

மழை காரணமாக குளத்தின் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. மேலும் புனரமைப்புப் பணிகளின் போது குளத்தின் உட்பகுதியில் இயந்திரத்தின் மூலமாக வெட்டும் பணிகளும் இடம்பெற்றிருந்தன.

தற்போது குளம் உடைப்பெடுக்கலாம் என்பதால் அதனைத் தடுக்கும் பொருட்டு மண் மூடைகளால் அணைக்கட்டைப் பாதுகாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. சுமார் 30 க்கு மேற்பட்ட விவசாயிகளும், நீர்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களும் மண் மூடைகளைத் தயாரித்து அடுக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் குளத்தின் கீழ் சுமார் 100 விவசாயிகளால் 623 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குளம் உடைப்பெடுக்குமாயின் இந்த நெற்செய்கை யாவும் அழிவடைவதுடன் சில குடும்பங்களும் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

காலபோகச் செய்கைக்கான கூட்டம் இடம்பெற்ற போது குளத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக விவசாய அமைப்புக்கள் எடுத்துக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-18)



மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பொலிஸாரின் அணிவகுப்பை அந்த மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.டி.தளுவத்த ஏற்றுக் கொள்கின்றார். (க-415)

# உடும்புகளுடன் நால்வர் கைது

வவுனியா கல்மடுப் பகுதியில் உடும்புகளை வைத்திருந்த நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் சட்டவிரோதமான வகையில் உடும்புகளைப் பிடித்து வாகனமொன்றில் கொண்டு செல்லும்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் பொலிஸார் இவர்களது வாகனத்தைச் சோதனையிட்ட போது ஐந்து உடும்புகளை இவர்கள் பிடித்து வைத்திருந்தமை தெரியவந்தது.

(க-86)

# நிரந்தரக் காணிகளை வழங்குமாறு ஒன்பதுக்கும் மேற்பட்ட மனுக்கள்

### சின்னப் பல்லவராயன்கட்டு பொது அமைப்புக்கள் அனுப்பி வைத்தன

அக்கராயன்,நவ.10

கிளிநொச்சி சின்னப் பல்லவராயன்கட்டுப் பகுதியில் வசிக்கும் சுமார் 52 குடும்பங்கள் தமக்கு நிரந்தரக் காணிகளை வழங்குமாறு கோரி சுமார் ஒன்பதுக்கும் மேற்பட்ட மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளித்துள்ளதாக இங்குள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி சின்னப் பல்லவராயன் கட்டுப் பகுதியில் சுமார் 52 குடும்பங்கள் சொந்தக் காணிகளில்லாததால் தனியார் காணிகளில் வசித்து வருகின்றன. இதனால் தமக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் அண்மையில் பெய்த மழையினால் இப்பகுதியில் உள்ள 15 வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் இந்தக் குடும்பங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

மேலும் இந்த 52 குடும்பங்களும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தனியார் காணிகளிலேயே வசித்து வருகின்றன.

இந்த நிலையில் இந்தப் பகுதியில் தமக்கு காணிகளை வழங்குமாறு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கமக்கார அமைப்பு உள்ளிட்ட பொது அமைப்புக்கள் இணைந்து மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர், நாடாளுமன்ற உறுப்பினர், காணி ஆணையாளர் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு மனுக்களை அனுப்பி வைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

# நங்கூரமிடப்பட்டிருந்த மீனவரின் படகை மோதிச் சிதறடித்தது கடற்படைப் படகு

### மன்னார் - தாழ்வுபாடு கடலில் சம்பவம்

மன்னார்,நவ.10

மீனவர் படகுடன் கடற்படையினரின் ரோந்துப் படகு மோதியதில் படகு உடைந்ததுடன் மீனவர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த மீனவரான 56 வயதான ஏ.ரி.மெரிண்டா இந்தச் சம்பவம் தொடர்பாக விவரித்ததாவது:-

நானும் எனது மகன் எஸ்.மெராண்டா (வயது-29) ஆகிய இருவரும் ஒரு கண்ணாடி இழைப்படகில் வியாழக்கிழமை மாலை, இரவு நேர தங்கு தொழிலுக்காக தாழ்வுபாடு கடற்பகுதியூடாக கடலுக்குச் சென்றோம்.

கடலில் வலைகளை போட்டு விட்டு தாழ்வுபாட்டு கடற்கரையில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலையில் உள்ள கடற்பரப்பில் எமது படகை நங்கூரமிட்ட பின்னர் சமிஞ்ஞை ஒளியை ஏற்றிவிட்டு படகில் உறங்கிக்கொண்டிருந்தோம்.

இதன் போது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அப்பகுதியூடாக அதிவேக சக்தி கொண்ட கண்ணாடியிழைப் படகில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் வேகமாக வந்து [illegible] மோதி விட்டு நிற்காது சென்று விட்டனர்.

இதன் போது எங்களுடைய படகு இரண்டாக உடைந்து நீரில் கவிழ்ந்து மிதந்து கொண்டிருந்தது. படகின் [illegible]பகுதியிலான வெளி இணைப்பு இயந்திரம் கடலில் விழுந்து விட்டது. இதன் போது நான் காயங்களுக்கு இலக்கானேன். எனது மகனுக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. பின் இருவரும் உடைந்து மிதந்துகொண்டிருந்த படகின் மீது ஏறி இருந்து அபாயக்குரல் எழுப்பினோம். ஆனால் யாரும் வரவில்லை.



நீண்ட நேரத்துக்குப் பின்னர் காலைவேளையில் தொழிலுக்கு வந்த எமது சக மீனவர்கள் எம்மை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்தனர். மேலும் காயமடைந்த என்னை மன்னார் வைத்தியசாலையில் நேற்றுக் காலை அனுமதித்தனர் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக கடற்படைத் தலைமையகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திய போது உரிய பதிலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம்மா சபாபதிப்பிள்ளை



சாரையடி, புலோலி தென்மேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சபாபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (08.11.2012) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெயக்கொடி, ஜெயபாலன், ஜெயமணி மற்றும் ஜெயலட்சுமி, காலஞ்சென்ற ஜெயசோதி மற்றும் ஜெயராணி (கனடா), ஜெயதேவன் (கனடா), இராமகிருஸ்னன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தநாயகி, ஜெகதேவன் (புலோலி ப.நோ.கூ.சங்க உபதலைவர், கால்நடைச்சங்க உப தலைவர்), சரஸ்வதி (கனடா), விஜயரட்ணம் (கனடா), விஸ்ணு வைதேகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், நகுலன் - அனித்தா (லண்டன்), சங்கீதா - சுதேஸ்காந் (கனடா), கிருஜா (கனடா), துலக்ஷன் (கனடா), நவீன் (கனடா), லாவண்யா (கனடா), சிந்துஜா (கனடா), கீர்த்தனா, சகாணா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (12.11.2012) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் (பருத்தித்துறை) இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.ஜெகதேவன் (மருமகன்)
(உப தலைவர்,
புலோலி ப.நோ.கூ.சங்கம்)

சாரையடி,
புலோலி தென் மேற்கு,
புலோலி பருத்தித்துறை.

(சி/4758)(3.14)

# சங்கிலி அறுக்கும் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், நவ.10

முகவரி விசாரிப்பது போன்று பாசாங்கு செய்து பெண் ஒருவரிடமிருந்து சங்கிலி அறுக்க முற்பட்டவர்கள் அது வெற்றியளிக்காததால் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடினர்.

இந்தச் சம்பவம் சுழிபுரம் வழக்கம்பரையில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்றது.

வலி.மேற்கு பிரதேசசபையில் முகாமைத்துவ உதவியாளராக இருக்கும் பெண் ஒருவரிடமிருந்தே சங்கிலி அறுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரஸ்தாப பெண் தனது அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது 2 சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளில் அவரைப் பின் தொடர்ந்துள்ளனர். சந்தியொன்றை அண்மித்ததும் அவரை முன் மறித்து நின்றது மோட்டார் சைக்கிள்.

அதிலிருந்து இறங்கிய ஒருவர் தனது கையால் சுட்டிக்காட்டி முகவரி விசாரிப்பது போன்று பாசாங்கு செய்து பிரஸ்தாப பெண்ணை நெருங்கினார்.

அவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட பிரஸ்தாப பெண் தனது கழுத்திலிருந்த சங்கிலியை ஒரு கையால் பற்றிப் பிடித்துக் கொண்டார்.

அவரை நெருங்கிய சந்தேக நபர் பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்து இழுத்துக் கொண்டு ஓட முற்பட்டார். எனினும் பிரஸ்தாப பெண் தனது சங்கிலியைப் பற்றிப் பிடித்தவாறு திருடன் என்று கூச்சலிடவே அருகிலிருந்தவர்கள் விரைந்து சந்தேக நபரைப் பிடிப்பதற்கு முன்னர் அறுத்த சங்கிலியைப் பறிப்பதை விடுத்து மோட்டார் சைக்கிளில் இரண்டு சந்தேக நபர்களும் தப்பி ஓடி விட்டனர். எனினும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை அங்கு நின்றவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டனர்.

(த-4)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து தியாகராஜா



நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து தியாகராஜா நேற்று (09.11.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து -சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வெங்கையா தனலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் மஞ்சுளா, காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் தந்தையும், விஜயச்சந்திரன், விமலாதேவி (லண்டன்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதிஅம்மா, நடராசா மற்றும் இலட்சுமிப்பிள்ளை (பிரான்ஸ்), லோக நாதன் ஆகியோரின் சகோதரனும், சதீதர், சரூபர் (லண்டன்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மகாலிங்கம், தர்மலிங்கம், சுந்தரலிங்கம் (மேலதிக பணிப்பாளர் தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), லோகேஸ்வரி, தனபாலசிங்கம், குணபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2012) சனிக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்துமயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(25217)(9.14)

# மரண அறிவித்தல்

## தேவரத்னலிங்கம் பொன்மணி



செல்வச்சந்நிதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவரத்னலிங்கம் பொன்மணி அம்மா கடந்த (05.11.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசாஐயர் - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், தேவரத்னலிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் கனகேந்திரன், காலஞ்சென்ற ரவீந்திரன், குகனேந்திராஜயர், அகிலேந்திராஜயர், இரத்தினவதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கவிதா, சுகிதா, செந்தீபன், அனிதா ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீகதிர்காமநாதன், ரவீந்திரன், தமயந்தி, காலஞ்சென்ற கஜேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீவாணி, ராகவி, ஸ்ரீபவன், மயூரதி, தீபிகா, சுதர்சினி, கிருஸ்னேந்திரன், சுஜீபன், நிரூபன், பிரணவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு 3ஆம் சந்தி, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறில் உள்ள குகா ஐயரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் சந்தி, கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/4759)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியியல் கற்கைநெறி
**CBF வகுப்புகள்**
தனிப்பட்ட முறையில்
கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு- 0773586563


# 20 மில்லியன் இருந்தும் பால வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை

அக்கராயன்,நவ.10

பாலமொன்றின் புனரமைப்புக்கென 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி யூனியன்குளம் பாலத்துக்கே இந்தக் கதி நேர்ந்துள்ளது.

இந்தப் பாலம் புனரமைக்கப்படாமையால் கோணாவில் கிழக்கு, மத்தி, யூனியன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1200க்கு மேற்பட்ட குடும் பங்கள் அக்கராயன் மருத்துவமனைக்கு வரு வதற்குரிய போக்குவரத்து வசதிகளை இழந்துள்ளதுடன் தினமும் 6 கிலோமீற்றர் வரையான தூரத்தை நடந்து கடக்க வேண்டிய அவல நிலையிலும் காணப்படுகின்றனர்.

போர் இடம்பெற்ற காலங்களின்போது பெரும் இடர்களுக்கு மத்தியில் இந்தப் பாலம் ஊடாக மக்கள் போக்குவரத்துச் செய்ததுடன் பஸ் சேவையும் இடம்பெற்று வந்தது.

தற்போது மீள்குடியமர்வு இடம்பெற்று மூன்று ஆண்டுகள் நெருங்கும் நிலையில் இந்தப் பாலம் புனரமைக்கப்படாமையால் அக்கராயன் கிழக்கு, அமைதிபுரம், யூனியன்குளம், கோணாவில், காந்திக் கிராமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் இந்தப் பாலத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டபோதிலும் புனரமைப்புப் பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. இதேவேளை கோணாவில் கிராமத்தின் மத்திய பகுதியூடாக பஸ் சேவையை நடத்துமாறு இந்தக் கிராம மக்கள் நீண்ட நாள்களாகவே கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தற்போது இடம்பெறும் போக்குவரத்துச் சேவைகள் கோணாவில் கிராமத்தின் எல்லைப் புறமாக இடம்பெறுவதால் கிரா மத்தின் மத்திய பகுதியிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று பஸ்ஸைப் பிடிக்க வேண்டியுள்ளதாக இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-18)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ரஞ்சனி தியாகராஜா
*(கைதடி அரச சிறுவர் இல்லத்தில் பணிபுரிபவர்)*



நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சினி தியாகராஜா கடந்த (07.11.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கெங்காதரம் (ஆட்ஸ் மாஸ்ரர்) இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், தியாகராஜாவின் அன்பு மனைவியும், கம்சா, கௌதமன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற காங்கேசன் மற்றும் கமலாசனி, ஈசுவரி, லோகேஸ்வீரி, பூங்கோதை (பிரான்ஸ்), கலாவதி, சிவகுமார் (கனடா), தயாளன், விமலன் (பாரின்), அம்பிகை, அம்பிகைபாகன் (லண்டன்), மங்களம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**14, மூத்தவிநாயகர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
(25139)(9.14)
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## யோன் ஜோட்ஜ் அந்திரேஸ்பிள்ளை



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், மவுண்ட் லவேணியா கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோன் ஜோட்ஜ் நேற்று முன்தினம் (08.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி றூபி யோன் ஜோட்ஜ் இன் (இளைப் பாறிய ஆசிரியர், யா/திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான அந்திரேஸ்பிள்ளை -கிறிஸ்ரின் தம்பதி யரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஸ்கொலஸ்ரிக்கா, அந்தோனிப்பிள்ளை, மேரிகிளாறா, பிரான்சிஸ், யோன் பப்ரிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருட்சகோதரி வேபியஸ் (தி.கு, பாசையூர்), பிரான்சிஸ்சேவியர் (லண்டன்), ஸ்ரெல்லா றெஜினா ஆகியோரின் சகோதரனும், ரோய் அன்ரன் (ஆசிரியர்- கண்டி), றினி அனஸ்ரேசியா (ஆஸ்திரேலியா), நியன்சி அலன் (ஜேர்மனி), றமினி, அஞ்சலா (ஆசிரியை -கொழும்பு), அருட்தந்தை றெனோல் ஜோட்ஜ் (இந்தியா), றாகினி அனுஷா (ஆஸ்திரேலியா), றீவ்ஸ் அலெஸ்ரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.11.2012) சனிக்கிழமை ந.ப 12.00 மணியளவில் மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (12.11.2012) திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு புனித நீற்றம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மு.ப 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் புனித நீற்றா வீதியில் உள்ள புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Hana Road, Mt**
**Lavenia, Colombo.**
**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

# மன்னாரில் வீடுகள் கையளிப்பு

மன்னார்,நவ.10

மன்னாரில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்குப் புதிய வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆண்டு தோறும் இரண்டு அங்கத்தவர்கள் தெரிவு செய் யப்பட்டு அவர்களுக்குப் புதிய வீடுகளை அமைத்து வழங்குவது வழக்கமாக உள்ளது.

இந்த ஆண்டும் மன்னார் கிழக்குப் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான எம். அருளப்பு தலை மையில் இடம்பெறவுள்ள இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் மன்னார் அரச அதிபர் ஜே.ஏ.சரத் ரவீந்திர முதன்மை விருந்தி னராகக் கலந்து கொள்கிறார். (க-12)

# பளையில் இருந்து கடத்தப்பட்ட மாடுகள் கொடிகாமத்தில் பிடிபட்டன

வடமராட்சி,நவ.10

பளையில் இருந்து முகமாலையூடாக யாழ்ப்பாணத்துக்கு 5 மாடுகளை கடத்தி வந்த ஐவர் நெல்லியடிப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

மாடுகளை கடத்தி வந்த சிறிய ரக வாகனம் கொடிகாமம் வந்தவேளை முள்ளிச் சேதனைச் சாவடியில் குறித்த வாகனம் பொலிஸாரால் சோதனையிடப்பட்டது.

சோதனையின் போது வாகனத்தில் சட்டவிரோதமான முறையில் மாடுகள் கடத்திச் செல்லப்படுவது கண்டுபிடிக்கப் பட்டது.

இதனையடுத்து மாடுகளைக் கடத்தி வந்த ஐவரையும் கைது செய்த பொலிஸார் வாக னத்தையும் மாடுகளையும் நெல்லியடிப் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-16-8)


வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
சந்தைகள், கருவாட்டுக்கடை, இறைச்சிக்கடை கள் கேள்வி

**அறிவித்தல் - 2013**

08.11.2012 ஆம் திகதிய பத்திரிகையில் வெளியான கேள்வி அறிவித்தலின் நிபந்தனை இல. 02 , 11 பின்வருமாறு மாற்றம் செய்யப்படுகின்றது.

இல. 02
சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக் கொள்ள விரும்புவோர்(கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப் பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் ரூபா 200 000.00 இக்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கிப் புத்தகம் அல்லது வைப்புச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வங்கிப் புத்தகம் / வைப்புச் சான்றிதழ் கேள்வி திறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்ளகிப் புத்தகம் / வைப்புச் சான்றிதழ் கேள்வித் தொகையின் 1/3 பகுதி செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.

இல.11
சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத் திற்காகக் கொண்டு வரும் பொருள்களின் விற்பனை விலையில் 4% உம் ஏனைய வரி அறவீடுகள் ஏற்கனவே சொல்லப்பட்ட நிபந்தனைக்கு அமைவாகவும் அறவிடலாம்.

திருமதி நா.ஐங்கரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

தலைமை அலுவலகம்
வலிகாமம் மேற்கு பிரதேச்சபை,
சுழிபுரம்.
10.11.2012


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், கலைப்பீட பொருளியல் துறைத் தலைவருமான பேராசிரியர் **செ.இளங்குமரன்** அவர்களின் அன்புத் தந்தை **கந்தையா செல்லையா** (ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர்) அவர்கள் 08.11.2012 காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கும், ஏனையோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி

பொருளியல் துறைத் தலைவரான பேராசிரியர் **செ.இளங்குமரன்** அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா செல்லையா** (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கள் 08.11.2012 காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், ஏனை யோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பேராசிரியர், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், இளம் பொருளியலாளர் மன்றத்தினர்**
**பொருளியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்
இரண்டாம் மொழி ஆங்கில பாட
அலகுக்கான விசேட

**பரீட்சைகள் - 2011**

★ கலைப்பீடத்தில் கலைமாணி மற்றும் நுண் கலைமாணிப் பட்ட நெறியைப் பயின்று இரண்டாம் மொழி ஆங்கிலப் பாட அலகில் மட்டும் சித்தியடை யத்தவறியதால் தமது பட்டப்படிப்பை இதுவரை பூர்த்தி செய்யாத மாணவர்கள் தமது பரீட்சையைப் பூர்த்தி செய்ய உதவும் முகமாக விசேட பரீட்சையை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அவ்வாறான மாணவர்கள் தமது பரீட்சை விண்ணப்பங்களை 06.11.2012 திகதியிலிருந்து 16.11.2012 திகதிவரை கலைப்பீடாதிபதி அலுவலகத் தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

01. முதலாம் வருட முதலாம் அரை ஆண்டுப் (விசேட) பரீட்சைகள்
02. முதலாம் வருட இரண்டாம் அரை ஆண்டுப் (விசேட) பரீட்சைகள்
03. இரண்டாம் வருட முதலாம் அரை ஆண்டுப் (விசேட) பரீட்சைகள்
04. இரண்டாம் வருட இரண்டாம் அரை ஆண்டுப் (விசேட) பரீட்சைகள்
05. மூன்றாம் வருட முதலாம் அரை ஆண்டுப் (விசேட) பரீட்சைகள்
06. மூன்றாம் வருட இரண்டாம் அரை ஆண்டுப் (விசேட) பரீட்சைகள்

★ விண்ணப்பப்படிவங்களைக் கலைப்பீடாதிபதி அலுவ லகத்திலிருந்து பெற்று, ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
(f/4749) (2-6)



உ
சிவமயம்

அகில இலங்கை இந்து
**மாமன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம்**

மேற்படி கூட்டம் நிகழும் நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள் 17 ஆம் நாள் (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் மாமன்றத்தின் தலைமையகத்தில் நடைபெறும்.

மாமன்றத்தின் அங்கத்தவர்களுக்கும், கௌரவ உறுப்பினர்களுக்கும், பதிவு செய்யப் பட்ட புதிய பேராளர்களுக்கும் கூட்ட அறிவித்தல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. புதிய பேராளர்களாகப் பதிவு செய்யாத அங்கத்துவ சங்கங்கள் உடனடியாக மாமன்றத் தலைமை யகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி 011 2434990

**- செயலாளர்.**
(f/4743) (2-6)



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவில் பாதுகாப்பற்ற கிணறுகளுக்கு ஒரு வாரத்துக்குள் பாதுகாப்பு மதில்

## அமைக்கத் தவறினால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.10

தீவுப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற கிணறுகளுக்குப் பாதுகாப்பு மதில், எல்லை வேலிகள் ஒரு வாரத்துக்குள் அமைக்க வேண்டும். தவறினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.எம்.மகேந்திரராஜா இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர் பிரதேச செயலகர்களுடன் ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தில் வியாழக்கிழமை தீவுப்பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற கிணறுகள் தொடர்பாக உரையாடிய போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

**நான்கு பிள்ளைகள் பாதுகாப்பற்ற கிணறுகளால் இறந்துள்ளனர். இது போன்ற சம்பவங்கள் நிகழாதவாறு உடனடி யாகப் பாதுகாப்பற்ற கிணறுகளுக்குச் சுற்றுமதில் மற்றும் பாதுகாப்பு வேலிகளை அமைக்க வேண்டும்.**

நான்கு பிள்ளைகள் பாதுகாப்பற்ற கிணறுகளால் இறந்துள்ளனர்.

இது போன்ற சம்பவங்கள் நிகழாதவாறு உடனடியாகப் பாதுகாப்பற்ற கிணறுகளுக்குச் சுற்றுமதில் மற்றும் பாதுகாப்பு வேலிகளை அமைக்க வேண்டும்.

கிராம அலுவலர்களூடாக அந்தந்தப் பகுதிகளில் ஒரு வாரத்துக்குள் அவை செய்து முடிக்கப்பட வேண்டும் என்று பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பாவனையற்ற, கைவிடப்பட்ட பொதுக்' கிணறுகளை மூடி விடுவது குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

குடியிருப்பாளர்கள் இல்லாத வீடுகளில் உள்ள கிணறுகள் தொடர்பாகப் பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுத்துப் பாதுகாப்பு வேலிகளை அமைக்கவேண்டும் என்றும் கூறப்பட்டது.

அதற்குரிய செலவை உரிய காணிக்காரர்கள், வீட்டுக்காரரிடம் அறவிடவும் தீர்மானிக்கப்பட்டது.

கிராம அலுவலர்கள் உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுத்து அதற்கான அறிக்கையைப் பிரதேச செயலர்களிடம் வழங்கவேண்டும். அவை உடனடியாக தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிவான் மகேந்திரராஜா பிரதேச செயலர்களிடம் தெரிவித்துள்ளார். (ம-7)

# பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு 2 கைத்தொழில் உபகரணங்கள்

## பரீட்சார்த்தத்துக்கு வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், நவ.10

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தால் 2 கைத்தொழில் உபகரணங்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காகப் பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்தி சபையினரின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் பனங்கழி பிரித்தெடுக்கும் இயந்திரம், பனாட்டு பதனிடும் இயந்திரம் ஆகிய இரண்டையும் வடிவமைத்து வழங்கியுள்ளது.

இந்த இரண்டு உபகரணங்களையும் செயற்பாட்டு ரீதியாகப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் ஆராய்ச்சி நிபுணர் மாலினி ரணதுங்க பனை ஆராய்ச்சி நிலையத்தில் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத்திடம் கையளித்துள்ளார்.

பனை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது பயன்படுத்தி வரும் பனங்கழி பிரித்தெடுக்கும் இயந்திரம் மூலம் 25 கிலோவை மட்டுமே பெற முடியும். வடிவமைத்துள்ள புதிய இயந்திரத்தால் ஒரு தடவையில் 75 கிலோ பனங்கழி பெறமுடியும் என்று கூறப் பட்டது.

பனாட்டுப் பதனிடுவதற்கான இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு 2 லட்சம் ரூபாவும், பனங்கழி பிரித்தெடுக்கும் இயந்திரத்துக்காக 3 லட்சம் ரூபா செலவாகும் என்று பனை அபிவிருத்தி சபையினர் தெரிவித்தனர். (ம-13)

# அனுமதியின்றி கடலட்டை பிடித்த 9 பேருக்கு பிணை

யாழ்ப்பாணம், நவ.10

அனுமதிப்பத்திரமின்றி இழுவைப்படகுகளைப் பயன்படுத்திக் கடலட்டை பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட 9 பேர் தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குருநகர் கடற்பரப்பில் வைத்தே சந்தேகநபர்கள் கடலட்டைகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மூன்று இழுவைப்படகுகளில் சென்ற 9 பேரும் கடலட்டைகளைப் பிடித்துள்ளனர். ஒவ்வொரு படகுகளிலும் தலா 3 பேர் வீதம் சென்றுள்ளனர். தொழில் செய்து திரும்பிய வேளை கடற்படையினரின் சோதனையின் போதே அனுமதிப் பத்திரம் இன்றிக் கடலட்டை பிடித்தது தெரியவந்தது.

இது தொடர்பாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற திணைக்களத்தினர் கடலட்டைகளை மீட்டனர். சந்தேக நபர்களான 9 பேரையும் யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் வியாழக்கிழமை முற்படுத்தினர்.

இதன்போது தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களிடம் இருந்த கடலட்டைகள் பழுதடைந்த காரணத்தால் அனைத்தையும் அழிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பான வழக்கு அடுத்தமாதம் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று பயன்படுத்தப்பட்ட 3 இழுவைப் படகுகளையும் அடுத்த மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் வரை கடற்படையின் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ம-13)



வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக சிறுவர், முதியோர், மாற்று ஆற்றல் உடையோர் தின விழா அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் பிரதேச செயலர் ந.கேதீஸ்வரன், பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ம-9)

# மலசலகூடம் அமைக்க நிதி

வலி.வடக்கு,நவ.10

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உடுப்பிட்டி இலகடி இராசலிங்கம் சனசமூக நிலைய மலசலகூட நிர்மாணத்துக்குப் பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சனசமூக நிலைய நிர்வாகத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

பன்முகப்படுத்திய வரவு செலவு திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-86)

# வரணி பிரதேச ஆஸ்பத்திரியில் ஆண், பெண் நோயாளர் விடுதி

## விரைவில் அமைக்கப்படும் என்று சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ.10

வரணி பிரதேச வைத்தியசாலையில் விரைவில் ஆண், பெண் நோயாளர்களுக்கான விடுதி அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வரணி பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக அண்மையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் சந்தித்துக் கலந்துரையாடிய போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★வைத்தியசாலைக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு காணிப் பற்றாக்குறை காணப்படுவதால் கொங்கிறீட் தூண் போட்டுக் கம்பி வேலி அமைத்துக் கொடுக்கப்படும். நுழைவாயில் தூண்கள் பரிசீலிக்கப்பட்டு திருத்தம் செய்ய ஆவன செய்யப்படும்.

**நிரந்தர வைத்தியர் நியமனம் தொடர்பில் புதிய நியமனங்கள் திணைக் களத்தால் வழங்கப்படும் போது நிரந்தரப் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.**

★நிரந்தர வைத்தியர் நியமனம் தொடர்பில் புதிய நியமனங்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் போது நிரந்தரப் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

★நோயாளர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள் குடிதண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்யக் குழாய்க்கிணறு ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது தொடர்பில் போதிய நிதி இல்லாத காரணத்தால் ஏற்கனவே திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட காணிகள் மீண்டும் உரியவர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. எனவே புதிய காணிகளைப் பெறவேண்டாம்.

★மேலதிக சுகாதாரத் தொழிலாளி நியமனம் தொடர்பில் ஏற்கனவே நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றுள்ளதால் அதற்கான அனுமதி கிடைத்தவுடன் நியமனங்கள் வழங்கப்படும். அபிவிருத்தி நிதியில் அம்புலன்ஸ் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தக் கலந்துரையாடலில் வைத்தியசாலையின் உப தலைவர் து.சின்னத்தம்பி, செயலாளர் செ.நவரட்ணசாமி, உப செயலாளர் ம.குகதாசன், பொருளாளர் வீ.சிவராசசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-14,122)

# தூர்ந்து போயுள்ள கழிவு நீர் கால்வாய்



கொழும்புத்துறை, நவ.10

பாஷையூர் பகுதியூடாக கடலுக்குச் செல்லும் கழிவு நீர் கால்வாய் பல இடங்களில் தூர்ந்து அடைபட்டுக் காணப்படுகிறது. இதனால் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகிறது. அத்துடன் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாஷையூர் கிராமத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர், பிரதான கால்வாய் அடைபட்டுள்ளமையால் அப்பகுதியில் உள்ள குளத்தினுள் கழிவுகள் கலந்து குளம் சகதியாக மாறி துர்நாற்றம் வீசுகிறது.

அதேவேளை, நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு அப்பகுதியில் இயங்கிவரும் பாடசாலை மாணவர்களுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் நோய்த்தாக்கம் ஏற்படும் நிலைமை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பாக மாநகர சபை சுகாதாரப் பகுதியினருக்கு பல முறை தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-135)

# மண் வீதிகளால் போக்குவரத்துச் சிரமம்

கொழும்புத்துறை, நவ.10

கொழும்புத்துறை, வளன்புரம் பகுதியில் உள்ள வீதிகள் நீண்டகாலமாகக் கவனிப்பார் இன்றி மண் வீதிகளாகவே காணப்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாநகர சபைப் பகுதியில் உள்ள அனைத்து வீதிகளும் சீர் செய்யப்பட்டு வருகின்ற வேளையில் இப்பகுதியில் உள்ள ஒரு வீதி கூட திருத்தம் செய்யப்படவில்லை என்று மக்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து நெருக்கமாக வசித்து வருகின்றனர். இவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் சென்.ஜோசப் வீதி, சுவாமியார் ஒழுங்கை மற்றும் உள்ளகக் குறுக்கு வீதிகள் என்பன அபிவிருத்தியின்றிக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் பாடசாலை, குருமடங்கள், ஆலயம் என்பன அமைந்துள்ளமையினால் மக்கள் போக்குவரத்து அதிகமாக காணப்படுகின்றது. எனவே இவ்வீதிகளைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி தெலுங்கானா அமைந்தால் கட்சியைக் கலைத்துவிடத் தயார்

## சந்திரசேகர ராவ் கருத்து

ஹைதராபாத், நவ.10

தனித் தெலுங்கானா அமைந்தால் கட்சியைக் கலைத்து விட்டு காங்கிரஸில் இணையத்தயார் என்று தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதிக் கட்சித் தலைவர் சந்திரசேகர ராவ் தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம் கரீம் நகரில் நடைபெற்ற அந்தக் கட்சியின் 2ஆவது நாள் மாநாட்டில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனி தெலுங்கானாவுக்கான பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டாலும், இந்த விடயத்தில் காங்கிரஸ் பிடிவாதத்துடன் செயற்படுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய ஆளும் காங்கிரஸ், தெலுங்கானா விவகாரத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். அவ்வாறு தனி தெலுங்கானா அமைக்கப்பட்டால், எனது கட்சியைக் கலைத்து விட்டு காங்கிரஸுடன் இணையத் தயார். தெலுங்கானா கோரிக்கையை நிறைவேற்றும் வரை போராட்டங்கள் தொடரும்.

தெலுங்கானாவை வலியுறுத்தி பல கட்ட போராட்டங்களை தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழு உள்ளிட்ட அமைப்புகள் தொடர்ந்து நடத்தும்- என்றார்.



2014 ஆம் ஆண்டு ஆந்திர மாநில சட்ட சபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்க இருக்கும் சூழ்நிலையில் காங்கிரஸ் தனது செல் வாக்கை நிலை நிறுத்த தெலுங்கானா விவகாரத்தை கையில் எடுத்துள்ளது. தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதிக் கட்சியை காங்கிரஸுடன் இணைக்க பேரம் பேசப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், சந்திரசேகர ராவ்வின்இந்த கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

# அற்புதமான கூட்டாளி பிரதமர் மன்மோகன்

### வெற்றிக்குப் பின் ஒபாமா புகழாரம்



டில்லி, நவ.10

மன்மோகன் சிங் தனது அற்புதமான கூட்டாளி என்று ஒபாமா தெரிவித்தார். இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்ததாவது:-

2ஆவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட ஒபாமாவை கடந்த வியாழக்கிழமை மாலை தொலை பேசி மூலம் தொடர்பு கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

இதன்போது, இரு நாடுகளும் கடந்த சில ஆண்டுகளாக இணைந்து பெற்ற வெற்றியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும், இன்னும் ஏராள மான வெற்றிகளைப் பெறுவதற்கும் அளிக்கப்பட்ட வாய்ப்பு என்று பிரதமர் தெரிவித்தார்.

மன்மோகன்சிங்கின் வாழ்த்துகளைஏற்றுக்கொண்ட ஒபாமா அதற்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், மன்மோகன் சிங் தனது அற்புதமான கூட்டாளி என்று பாராட்டிய அவர், தொடர்ந்து இணைந்து செயற்பட விரும்புவதாகத் தெரிவித்தார். (வ)

### மோடி ஒரு 'குரங்கு' என்றது காங்கிரஸ்

# தேர்தல் ஆணையத்திடம் பா.ஜ.கட்சி முறைப்பாடு

ஜூனாகத், நவ.10

குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியை குரங்குடன் ஒப்பிட்டுப் பேசியதற்காக தேர்தல் ஆணையத்திடம் பாரதீய ஜனதாக் கட்சி முறைப்பாடு தெரிவிக்க முடிவு செய்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் குஜராத் மாநில தலைவரான அர்ஜூன் மோத்வாடியா ஜூனாகத் நகரில் தேர்தல் பிரசாரத்தின் போது கூறியதாவது:-

''ஒரு காட்டில் மரத்தின் மீது உட்கார்ந்து கொண்டு மரத்துக்குமரம் தாவக் கூடியது குரங்கு. ஆனால் அந்தக்காட்டுக்கே ராஜா சிங்கம். சிங்கம் போன்ற மன்மோகன்சிங்கை குரங்கு போன்ற நரேந்திரமோடி விமர்சிக்கலாமா?'' என்று சாடியிருந்தார்.

இதுகுறித்து பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ரவி சங்கர் பிரசாத், அர்ஜூன் மோத்வாடியாவின் பேச்சு கண்டனத்துக்குரியது. இதுபோன்ற தரம் குறைந்த விமர்சனம் தவறானது. நரேந்திரமோடியை தீய சக்தியாக காங்கிரஸார் வர்ணிக்கின்றனர். இது காங்கிரஸாருக்குப் பொருத்தமான செயலா?

குஜராத்தில் வளர்ச்சிப் பணிகளைச் சிறப்பாகச் செய்துவரும் மோடியை காங்கிரஸார் தவறாக விமர்சிக்கின்றனர். இதுபோன்ற தவறான பேச்சுக்கு காங்கிரஸ் தலைவர்கள் பதில் அளிக்க வேண்டும் - என்றார்.

இந்தநிலையில் தேர்தல் விதிமுறைகளைமீறிமோடியை விமர்சித்ததால் காங்கிரஸ் கட்சி மீது தேர்தல் ஆணையத்திடம் பாரதீய ஜனதாக் கட்சி முறைப்பாட்டு மனு கொடுக்க உள்ளது. மேலும் மோத்வாடியா பேசிய காணொலிப் பதிவையும் தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்யப் போவதாக பா.ஜ.க. மூத்த தலைவர் பரேந்து பகத் குறிப்பிட்டுள்ளார். (வ)

## ஹரியானா மாநிலத்தில் பாடசாலை மாணவிகள் மீது துப்பாக்கிச் சூடு

ஹரியானா மாநிலத்தில் பள்ளி மாணவிகள் இருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு தப்பியோடிய நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். ஹரியானா மாநிலம், கெய்த்தால் மாவட்டம் பீட்டால் கிராமத்தைச் சேர்ந்த மாணவிகள் சிலர் வீடு திரும் பிக்கொண்டிருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் மாணவிகளை நோக்கி சரமாரியாகச் சுட்டபோது இதில் ஒரு மாணவி உயிரிழந்தார். மற்றொருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

உயிரிழந்த மாணவி 8 ஆம் வகுப்பில் கல்வி கற்று வந்தவர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள் ளது.

படுகாயமடைந்து மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாணவி 11 ஆம் வகுப்பில் பயின்று வருகின்றார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் உயிரிழந்த மாணவியின் உடலை பெறுவதற்கு உறவினர்கள் மறுத்து வருவதுடன் நியாயம் கோரியும் குற்றவாளிகளைப் பிடிக்க வலியுறுத்தியும் மருத்துவமனை முன்பு போராட்டத்தில் களத்தில் குதித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.



டில்லியில் நடைபெற்ற கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் பிரிட்டன் வெளியுறவுத்துறை செயலர் வில்லியம் ஹேக் கலந்துகொண்ட போது....

## கள்ள நோட்டுகளை புழக்கத்தில் விட்ட மேற்கு வங்க நடிகர் கைது

இந்தியாவில் கள்ள நோட்டுகளைப் புழக்கத்தில் விட்டது தொடர்பாக மேற்கு வங்க நடிகர் பப்லு ஷேக் கைது செய்யப்பட்டுள்ளார். பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்கு கள்ள நோட்டுகளை புழக்கத்தில் விட்டதாக அவர் மற்றும் வங்க தேசத்தைச் சேர்ந்த ஆலம் ரபீக், ரஜிப்பகீர் ஆகிய 3 பேரை கடந்த மாதம் குற்றப்பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து ரூ. 8 லட்சம் ரூபா பெறுமதியாக கள்ள நோட்டுக்கள் பறி முதல் செய்யப்பட்டன.

### வைகோவை 'சாரைப்பாம்பு' என்றாராம்

# நாஞ்சிலின் கொடும்பாவி ம.தி.மு.கவினரால் எரிப்பு



வைகோவை 'சாரைப் பாம்பு' என்று கூறிய நாஞ்சில் சம்பத்தின் கொடும்பாவியை அவரது சொந்த ஊரில் வைத்தே ம.தி.மு.க வினர் தீ வைத்துக் கொளுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ம.தி.மு.கவின் முக்கிய பிரமுகரான நாஞ்சில் சம்பத் கடந்தவாரம் நக்கீரன் இதழுக்கு அளித்த பேட்டியில், 'சத்தமில்லாமல் கடிக்கிற சாரைப் பாம்பு போல என்னைக்கடித்து எனக்கு வலியை ஏற்படுத்திவருகிறார்' வைகோ என்று கூறியிருந்தார்.

அந்தப்பேட்டி வெளியானவுடன் ம.தி.மு.க வினர் பலரும் நாஞ்சில் சம்பத்துக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இந்தநிலையில் கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் அருகே உள்ள வேர்கிளம்பியில் திருவட்டார் ஒன்றியச் செயலாளர் சேம்ராஜ் தலைமையில் கூடிய ம.தி.மு.கவினர், நாஞ்சில் சம்பத்துக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். ம.தி. முகவை விட்டு வெளியேறு என்று கூறிய அவர்கள், நாஞ்சில் சம்பத்தின் கொடும்பாவியை தீ வைத்துக் கொளுத்தினர். இந்தப் போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த குமரி மாவட்ட பொறியியல் அணி அமைப்பாளர் சுரேஷ் குமார், தலைவர் வைகோவைப் பற்றி ம.தி.மு.கவில் [illegible] வருகிறார் நாஞ்சில் சம்பத என்று கூறினார். (வ)

# கூடங்குளத்துக்கு நாம் எதிரிகள் அல்லர்

### கருணாநிதி கருத்து



சென்னை, நவ.10

கூடங்குளம் அணுமின் நிலையம் போன்ற தொழில் வளர்ச்சிச் சாதனங்களுக்கு நாங்கள் ஒன்றும் எதிரிகள் அல்லர். என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இதுகுறித்து தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:

மத்திய இணை அமைச்சர்களில் ஒருவரான நாராயணசாமி ''கூடங்குளம் விடயத்தில் தி.மு.க. முதலில் ஆதரவு கொடுத்தது, பின்னர் பின் வாங்கிவிட்டது. எனவே தி.மு.க. எங்களுக்குத் தேவையில்லை. ஜெயலலிதா ஆதரவு போதும்'' என்று கூறியதாக வாரப் பத்திரிகை ஒன்றில் பேட்டி வந்திருக்கிறதே? அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள் என்று செய்தியாளர்கள் தலைவர் கருணாநிதியிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:-

கூடங்குளம் அணுமின் நிலையத்தை தி.மு.க. எதிர்ப்பதைப் போலவும், ஜெயலலிதா ஆதரிப்பதைப் போலவும் பேட்டி கொடுத்திருக்கிறார். ஆனால் ஒன்று! கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பணிகளையெல்லாம் ஒத்திவைத்துவிட்டு, அந்தப்பகுதி மக்களுக்கெல்லாம் தெளிவுபடுத்திய பின்னர்தான், பணிகளைத் தொடர வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் அமைச்சரவையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி, பிரதமருக்கு அனுப்பி வைத்தவர் ஜெயலலிதா. கூடங்குளத்தில் போராட்டம் நடத்தியவர்களையெல்லாம் தலைமைச் செயலகத்திலேயே சந்தித்து அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டியவர் ஜெயலலிதா. இவையெல்லாம் மத்திய இணை அமைச்சர் நாராயணசாமிக்கு தெரியாமலே போய் விட்டதா?.

நாட்டு மக்களுக்காக, நாட்டின் முன்னேற்றதுக்காக சொல்கிறேன். என்றைக்கும் கூடங்குளம் போன்ற தொழில் வளர்ச்சிச் சாதனங்களுக்கு நாங்கள் ஏதிரிகள் அல்ல. விஞ்ஞான ரீதியாக தமிழகத்தில் தொழில் வளர வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் தான் நாம்-என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சான்டி' போனது; 'ஏதென்னா' சன்னதம்

## நியூயோர்க், நியூஜெர்சி மாகாணங்கள் வெள்ளத்தில்

'சான்டி' புயல் ஏற்படுத்திய தாக்கங்களில் இருந்து மீண்டு வருவதற்குமுன், அமெரிக்காவை மற்றொரு புயல் தாக்கியுள்ளது என்று தேசிய வானிலை சேவை மையம் தெரிவித்துள்ளது. இந்தப் புயலுக்கு 'ஏதென்னா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

'ஏதென்னா' நியூயோர்க், நியூஜெர்சி மாகாணங்களைத் தாக்கியது. தற்போது 'ஏதென்னா' அமெரிக்காவின் கிழக்குக்கரையை நோக்கி மையம் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'சான்டி' புயல் அமெரிக்காவை தாக்கியபோதும் நியூயோர்க், நியூஜெர்ஸி மாகாணங்களே அதிகம் பாதிக்கப்பட்டன. கடல் அலைகள் நகருக்குள் புகுந்ததால் எங்கும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது. இவற்றில் இருந்து இன்னும் மீளாத நியூயோர்க், நியூஜெர்சி மாகாணங்களைத் தற்போது 'ஏதென்னா' வும் தாக்கியுள்ளது.

இதன்காரணமாக கன மழை, பனிப்பொழிவுடன் பலத்த காற்றும் வீசுகிறது. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. புயல் காரணமாக விமானப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் ஆயிரத்து 700 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ரயில் போக்குவரத்தும் முடங்கியுள்ளது.



'சான்டி' புயலில் கடுமையாக பாதிப்படைந்த நியூயோர்க் மற்றும் நியூஜெர்சி மாகாணங்களில் நடைபெற்று வந்த மீட்புப் பணிகள் 'ஏதென்னா' புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

# 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்'; தயாரித்தவருக்கு ஓராண்டு சிறை



முகமது நபியை இழிவுபடுத்தும் வகையில் திரைப்படம் தயாரித்த மார்க் பஸ்ஸல்லி யூசெப்பிற்கு லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் ஓராண்டு சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

முஸ்லிம்களின் அப்பாவித்தனம் (Innocence of Muslim) என்ற படம் அமெரிக்காவில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தத் திரைப்படத்தில் முகம்மது நபியை இழிவுபடுத்தும் காட்சிகள் இடம் பெற்றிருந்தன. இதனையடுத்து இந்தத் திரைப்படத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பலநாடுகளில் முஸ்லிம்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தப் படத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து லிபியாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் மீது ரொக்கட் தாக்குதல் கூட நடத்தப்பட்டது. இதில் அமெரிக்க தூதர் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இந்தப் படத்தை தயாரித்த மார்க் பஸ்ஸல்லி யூசெப் (வயது 55) கைது செய்யப்பட்டார். அவர் மீது 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு லொஸ் ஏஞ்சல்ஸ் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. கடந்த வாரம் நடந்த விசாரணையின் போது, தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் யூசெப் மறுத்திருந்தார்.

ஆனால் பின்னர் அவர் மீது சுமத்தப்பட்ட 8 குற்றச்சாட்டுகளில், 4 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் ஒரு வருடம் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். அத்துடன் 5 ஆண்டுகள் வரை உரிய அனுமதி பெறாமல் கணினி மற்றும் இணையத்தை பயன்படுத்தக்கூடாது, கற்பனையான பெயர்களை பயன்படுத்தக்கூடாது என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

## மியன்மார் செல்கிறார் ஒபாமா



மியன்மாருக்கு பயணம் மேற்கொள்ளும் முதல் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாதான்.


அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒபாமா, இராணுவ ஆட்சி நடை பெற்ற மியன்மார் நாட்டுக்கு செல்வதாக அறிவித்துள்ளார். அங்கு அவர் ஜனநாயக அரசு வேண்டி போராடி வரும் ஆங் சாங் சூகி மற்றும் அந்நாட்டின் ஜனாதிபதி தெய்ன் செய்ன் ஆகியோரைச் சந்திக்க உள்ளார். மியன்மாருக்கு செல்லும் முதல் அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமாவின் இந்த பயணம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஒபாமா, தாய்லாந்து, கம்போடியா மற்றும் பர்மா நாடுகளுக்கு செல்வார் என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அண்மையில் மியன்மாருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த இராணுவம் மற்றும் பொருளாதரத் தடைகளை அமெரிக்கா நீக்கியிருந்தது. அத்துடன் முழு நேரத் தூதரையும் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரியா மீது கை வைத்தால் பெரும் அழிவுகள் நிச்சயம்

### நான் எங்கும் ஓட மாட்டேன் எச்சரிக்கிறார் ஜனாதிபதி அசாத்

டமஸ்கஸ், நவ.10

''சிரியாவில் இருந்து என்னை வெளியேற்றுவதற்கும் எனது இராணுவத்துக்கு எதிராகப் போராடவும் முயற்சி செய்யும் எந்த வெளிநாட்டு சக்தியும், சிரியா மற்றும் மத்திய கிழக்கில் பெரும் அழிவை சந்திக்க நேரிடும். வாழ்ந்தாலும் இறந்தாலும் அது சிரியாவில்தான். எக்காரணம் கொண்டும் சிரியாவை விட்டு நான் வெளியேறமாட்டேன்'' என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார் சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்.



கடந்த வருடம் மார்ச் முதல் சுமார் 20 மாதங்களுக்கு மேலாக இடம்பெற்றும் வரும் சிரிய அரசு ஆதரவாளர்களுக்கும், புரட்சி படையினருக்கும் இடையேயான உள்நாட்டு போரில் இதுவரையில் 37 ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில் கொடூர குற்றங்களை மக்கள் மீது திணித்த குற்றத்திற்காக சர்வதேச நீதி விசாரணையை எதிர்கொள்ளும் வகையில், ஜனாதிபதி அசாத் சிரியாவை விட்டு பாதுகாப்பாக வெளியேறவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதற்குத் தயார் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டபோது அசாத் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது,

"சிரியா மற்றவர்களின் எண்ணங்களுக்குத் தலையாட்டும் கைப்பாவையல்ல. சிரியாவில் அதிகரித்துள்ள மோதலில் வெளிநாடுகள் தலையிட்டு தீர்க்க முயன்றால், உலக அளவில் பெரிய விளைவுகள் ஏற்படும். பிராந்திய ஸ்திரத்தன்மையும் பாதிக்கும். சர்வதேச சமூகம் இதில் தலையிட்டால் அட்லாண்டிக் பெருங்கடல் முதல் பசிபிக் பெருங்கடல் வரை பாதிக்கப்படும்.

சிரியா மீது உலகநாடுகள் தாக்குதல் நடத்துவதற்கு முயன்றால், எதிர்பார்க்காத அதிக விலையை அவை கொடுக்க நேரிடும். அத்தகைய முயற்சியை மேற்கத்திய நாடுகள் எடுக்காது என்றே நம்புகின்றேன். ஆனால் அப்படி ஒருவேளை நடந்தால் என்ன நடக்கும் என்பதை யாராலும் கணிக்கமுடியாது'' - என்றார்.

## அமெரிக்க 'டிரோனை' விரட்டியது ஈரான்



அமெரிக்காவின் ஆளில்லா கண்காணிப்பு விமான மான டிரோன், ஈரான் போர் விமானங்களால் தாக்கப் பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வளைகுடா கடல் பகுதியை ஆளில்லா விமானங்கள் மூலம் அமெரிக்கா கண்காணித்து வருகிறது. கடந்த முதலாம் திகதி வழமைபோல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஆளில்லா விமானம்மீது ஈரான் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. எனினும் விமானம் எந்தவொரு பாதிப்பும் இல்லாமல் தளத்துக்குத் திருப்பப்பட்டது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதேபோன்று கடந்தாண்டு, தங்களது எல்லைக்குள் நுழைந்ததாகக் கூறி அமெரிக்க விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# நிதியே பெரும் பிரச்சினை; விரைவில் மீள முடியும்

### அமெ.துணை ஜனாதிபதி அறிவிப்பு

ஒபாமா தலைமையிலான புதிய அரசில் நிதி நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கே முன்னுரிமை வழங்கப்படும். வெகு விரைவில் இந்தப் பிரச்சினையில் இருந்து மீள முடியும் என்று அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்றதையடுத்து துணை ஜனாதிபதியாக இருந்த பிடனும் அதே பதவியில் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

''நாடு பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறது. ஏராளமான பணிகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இதுகுறித்து ஜனாதிபதியுடன் கலந்து ஆலோசித்தேன். மிகவும் முக் கியமான பணிகளை முதலில் முடிக்க வேண்டியது அவசியம். அந்த வகையில் நிதி நெருக்கடியைத் தீர்க்க அதிக முக்கி [illegible] பிரச்சினையிலிருந்து வெகு விரைவில் மீள முடியும் என நம்புகிறேன்.'' - என்றார்.

# சிக்கலாகும் சிரிய நிலைமை

### எச்சரிக்கிறது செஞ்சிலுவை



"சிரியாவில்மக்கள்நிலைமை மிக மோசமடைந்து வருகிறது. உதவிகள் செய்யப்பட்டு வந்தாலும் அங்குள்ள மக்களின் நிலைமை மிகவும் மோசமடைந்து, மனிதாபிமானமற்ற போக்கு அதிகரித்துள்ளது.'' - இவ்வாறு எச்சரித்துள்ளது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்.

சர்வதேச மருத்துவ உதவிகள் அனைத்தும் இராணுவத் தரப்பால் எடுத்துச் செல்லப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்க [illegible] தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடிக் கொண்டிருப்பவர்களை மீட்டு அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கமுடியாத நிலை அங்கு ஏற்பட்டுள்ளது என்றும் கவலை வெளியிட்டுள்ளது.

சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடந்து வருகிறது. மக்களைப் பற்றி கவலைப்படாமல் அரச ஆதரவாளர்களும் புரட்சிப் போராளிகள் தரப்பும் தீவிரமாகத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் பெரியவர்கள், குழந்தைகள் என பொதுமக்கள் தினந்தோறும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உளவாளி இளவரசி'க்கு பிரிட்டனில் சிலை

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும், ''உளவாளி இளவரசி' என அழைக்கப்பட்ட வருமான நூர் இனாயத் கானுக்கு பிரிட்டனில் மார்பளவு வெண்கலச்சிலை திறந்து வைக்கப்பட்டது.



இரண்டாம் உலகப் போரின் போது, பிரான்ஸில் தங்கி பிரிட்டனுக்காக உளவு பார்த்து வந்தவர் நூர் இனாயத் கான். பின்னர் பிரான்ஸில் பிரிட்டனின் உளவுக் கட்டமைப்பு சிதைந்தது. இதனையடுத்து அவரது மேலதிகாரிகள் இனாயத் கானை உடனடியாக பிரிட்டன் திரும்புமாறு வற்புறுத்தினர். இருப்பினும் தனது பிரான்ஸ் தோழர்களை தனியே தவிக்கவிட விரும்பாத நூர், தனி ஆளாக உளவறிந்து வந்தார். பின்னர், ஜேர்மனி உளவாளிகளால் கைது செய்யப்பட்டார். 10 மாத கடும் சித்திரவதைக்குப் பிறகும், நூரிடம் இருந்து உண்மை எதையும் ஜேர்மனிய உளவாளிகளால் வரவழைக்க முடியவில்லை. 1944ஆம் ஆண்டு அவரது 30 ஆவது வயதில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திப்பு சுல்தானின் கொள்ளுப் பேரன் இனாயத்கானின் மகளே நூர் இனாயத் கான். நூர் சிறு வயதில் பிரிட்டனில் கார்டோன் ஸ்கொயர் என்ற இடத்தில் தங்கியிருந்தார்.

அந்த இடத்துக்கு அருகில் நூர் இனாயத்கானின் மார்பளவு வெண்கலச் சிலையை 2ஆம் எலிஸபெத் ராணியின் மகளான இளவரசி ஆனி திறந்து வைத்தார்.

முஸ்லிம் இனத்தவர் மற்றும் ஆசியாவைச் சேர்ந்த பெண்மணிக்கு இது போன்ற கௌரவம் பிரிட்டனில் அளிக்கப்படுவது இதுவே முதல் முறை.

# பதவி விலகுகிறார் ஹிலாரி கிளின்டன்

## அடுத்த வெளியுறவுத்துறைச் செயலர் ஜோன் கொர்ரியா?, சூசன் ரைஸா?

அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் ஹிலாரி கிளின்டன், ஒபாமாவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் தாம் தொடர்ந்து அப்பதவியை வகிக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.



கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா வெற்றிபெற்றுள்ளார். அதைத் தொடர்ந்து அவர் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆவது தடவையாக மீண்டும் அதிபர் பதவியை ஏற்கவுள்ளார். அதன் போது தற்போதுள்ள அமெரிக்க நாடாளுமன்றமும் மாற்றியமைக்கப்படும்.

தற்போது முன்னாள் அதிபர் கிளின்டனின் மனைவி ஹிலாரி வெளியுறவுதுறைச் செயலராகப் பதவி வகிக்கிறார். அமெரிக்காவைப் பொறுத்தவரை வெளியுறவுத் துறைச் செயலர் பதவி, ஜனாதிபதிக்கு அடுத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகும்

ஹிலாரி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தாலும், புதிய நாடாளுமன்றம் மாற்றியமைப்பதற்கு உதவியாக சில வாரங்கள் அப்பதவியில் நீடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹிலாரி பதவி விலகுவதை தொடர்ந்து அந்த இடத்தை பிடிக்க கடும் போட்டி நிலவுகிறது. அதில் வெளியுறவு விவகார குழுவின் செனட் தலைவர் ஜோன் கொர்ரியும், அமெரிக்காவுக்கான ஐ.நா.தூதர் சூசன் ரைஸும் களத்தில் உள்ளனர். இவர்களில் ஜோன் கொர்ரிக்கு அதிக வாய்ப்பு உள்ளது.

தொடக்கத்தில் மசாசூசெம்ஸ் செனட் தேர்தலில் இவர் வெற்றி நிச்சயமற்றதாக இருந்தது. எனினும் அவர் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட ஸ்காட் பிரவுனைத் தோற்கடித்தார்.

லிபியாவில் பெங்காசி அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டு, தூதர் கொல்லப்பட்ட விவகாரத்தில் சூசன் ரைஸின் செயல்பாடுகள் செனட் சபைக்கு திருப்தி அளிக்கவில்லை. இதனால் அவர் மீது அவப்பெயர் உள்ளது. எனவே அடுத்த வெளியுறவு அமைச்சராகும் வாய்ப்பு ஜோன் கொர்ரிக்கு மிகவும் பிரகாசமாக உள்ளது.

# அமெரிக்க சரக்கு விமானம் தரையிறக்கப்பட்டு சோதனை

## துருக்கியின் அதிரடி நடவடிக்கை



சிரியாவுக்குச் சென்று கொண்டிருந்த அமெரிக்க சரக்கு விமானத்தை உடனடியாகத் தரையிறக்குமாறு துருக்கி உத்தரவிட்டது. சிரியா விமானங்கள் துருக்கி நாட்டு வான்வெளியில் பறக்க துருக்கி அரசு ஏற்கனவே தடை விதித்துள்ளது. அத்துடன் விமானங்கள் மூலம் சிரியாவுக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுவதை தடுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது. சந்தேகத்துக்கு இடமான விமானங்கள் தரையிறக்கப்பட்டுச் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறே அமெரிக்க சரக்கு விமானமும் எர்சூரும் நகரிலுள்ள விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் அதில் சந்தேகப்படும் ஆயுதங்கள் இருந்ததா என்ற விவரங்களை வெளியிட மறுத்துவிட்டனர்.

# கிரகங்கள் கண்டுபிடிப்பு



அண்மையில் விண்வெளியில் எச்.டி. 40307 என்ற நட்சத்திரத்தை சுற்றி 3 புதிய கிரகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருந்தனர். அவை பூமியைப் போன்று மனிதர்கள் வாழத் தகுதியுடையவை என்றும் ஆய்வுகள் மூலம் தெரியவந்தது.

இந்த நிலையில் தற்போது அங்கு மேலும் ஒரு கிரகத்தை கண்டுபிடித்துள்ளனர். இது பூமியை விட 7 மடங்கு பெரியது. சூரியனில் இருந்து பூமி இருக்கும் தொலைவில்தான் இந்த புதிய கிரகமும் உள்ளது.

பூமியில் உள்ளது போன்ற தட்பவெப்பநிலை இங்கு நிலவுகிறது. திரவ நிலையிலான தண்ணீரும், நிலையான சுற்றுச்சூழலும் உள்ளது. இதனால் அங்கு உயிரினங்கள் வாழ முடியும் என ஹெட் போர்க்குஷயர் பல்கலைக்கழக விஞ்ஞானி மிக்கோ துயோன தெரிவித்துள்ளார். எச்.டி. 40307 நட்சத்திரத்தைச் சுற்றி மேலும் 2 புதிய கிரகங்கள் உள்ளன. அது குறித்த ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவித்தார்.




சிவமயம்

## மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
## ஸ்கந்தஷஷ்டி திருவிழா விஞ்ஞாபனம்

18-11-2012 ஞாயிற்றுக்கிழமை

மெய்யன்பர்களே!

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் ஸ்கந்தஷஷ்டித் திருவிழா.சூரஸம்ஹாரத் திருவிழா, பாறணை, திருக்கல்யாண வைபவ நிகழ்வுகள் வெகுவிமரிசையாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. நிகழும் மங்களகரமான ஐப்பசிமாதம் 28 ஆம் நாள் (13.11.2012) செவ்வாய்க்கிழமை முதல் ஸ்கந்தஷஷ்டித் திருநாள் 1 ஆம் நாள் உபயமாக ஆரம்பித்துத் தொடர்ந்து விழாக்கள் நடைபெறும். இத்தருணம் மெய்யன்பர்கள் தங்கள் குடும்பம், உற்றார், உறவினர், இனசனபந்துக்களுடன் சுற்றம்சூழல் சகிதம் ஆலயத்திற்கு வருகைதந்து விழாக்களில் பங்குபற்றி அர்ச்சனை, ஆராதனைகள் செய்து மாவிளக்கு, நெய்தீபம் ஏற்றி தங்கள் நேர்த்திக்கடன்களை பூர்த்திசெய்து கருணைக்கடலாம் மாவைக் கந்தப்பெருமானின் திருவருள்பெற்று இன்புற்று சுகமான ஆனந்தப் பெருவாழ்வு வாழவேண்டுமாய்ப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசீர்வதித்து வருக வருக ஆனந்தம் பெறுக என அன்புடன் அழைக்கின்றேன்.

காலை மணி 6.00 – திருவனந்தல்
8.30 – ஸ்நபனாபிஷேகம்
9.30 – காலைசந்தி பூசை
11.30 – வசந்தமண்டப பூசை, மகேஸ்வரபூசை. [அன்னதானம்]
பிற்பகல் 3.30 மணிக்கு – ஸ்நபனாபிஷேகம்
4.30 – சாயரட்சை பூசை
5.15 – இரண்டாம் கால பூசை
5.30 – வசந்தமண்டப பூசை. திருவிழா. சுவாமி வெளிவீதி வலம்வருதல்
8.30 – அர்த்தசாம பூசை, திருவருட்பிரசாதம் வழங்குதல்

### கார்த்திகை மாதம் 3ம் நாள் 18.11.2012 ஞாயிற்றுக்கிழமை ஷஷ்டித் திருவிழா
### வழமைபோல் காலை நிகழ்வுகள் நடைபெறும்

பிற்பகல் 1.00 மணிக்கு – ஸ்நபனாபிஷேகம்
2.00 – சாயரட்சை பூசை
2.30 – இரண்டாம்கால பூசை
2.45 – வசந்த மண்டப பூசை தொடர்ந்து சுவாமி சூரசம்ஹாரத்திற்காக எழுந்தருளி சூரன் போர்த் திருவிழா
5.45 – வடக்கு வீதியில் விசுவரூப தரிசனம், அலங்காரம், அர்ச்சனை ஆராதனைகள்
6.30 – ஸ்நபனாபிஷேகம்
8.30 – அர்த்தசாம பூசை, பிரசாதம் வழங்குதல்

கார்த்திகை மாதம் 4 ஆம் நாள் 19.11.2012 திங்கட்கிழமை பாறணை
காலை மணி 5.00 – உஷத்கால பூசை [திருவனந்தல்]
6.30 – காலை சந்தி பூசை
7.00 – வசந்தமண்டப பூசை, தீர்த்தோற்சவம், பாறணை
11.00 – உச்சிக்காலபூசை, மகேஸ்வரபூசை, அன்னதானம்.
பிற்பகல் 2.30 மணிக்கு – ஸ்நபனாபிஷேகம்
3.30 – சாயரட்சை பூசை
4.00 – வசந்தமண்டபப் பூசை, திருக்கல்யாண வைபவம்
6.30 – பூந்தண்டிகையில் வள்ளி தேவயானை சகிதம் முருகப்பெருமான் வெளிவீதி வலம் வருவார்.
8.30 – அர்த்தசாம பூசை, பிரசாதம் வழங்குதல்


**ஸ்கந்தஷஷ்டி விரதகாரர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து நேர்த்திகளைப் பூர்த்தி செய்யச் சகல வசதிகளும் செய்துதரப்படும். பிரசாதங்கள், அர்ச்சனைப் பொருள்கள், மாவிளக்குப் பொருள்கள், பலகாரங்கள், நெய்விளக்கு ஆகியவற்றை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

மாவைக்கந்தா போற்றி! போற்றி! நின்பாதம் சரணம்! சரணம்!

– மாவைக்கந்தன் தொண்டன் மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள், ஆதீனகர்த்தா.



# 55 ஆவது பிறந்த நாள் வாழ்த்து




மாண்புமிகு **கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர்,
பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சு, யாழ்ப்பாணம்

கௌரவ அமைச்சர் அவர்களுக்கு பிறந்ததின நன்நாளில்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாகத்திகழும் இலங்கைத்தீவின் யாழ்.
மாநகரத்தின் மத்தியில் கார்த்திகைமாதத்தின் பத்தாம் தினத்தில்
அன்னைத்தமிழ் வயிற்றில் பிறந்து அனுபவக்கல்வியில்
பாண்டித்தியம் பெற்று மூன்று தசாப்தங்கள் மேன்மைமிகு அரசியல் பணியின்
மூலமாக தமிழர் நெஞ்சங்களில் நீங்கா ஒளிவிளக்காகவும், யாழ்.
மாவட்டத்தின் கடற்றொழிலாளர் சமூகத்தின் கலங்கரை விளக்கமாகவும்
திகழ்ந்து வரும் தாங்கள் இன்றைய பிறந்த நாளில் நீண்டகாலம்
நற்பணியாற்றிட இறை ஆசிகள் தங்கள் மீது
பொழிந்தருள இப்பிறந்த நன்நாளில் கடற்றொழிலாளர் சமூகம் சார்பில் எமது
பிறந்ததினவாழ்த்துக்களை மன மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர் :**

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு
சங்கங்கள் சமாசங்களின் சார்பில் சம்மேளனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் அநீதி இழைக்க இடமளியேன்

## உறுதியளிக்கிறார் மு.கா.உறுப்பினர் நசீர்

திருகோணமலை,நவ.10

தமிழ் மக்களின் உயர்வுக்கும் பாதுகாப்புக்கும் முஸ்லிம் சமூகம் நீண்ட பங்களிப்புச் செய்துள்ளது. அதேபோல் எனது பிரதேசத்துக்குட்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த அநீதியும் இடம்பெற ஒருபோதும் விடமாட்டேன் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நசீர் தெரிவித்தார்.

திராய்க்கேணியில் இடம்பெற்ற 'திவிநெகும' திட்டத்தின் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திராய்க்கேணி கிராமம் இனவன்முறையால் 1990 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டு மிகவும் சேதமடைந்தபோது மக்கள் வேறு கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து குடியேறினார்கள். இந்தக் கால கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்று சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளையும், இழந்த அபிவிருத்திகளையும் ஏற்படுத்த முன்வந்தது.



எனது பிரதேசத்துக் குட்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த அநீதியும் இடம் பெற ஒருபோதும் விடமாட்டேன்

இதன் அடையாளம்தான் முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருந்தபோது இந்தக் கிராமத்தை மீள்குடியேற்றக் கிராமமாக அபிவிருத்தி செய்து வீடுகளையும் வழங்கி மீள் குடியேற்றினார். அதுமட்டுமல்ல வளத்தாப்பிட்டி, கண்ணகிபுரம் போன்ற கிராமங்களையும் அபிவிருத்தி செய்தார்.

எனவே, எமது தலைவர் பாசறையில் வளர்ந்த நாங்கள் சகோதர இனங்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க கடமைப்பட்டுள்ளோம்.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் பிரதிநிதியாக செயற்படுவதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளீர்கள். இந்தப் பிரதேசத்தின் சிறுபான்மையான தமிழ் மக்களின் பிரதிநிதியும் நான்தான். எந்தவகையிலும் உங்களை பாதிக்கும் விடயங்களில் நான் முன்னிற்கமாட்டேன். உங்கள் சார்பாகவே நான் செயற்படுவேன் - என்றார். (ச)

# பனம் கன்றுகள் நடும் நடவடிக்கை

பனை அபிவிருத்தி வாரத்தையொட்டி 200 பனம் கன்றுகள் நடப்பட்டன.

மட்டக்களப்பு,நவ.10

பனைஅபிவிருத்திவாரத்தையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் பனம் கன்றுகள் நடும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் ஆரையம்பதி பிரதேசத்துக்கான பனம் கன்றுகள் நடும் நடவடிக்கை பாலமுனை விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை பனை அபிவிருத்தி சபையின் இணைப்பாளர் ரி.விஜயன் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் திருமதி வாசுகி அருள்ராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

200 பனம் கன்றுகள் நடப்பட்ட இந்தநிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் கே.தேவநேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# ஒபாமாவின் வெற்றியால் உலகத் தமிழர் மகிழ்ச்சி

## தமிழரசுக்கட்சியின் திருமலை உபதலைவர்



திருகோணமலை,நவ.10

இரண்டாவது தடவையாகவும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பராக் ஒபாமாவின் வெற்றியால் அமெரிக்க மக்கள் மட்டுமல்லாது, அமெரிக்காவில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுடன் சேர்ந்து உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தமிழ் உறவுகளும் பெருமையடைகின்றனர்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை உபதலைவர் கவிஞர் கந்தவனம் கோணேஸ்வரன் தெரிவித்தார்.

ஒபாமாவின் வெற்றி பற்றிக் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு நல்ல ஜனநாயக நாட்டின் தலைவனாக மிளிரும் ஒபாமாவின் நிர்வாகத்தில் அமெரிக்கா மேலும் சிறப்படையும் என்று அவர் கூறினார்.

உலகெங்கும் வாழும் ஒடுக்கப்பட்ட இனங்கள் விடிவு பெறவும் அடுத்துவரும் நான்காண்டுகளும் பயன்படும் என்று எதிர்பார்ப்பதோடு, அமெரிக்காவின் ஜனநாயக வெற்றிக்கு இலங்கைத் தமிழர்கள் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-40)

## வாழைச்சேனை துறைமுகப் பகுதியில்

# காட்டுக் குரங்கின் தாக்குதலால் இதுவரையில் 40 பேர் காயம்

மட்டக்களப்பு,நவ.10

மட்டக்களப்பு, வாழைச்சேனை துறைமுகப் பகுதியில் காட்டுக் குரங்கு ஒன்றின் தாக்குதலால் இதுவரை நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயமுற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இந்தக் குரங்கின் தாக்குதல் தொடர்ந்து இடம்பெறுவதால் அப்பகுதிப் பொது மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இந்தக் குரங்கானது வாழைச்சேனை ஆற்றங்கரைப் பகுதியில் உள்ள கண்ணாக்காட்டில் வசித்து வருகின்றது.

இந்த வீதியால் நாசிவன் தீவு கிராமத்துக்குச் செல்லும் பொது மக்கள், அருகிலுள்ள கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள், மீனவர்கள், பாதசாரிகள், ஆசிரியர்கள் எனப் பலரும் இந்தக் குரங்கினால் கடியுண்டுள்ளனர்.

இதுதொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையம், வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் கோறளைப்பற்று பிரதேச சபைத் தலைவர், வாழைச்சேனை பிரதேச செயலாளர், அரச அதிபர் ஆகியோரிடம் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள் கையொப்பம் இட்டு மனு ஒன்றை அனுப்பி வைத்தும் நடவடிக்கை எடுப் பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் குரங்கு வீடுகளுக்குச் சென்றும் அட்டகாசம் செய்கின்றது. இதனால் இரவு வேளைகளில் கூட மக்கள் வெளியில் வர அச்சமடைகின்றனர். (ச)

# ஒலுவில் விபத்தில் ஒருவர் சாவு



அம்பாறை,நவ.10

அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில் கொள்கலனும் மோட்டார் சைக்கிளும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் உயிரிழந்துள்ளார்.

கல்முனையில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற கொள்கலனும் ஒலுவிலில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் ஒலுவில் சந்திக்கு அருகில் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற பாலமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த கபீர் (வயது-55) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரின் ஜனாஸா பாலமுனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



ஏறாவூர் பிரதேசத்தில் புனரமைக்கப்பட்ட ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி வீரபத்திரர் கோயில் வீதி, ஏறாவூர் எல்லைநகர் விநாயகர் வீதி ஆகிய வீதிகளை மட்டக்களப்பு அரச அதிபர் பி.எஸ். எம்.சாள்ஸ் திறந்து வைத்தார்.

# தீபாவளி கொடுப்பனவை துரிதமாக வழங்குங்கள்

## அ.இ.தோ.சங்கம் வேண்டுகோள்

நுவரெலியா,நவ.10

தோட்டத் தொழிலாளர்களின் வேண்டுகோளின் படி, தீபாவளிக் கொடுப்பனவை அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளிக் கொடுப்பனவாக முன்னர் 4,500 ரூபா வழங்கப்படுகிறது. அதனை 6ஆயிரம் ரூபா வரை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தமுறையும் தொழிலாளர்களது கோரிக்கையை பொருட்படுத்தாத அதிக தொழிற்சங்கங்கள் தீபாவளி கொடுப்பனவாக 4,500 ரூபாவை தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வழங்கச் சம்மதித்துள்ளன.

தோட்டத் தொழிலாளர்களில் 90 வீதமானவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் தீபாவளிக் கொடுப்பனவு 6ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

# கல்வித்துறையினரின் பிரச்சினைக்கு தீர்வுகாண நடமாடும் சேவை

## மட்டு.மாவட்டத்தில் ஆரம்பம்

எருவில்,நவ.10

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நடமாடும் சேவை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பட்டிருப்பு கல்வி வலயத்தின் மண்முனை, தென் எருவில் பற்று கோட்டக்கல்வி பிரிவுக்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒந்தாச்சிமடம், விநாயகர் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் ஆசிரியர்களின் சுய விவரக்கோவை பூர்த்தி, அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளல், சம்பள உயர்வு, சம்பளமுரண்பாடு, உள்ளீர்ப்பு, பதவி உயர்வு, பதவி உறுதிப்படுத்தல், பாடசாலைகளில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன என்று கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார். (ச-31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சத்தில் விட்டகலாத 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



**துரைசிங்கம் ஸ்ரீபாஸ்கரன்**

திதி: 10.11.2012

மலர்வு
29.10.1966

உதிர்வு
02.11.2010

உலகத்திற்கு உத்தமராய் வாழ்ந்து
ஈராண்டு கடந்ததய்யா
உழுவல் அன்பு கொண்ட உள்ளங்கள்
ஏங்கித் தவிக்குதய்யா
உதிக்கின்ற சூரியனை பார்த்து
மலர்கள் சிரிக்குதய்யா
உம் நினைவலைகளைக் கண்டு
உற்றார், உறவினர்கள் தவிக்கிறார்களய்யா.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவலடி,
உடுப்பிட்டி.

**மனைவி,
குடும்பத்தினர்.**

(25201)(43-6-7)

## சிறுவர் சித்திரப் போட்டி

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் வெளியிடப்படும் "சிறுவர் செய்தி" பத்திரிகையின் ஆதரவுடன் வட மாகாண சிறுவர்களது உளவள ஆற்றலை மேம்படுத்தும் சிறுவர் சித்திரப் போட்டி.

**போட்டியின் எண்ணக்கருக்கள்:-**

- ★ சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
- ★ சிறுவர்களது எதிர்காலம்
- ★ சமகால சிறுவர் நிலைகள்

6 - 12 வயது கீழ்ப்பிரிவு
13- 17 வயது மேற்பிரிவு

- ★ ஒருவர் ஒரு ஆக்கம் மட்டுமே அனுப்புதல் வேண்டும்.
- ★ ஆக்கங்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடனே அனுப்பப்பட வேண்டும்.
- ★ படம் வரைந்த மறு பக்கத்தில் வரைந்தவரது பெயர், தரம், பாடசாலை, வசிக்கும் இடம் என்பன தெளிவாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும்
- ★ வரைவதற்கு A3 தாள் மட்டுமே உபயோகப்படுத்தல் வேண்டும்.
- ★ சித்திரங்கள் நவம்பர் 30 ஆம் திகதிக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

இரு பிரிவுகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கு:-
முதலாம் பரிசு ரூபா 10,000.00
இரண்டாம் பரிசு ரூபா 5,000.00
மூன்றாம் பரிசு ரூபா 3,000.00

பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து சித்திரங்களும் பொது மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டு நடுவர்களால் தெரிவு செய்யப்படும்.

*ஆக்கங்களை வரைந்து அனுப்பவேண்டிய முகவரி*
*சிறுவர் சித்திரப்போட்டி*
சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்,
இல. 60A, *பழைய பூங்கா வீதி,*
*சுண்டுக்குழி,*
*யாழ்ப்பாணம்.*

(25184) (2-6,7)

## The Combined Choirs of the Youth of the North

Proudly presents

**The 61st Annual Festival of Carols**

date:
Saturday,10th Nov-2012
Time: 4.00 p.m.
venue: St.John's College
Admission:
By Programme - Rs.20/=

(சி/4705)(5-6-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**இராசையா ஜெயசீலன்**

மலர்வு
18.09.1959

உதிர்வு
11.10.2012

தொலை தூரம் இருந்தீர் முப்பது ஆண்டுகள்
தொடர்புகளும் ஏதும் இல்லாதிருந்தீர் - எனினும்
காண்போம் என்றிருந்தோம் ஆனால்
கனவாகிப் போனதே காலன் உனை காவுகொண்டான்
அடைமழை பெய்தவேளை இடியுமொன்று
இடித்ததையா அது எம் நெஞ்சில்
கலங்கினோம் கண்ணீர் மழையிலும் நனைந்தோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

17/3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
**இ. குணசீலன் குடும்பம்**
(குணம்)

(25110) (4,5,6,7)

## தமிழ் தட்டச்சு இயந்திரம் தேவை

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம் உடன் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: 077 0801804 (25185)(5-6-7)

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் உருத்திரபுரம் வீதியில் ¾ ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 864 0738 (சி/4729)(5-6-7)

## விற்பனைக்கு

2000 நல்லினமுள்ள தென்னம் நாற்றுகள், வேப்பம் பூ, வெற்றிலைக் கொழுந்துகள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
ந.வரதராசா, இல.16, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
தொ.பே: 077 139 4217 (25183)(5-6-7)

## ரியல் எஸ்ரேட்

வவுனியா, நெளுக்குளம், மன்னார் வீதியில் 4 பரப்பு வீட்டு மனை கிணற்றுடன் சேர்ந்த காணி உடன் விற்பனைக்குள்ளது. கணேசபுரத்தில் 10 ஏக்கர் விவசாய நிலம் இதில் 3 ஏக்கர் தென்னந்தோட்டம், நீர்ப்பாசன வசதியுடன் கிணறு, வீடு, 2கடை மின் சார வசதியுடன் விற்பனைக்குள்ளது.

விவரங்களுக்கு:
Shivaalaya Real Estate
(அரச அங்கீகார இல. 3356)
College Road, Poonthoddam, Vavuniya.
T.P.:077 969 4009, 077 145 0599
Email: shivaalaya@yahoo.com

(24304)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவராகவும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி இறைபதம் எய்தியுள்ள

**இளையதம்பி சிவானந்தன்**

அவர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வட இலங்கைச் சங்கீத சபை,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(C/4740)(2,6,7)

## ஈரவிழிகளுடன் கண்ணீர்க் காணிக்கை



கண்ணகை விளையாட்டுக்கழக உறுப்பினரும், எமது கழக உறுப்பினர்களான **செ. வினோதன், செ. துசிதன்** ஆகியோரின் மருமகனாகிய

செல்வன் **பார்த்தீபன் திலீப்ராஜ்**

கனவுகளைக் சுமந்து கொண்டு
கண்ணகை மைதானத்திலே
பட்டாம்பூச்சி போல பறந்து திரிந்தவனே
வாழ்க்கைப் பாதைதனில் - நீ
இடைநடுவே வீட்டுச் சென்றாலும்
உன் நினைவுகள் மட்டும்
எம்மை வீட்டுச் செல்லாது.

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்ணகை சனசமூக நிலையம்,
கண்ணகை விளையாட்டுக்கழகம்,
கண்ணகை சிறுவர் கழகம்.
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(21588)(6,7,8)

## 31ஆவது பிறந்த தினமும் 7ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



தாயின் மடியில் 10.11.1981
இறைவன் அடியில் 21.11.2005
திதி: 19.11.2012

**சிவசுப்பிரமணியம் பானுரூபன்**

எமது அன்புச் செல்வமே ரூபா
ஆண்டுகள் ஏழு மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எம்மோடு நீ வாழ்ந்த
பசுமை நினைவுகள் அத்தனையும்
என்றென்றும் எம் மனதில்
நிறைந்திருக்கும் நிலை கொள்ளும்
உனது ஆத்மா சாந்தி பெற
மூத்த விநாயகர் பாதம் பணிகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி, மது,
மாமா, தம்பி, மைத்துனி (பிரான்ஸ்) மற்றும்
கனடா வாழ் அத்தான், அக்கா, கர்ஷன், யானுஜா

மூத்த விநாயகர் கோயிலடி
கரணவாய், கரவெட்டி.
தொ.இல: 0213006013

(23691)(10,6,7)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி, போறம்பலம் தெற்கு, அச்சுவேலியில் 06 (ஆறு) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0772736150

(24960)(2-6)

## மாற்ற முடியாதது எதுவுமே இல்லை மாற்றம் தேவையானது.

எங்கள் மாற்றம் உங்களை வியக்க வைக்கும்

**ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.**



கருமை நிற நீக்கம் மாநிறத்தில் இருந்து அழகிய சிவப்பழகு கருவளையம், ... கழுத்துக்கருமை நீக்கம், ... கொழுப்புப்படிவுகள் போன்றவற்றிற்கான நிரந்தரத் தீர்வு ... ஆயுர்வேத சிகிச்சைகள். ஆயுர்வேத ஓயில் மசாஜ் (முகம், கழுத்து) முடி சம்பந்தமான அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகள். உடற்பருமன் கட்டுப்படுத்தல் ... அழகுச்சிகிச்சைகள் ... தோல் போன்ற தசை குறைப்புக்கள் தேக மற்றும் அழகு தொடர்பான ஆரோக்கிய ... சிகிச்சைகள்.

குறிப்பு-

உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள், தேவையான விளக்கங்கள் போன்றவற்றை எழுதி ... (saneyaherbal@gmail.com) ... முகவரியூடாகவோ அனுப்பலாம். நாம் இலவச ஆலோசனை வழங்க காத்திருக்கிறோம்.

எமது முகவரி:
இல.262, "சானியா கேயல் கெயர்"
நாயன்மார்கட்டு ஆயுர்வேத
வைத்தியசாலை,
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.



முற்பதிவு அவசியம்: 0777351954 (25146)(2-6,7)


## புதிது! புதிது! புதிது!

**STYLE PARK**

அனைத்து வகையான ஆடைவகைகளும் புத்தம் புதிய வடிவமைப்பில்...........

ஸ்ரைல் பார்க்

STYLE PARK

STYLE PARK

தீபாவளி பண்டிகையை குடும்பத்தாருடன் குதூகலமாய் கொண்டாட மகிழ்ந்திட ஆடை உலகின் சாம்ராஜ்யம்

இல. 171, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்

(சி/4544)(6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுநாயக்காவில் வேட்டை...!



வெளிநாட்டு நாணயங்களுடன் சிங்கப்பூருக்கு தப்பிச்செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் சிங்கப்பூர் நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை கைதுசெய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை சுங்க அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.

## 'விற்றமின் ஏ' மருந்து பாவனை இடைநிறுத்தம்

கொழும்பு,நவ.10

விற்றமின் ஏ மருந்துப் பாவனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது. குருநாகலில் சுகாதார சேவை திணைக்கள அதிகாரிகளால் நடத்தப்பட்ட வைத்திய முகாமொன்றில் விற்றமின் ஏ மருந்து கொடுக்கப்பட்ட் 27 மாணவர்கள் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்தே, குருநாகல் மாவட்ட சுகாதார திணைக்களம் குறித்த மருந்து பாவனையை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

குறித்த மருந்துகளில் ஒருபகுதியை இரசாயன பரிசோதனைக்காக சுகாதாரத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது. (ச)

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு,நவ.10

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், இரண்டு மாகாணசபை உறுப்பினர்களும் தாக்கல் செய்த மனு தொடர்பில் பரிசீலனை செய்த நீதிமன்றம் இந்த அழைப்பாணை உத்தரவை பிறப்பித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் நான்கு உறுப்பினர்களை நீதிமன்றில் எதிர்வரும் 15 ஆம் திகதி முன்னிலையாகுமாறு கல்கிசை நீதிவான் பிரதீப் எம். அபேரட்ண அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, பாலித தெவரப்பெரும, அசோக அபேசிங்க மற்றும் மாகாணசபை உறுப்பினர்களான ஸ்ரீலால் லக்திலக்க, மைத்திரி குணரட்ண ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை கட்சித்தலைமை அண்மையில் இடைநிறுத்தியது.

சரத் பொன்சேகாவின் கூட்டமொன்றில் பங்கேற்றமைக்காக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், இந்தத் தண்டனை நியாய மற்றது என்று உறுப்புரிமை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பட்ஜெட்டின் நோக்கம் வறுமையை ஒழிப்பதே

### சரத் அமுனுகம சொல்கிறார்

கொழும்பு,நவ.10

நாட்டில் வறுமையை ஒழிப்பதை முதனிலை நோக்கமாகக் கொண்டு வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமிய பொருளாதாரத்தின் பங்களிப்பை நேரடியாக நாட்டின் அபிவிருத்திக்கு



பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது நாடு இடைக்கால பொருளாதாரக் கொள்கை யுடைய நாடாக மாறியுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தனிநபர் நுகர்வு 1000 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. தற்போது 2500 அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் இதனை 4000 அமெரிக்க டொலர் களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதால் நட்டம் ஏற்படுகின்றது.- என்றார். (ச)

## போலி நாணயத்தாளுடன் சிக்கினர் நால்வர்

கொழும்பு,நவ.10

கலஹா நகரில் போலி நாணயத்தாள்களை வைத்திருந்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 50 போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் கொட்டாஞ்சேனை மற்றும் பன்வில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுக்கு கொழும்பைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் போலி நாணயத் தாள்களை வழங்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச)

## ஹம்பாந்தோட்டையில் விரைவில் இந்திய சீனித் தொழிற்சாலை

கொழும்பு,நவ.10

இந்தியா சீனித் தொழிற்சாலை ஒன்றை இலங்கையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் அமைந்துள்ள முதலீட்டு வலயத்தில் அமைக்கவுள்ளது. இதற்கான அங்கீகாரத்தை இலங்கை அரசு வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் 220 மில்லியன் டொலர்கள் முதலீட்டுத் திட்டம் ஒன்று இரண்டு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் சீனிக்கான மூலப்பொருள் தருவிக்கப்பட்டு சீனி உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இதன்மூலம் ஆரம்பத்தில் நாள் ஒன்றுக்கு 2000 தொன் சீனியை உற்பத்தி செய்யமுடியும். பின்னர் அது 3 000 தொன்களாக அதிகரிக்கப்படும்.

ஹம்பாந்தோட்டையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில் அதனை சமநிலைப்படுத்துவதற்காகவே இந்தியாவுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## போதைப் பொருள் கடத்தல்: ஈரானியருக்கு 8 வருட சிறை

கொழும்பு,நவ.10

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட ஈரானியருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு புறம்பான வகையில் குறித்த வகை போதைப் பொருளை ஈரானியர் நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.

குறித்த நபர் மீது, சட்ட விரோதமான முறையில் போதைப் பொருள்களைக் கொண்டு வந்தமை மற்றும் வைத்திருத்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்ற நீதிவான் லலித் ஜயசூரிய இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (ச)

# அரச ஊழியர்களுக்கு ஏமாற்றம் பட்ஜெட் குறித்து ஆசிரியர் சங்கம்

கொழும்பு,நவ.10

இந்த முறை வரவு- செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சலுகைகளை வழங்க அரசு தவறியுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படவுள்ள ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவுபோதுமானதல்ல. அரச ஊழியர்கள் தொடர்பில் உரிய முறையில் கவனம் செலுத்தப்படவில்லை.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடுகையில் ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு திருப்தியளிக்கவில்லை. 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரி வந்த நிலையில் ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவே கிடைத்துள்ளது.-என்றார். (ச)

## நாமல் போன்று நடித்த சிப்பாய் கைதானார்

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரொருவரை விடுவிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ போன்று நடித்து பொலிஸாருடன் தொலைபேசியில் உரையாடிய சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை, யட்டவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். குறித்த சந்தேக நபர்,யட்டவத்தை பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தான் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ என்றும், யட்டவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபரை உடனடியாக விடுவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். இந்த அழைப்பு தொடர்பில் சந்தேகம் கொண்ட யட்டவத்தை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போதே குறித்த நபர் கைது செய்யப் பட்டுள்ளார். (ச)

## இலங்கை வருகிறார் உகண்டா ஜனாதிபதி

கொழும்பு,நவ.10

உகண்டா ஜனாதிபதி யோவேறி கபுடா முஷவேனி நான்கு நாள்கள் பயணத்தை மேற்கொண்டு நாளைமறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். (ச)

## கொள்கலன் வாகனம் குடை சாய்ந்து ஒருவர் சாவு; போக்குவரத்துத் தடை

கொழும்பு,நவ.10

கொள்கலன் வாகனம் ஒன்று குடை சாய்ந்ததால் காலி வீதியின் கஹவ தொடக்கம் அம்பலாங்கொட, ஹிக்கடுவை வரை போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெற்ற இந்தவிபத்தில் கொள்கலனுக்குள் நசுங்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதையில் சென்று கொண்டிருந்தவரே இவ்வாறு உயிழந்துள்ளார்.

அந்த வாகனத்தின் சாரதி மற்றும் நடத்துநர் படுகாயமடைந்து கராபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொள்கலன் குடைசாய்ந்து போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளதால் கொழும்பு செல்லும் வாகனங்கள் கஹுவ சந்தியில் மீட்டியாகொட வழியாகச் சென்று பனுவலகுமார சந்தியில் காலி வீதியை அடைய முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## கோல்டன் கீ, செலிங்கோ வழக்கு நாளைமறுதினம் விசாரணைக்கு

கொழும்பு,நவ.10

கோல்டன் கீ கடனட்டை நிறுவனம் மற்றும் செலிங்கோ ஸ்ரீராம் கெப்பிட்டல் நிறுவனத்துக்கு எதிரான அடிப்படை உரிமை மனுக்கள் இரண்டையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆராய்வதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.


'கோல்டன் கீ கிரெடிட் கார்ட்' நிறுவனத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில் பிரதிவாதிகளால் முன்வைக்கப்பட்டிருந்த ஆரம்ப கட்ட ஆட்சேபனை தொடர்பில் தீர்ப்பை அறிவிப்பதை முன்னர் நீதிமன்றம் ஒத்தி வைத் திருந்தது.

உயர்நீதிமன்ற பிரதம நீதியரசருக்கெதிராக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணையில் இந்த செலிங்கோ விவகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் எழுச்சிக்கு (திவிநெகும) - சமுர்த்தி சக்தி

## வர்த்தகக் கண்காட்சி - 2012



**இடம்:-**

**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**காலம்:-**

**இன்று (10.11.2012) சனிக்கிழமை**
**காலை 9.00 - பிற்பகல் 4.00 வரை**
**நாளை (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9.00 - பிற்பகல் 2.30 வரை**

*தலைமை:-*

**உயர்திரு சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்.

*பிரதம விருந்தினர்:-*

**கௌரவ.சில்வேஸ்திரி அலன்ரின்**
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்

*சிறப்பு விருந்தினர்கள் :-*

- ☆ **கௌரவ யோகேஸ்வரி பற்குணராஜா**
  மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.
- ☆ **உயர்திரு. யூ.ஊ.ய. திலகசிறி**
  பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகார சபை.
- ☆ **உயர்திரு. மா.நடேசராஜா**
  பணிப்பாளர் வாழ்வாதாரப்பிரிவு, இலங்கை சமுர்த்தி அதிகார சபை.
- ☆ **திருமதி வேணுகா சண்முகரத்தினம் அவர்கள்**
  அதிபர், யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை

## உள்ளூர் உற்பத்திகளின் சங்கமம்

**யாழ்.நகரில் கண்டிட விரைந்து வாரீர்**
*குறைந்த விலையில் நிறைந்த பயன்தரு பொருள்கள்*
பெற்றிட மகிழ்ந்து வாரீர்
**மக்கள் வாழ்வெழுச்சியில் சமுர்த்தி சக்தி**
அறிந்திட வாரீர்

**குறைந்த வருமானம் பெறும் மக்களின் சுயதொழில், விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் முயற்சிகளின் அறுவடைத் திருநாள் கண்டிட வருக வருக வருக வளமிகு வீடும் வியத்தகு நாடும் ஏற்றிடுவோம்.**


**மாவட்ட சமுர்த்தி அலுவலகம்,** மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(C/4738)(2-6-7)


விளம்பர அனுசரணை:



**SINGER Plus**



இல.01, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 5408

உலகை வென்றிட
சிங்கர்
தரும் வரம்

யாழ்.மண்ணின் பரம்பரைத் தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடியவானிலை நிலவும்.

## மாசேரி கப்பத்தை மயான வீதியில் எங்கும் தேங்கி நிற்கிறது வெள்ளம்

**பிரேதப்பெட்டியைக் காவிச் செல்லும் நிலை**

வரணி, நவ.10

வரணி மாசேரி கிராம அலுவலர் பிரிவிலுள்ள கப்பத்தை மயானம் அண்மையில் பெய்த கடும் மழையினால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இந்த மயானம் வெள்ளத்தினால் சூழப்பட்ட நிலையில் உள்ளதுடன் பிரதான வீதியிலில் இருந்து மயானம் வரையான மண்பாதையும் வெள்ளத்தினால் சேறும் சகதியுமாக உள்ளது.

இதன் காரணமாக பிரேத வாகனங்கள் மயானம் வரை செல்ல முடியாத நிலையே காணப்படுகின்றது. அதேநேரம் மயானம் வரை பிரேதப் பெட்டிகளை வெள்ளத்தின் ஊடாக உரியவர்கள் சுமந்து செல்லும் நிலையே காணப்படுகின்றது. சுமார் 300 யார் தூரமுடைய இந்த மண்பாதையை மண் போட்டு உயர்த்தினால் எதுவித சிரமமுமின்றி மக்கள் இந்தப்பாதையை பயன்படுத்த முடியும் என கூறப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இந்தப் பாதையை செப்பனிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (3-122)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் அங்கத்தவர்களுக்கு சலுகை

வடமராட்சி, நவ.10

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய, பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுச்சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றது.

இது தொடர்பாக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை இந்தப் பிரிவில் ஓய்வூதியம் பெறுவோர் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கம் இந்த வருடத்தின் கடந்த மாதம் வரை அங்கத்தவர்களாக இணைத்துள்ளவர்களில் 5 பேருக்கு இறப்புமானியமும், 2 பேருக்கு கண் சிகிச்சை மானியமும், 2 பேருக்கு வைத்தியசாலை சிகிச்சை மானியமும், ஒருவருக்கு பல்கலைக்கழக மானியமும் வழங்கியுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

## ரொறன்ரோ தீ விபத்தில் தமிழ்ப்பெண்மணி சாவு

கனடா, ரொறன்ரோ ஸ்காபரோ நகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தீவிபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்திருந்தனர். அவர்களில் ஒருவரான 56 வயதுடைய திருமதி சந்திரலீலா சிவபாதம் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் சாவடைந்துள்ளார்.

வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமே முதலில் தீப்பற்றி எரிந்திருக்க வேண்டும். அதன்பின்பே தீ வீட்டிற்குப் பரவியிருக்கலாம் எனத் தீயணைப்புப் படையினரும் பொலிஸாரும் கருதுகின்றனர். நள்ளிரவு ஒரு மணியளவில் தீ பரவியுள்ளது. வீட்டின் தீ மற்றும் புகை எச்சரிக்கைக் கருவியின் சத்தத்தையடுத்து திருமதி சந்திரலீலா சிவபாதம் மற்றயவர்களையும் எழுப்பி தீயிலிருந்து தப்பிப் போக முயன்றுள்ளார்.

எனினும் இவர்களில் ஐவர் இந்தத் தீவிபத்தினால் பாதிக்கப்பட்டனர். சந்திரலீலாவினது கணவர் இன்னமும் ஆபத்தான நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அதைவிட மூவர் அதிகளவு புகையை சுவாசித்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (3)

## உள்ளூராட்சி செயலர் பதவிக்கு விண்ணப்பம்

கைதடி, நவ.10

வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாகவுள்ள செயலாளர் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பவர்கள் வட மாகாணத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதி சிறப்பு உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு 01 இல் ஐந்து வருட சேவையைக் கொண்டதும் உள்ளூராட்சி சேவையில் அனுபவம் உள்ள உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களில் 10 வருட சேவை அனுபவத்தையுடைய பட்டதாரி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களில் 10 வருட சேவை அனுபவத்தையுடைய முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II உத்தியோகத்தர்களாக இருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3-288)

## மோ.சைக்கிள் சறுக்கி வீசப்பட்டு குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, நவ.10

வீதி அகலிப்புக்காக பரவப்பட்டிருந்த கற்களில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு குடும்பஸ்தருக்கு காலிலும் தோளிலும் காயங்கள் ஏற்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்று மீசாலையில் இடம்பெற்றது. மீசாலை வடக்கு, வேம்பிராயைச் சேர்ந்த முத்தன் செல்வரத்தினம் (வயது-47) என்பவர் பாதிப்புக்குள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

## ஆஸி செல்ல முயன்ற 83 பேர் மிரிஸ்ஸ கடலில் கைது

சட்டவிரோதமாக மீன்பிடிப் படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 83 பேரை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர்கள் கங்காரு என்ற மீன்பிடிக்கும் படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றுகொண்டிருந்தவேளை, மிரிஸ்ஸ கடல் பகுதி யில் இருந்து 15 மைல் தூரத்தில் கடற்படையினரால் துரத்திப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 48 தமிழர்களும், 32 சிங்களவர்களும் 3 முஸ்லிம்களும் அடங்குகின்றனர். இவர்களில் 78 பேர் ஆண்கள் எனவும் 5 பேர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வவுனியா, கிளிநொச்சி, சிலாபம், மட்டக்களப்பு, நுவரெலியா, வத்தளை, வென்னப்புவ, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் மேலதிக விசாரணைகளுக்காக காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (3)


# மரண அறிவித்தல்



## திருமதி துரைராசா (திரவியம்) கண்மணி

நல்லூர், வைமன் றோட்டைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா. கண்மணி நேற்றுமுன்தினம் (08.11.2012) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை - நாகமுத்து, வள்ளிப்பிள்ளை, சிதம்பரம், பூரணம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற துரைராசா (திரவியம்) அவர்களின் அன்பு மனைவியும், விஜயராசா (S.T. விஜயன்), மகேஸ்வரி (பெரியபிள்ளை), தையல்நாயகி, நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, கௌரி, காலஞ்சென்ற முருகதாஸ் (இ.மி.சபை-மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தயானந்தம், செல்வகுலேந்திரன் (செல்வம்), செல்வரத்தினம் (முருகன்), செல்லத்துரை (இளங்கோ), பாஸ்கரன், இராஜேஸ்வரி, சுதாமதி, காலஞ்சென்ற இரத்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், தயாகரன், வாசுகி, காலஞ்சென்ற வாகிசன் மற்றும் அகிலதாசன், அருள்தாஸ் (சொக்கன்), ஷர்சன், கோயிதா, சிந்துகஜன், சுகிர்தராஜ் (கண்ணன்), காண்டீபன், விஷ்ணுதரன் (குகன்), சுதர்சன், சுதர்சினி, சுசிந்தன், பேரூசன், மேருகா, கஜரூபன் (கஜன்), கோபிஷா, கோணேஸ்வரன், கிருசாந்தன், ஸ்ரீகஜந்தன் (அப்பு), பிரசாத் (சயந்தன்), வினோத், இன்பரூபன், கிருஷ்ணகுமார், லோஜினி, புவனேஸ்வரி, யுகப்பிரியா ஆகியோரின் பேர்த்தியும், லிகாஸ், கிஷா, கிஷான், வகின், பவிலக்சன், கேசுகி, நிரூஜன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி, ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(25182)(45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத அலைச்சல் ஏற்படும். உரிய நேரத்துக்கு சாப்பிடவும் முடியாது தூங்கவும் முடியாது. மனதில் அதிகமான சிந்தனைகள் அலைபாயும். செரிமானக் குறைபாடு, வயிற்றுவலி போன்றவற்றால் பாதிப்பு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** நல்ல வாய்ப்புகள் தேடிவரும். வருமானம் அதிகரிக்கும். பொன்-பொருள் சேர்க்கையும், வீடு -வாகன வசதிகளும் உண்டாகும். குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் சுபிட்சமும் ஏற்படும்.

**மிதுனம்:** திருமணப் பேச்சில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உங்களுடைய மதிப்பும் செல்வாக்கும் உயரும். மனம் தெளிவாக இருக்கும். உங்களுடைய திறமையான திட்டங்களைத் தீவிரமாகச் செயற்படுத்தி அதிக ஆதாயம் தேடிக்கொள்வீர்கள்.

**கடகம்:** பணவரவு கணிசமாக இருக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து வீட்டுக் கதவைத் தட்டும். பற்றாக்குறையும் கடன் நிர்ப்பந்தங்களும் நீங்கும். சௌகரிய சாதனங்களும் சொத்து-பத்துக்களும் சேரும். வீடு-வாகன வசதிகள் அதிகரிக்கவும் நிறைய வாய்ப்பு உண்டு.

**சிங்கம்:** பண நெருக்கடி, சிக்கலுமான பிரச்சினைகள், மறைமுகமான எதிர்ப்பு, வீண் விவகாரங்கள், உடல் நலக்குறைவால் உண்டாகும் மருத்துவச் செலவுகள், உறவினர்களுடன் சண்டை- சச்சரவுகள் போன்றவை ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தில் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். வருமானம் தொடர்பான காரியங்களில் தேக்கமும், தடை- தாமதம் போன்றவையும் ஏற்படும். உடல் ஆரோக்கியம் உங்களுடைய மன வேகத்துக்கு ஒத்துழைக்காது.

**நாளை**

ஐப்பசி -26 ஞாயிற்றுக்கிழமை 11.11.2012
திதி: துவாதசி மு.ப. 10.43 வரை
நட்சத்திரம்: அத்தம் மாலை 06.16 வரை
சுபநேரம்: 09.06 - 10.36 வரை
ராகுகாலம்: 04.36 - 06.06 வரை
பிரதோச விரதம்

**துலாம்:** நீண்ட நாள்களாகத் திருமணம் ஆகாமல் இருப்பவர்களுக்கு திருமணம் நிச்சயமாகலாம். எதிர்பாராத இலாபங்களும் எதிர்பார்க்கும் இலாபங்களும் கிட்டும். தான தர்மங்கள் செய்தல் சுபச்செலவுகள் போன்ற வகையில் பணம் கரைந்துபோகும்.

**விருச்சிகம்:** மற்றவர்கள் செய்த தவறுகளுக்கு நீங்கள் பழி ஏற்கநேரிடலாம். அலைச்சல் அதிகமாக இருக்கும். முக்கிய மனிதர்களைச் சந்திக்கச் சென்றால் அவர்கள் வீட்டிலிருக்க மாட்டார்கள். நாலைந்துமுறை அலைந்த பின்னரே அவர்களைச் சந்திக்க முடியும்.

**தனுசு:** நீங்கள் ஒன்று நினைத்தால் நடப்பது வேறாக இருக்கும். நீங்கள் சொல்வதை மற்றவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமல் உங்களுடன் சண்டைக்கு வருவார்கள். இடமாற்றம், பதவி மாற்றம் செய்தொழில் மாற்றத்தால் சில சிக்கல்கள் உருவாகலாம்.

**மகரம்:** திட்டமிடும் காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். ஆனால் சில சமயங்களில் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதால் சண்டை- சச்சரவுகள் ஏற்படும். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேராமல் உங்களைத் திண்டாட வைக்கும்.

**கும்பம்:** சில நல்லவர்களைத் தவறாக நினைத்து வாக்குவாதம் செய்து பகைத்துக் கொள்வீர்கள். இதனால் சொத்துகள் தொடர்பான காரியங்களில் தேக்கமும் பாதகமான போக்கும் காணப்படும். சில விரயங்களும் ஏற்படும்.

**மீனம்:** உங்களுடைய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். பணவரவு அதிகமாக உண்டாகும். பற்றாக்குறையும் கடன்களும் நீங்கும். தொழில்துறையில் பெருமளவு ஆதாய அபிவிருத்தி உத்தியோகத்தில் சம்பள, பதவி, வருமானம் தொடர்பானவைகளில் வளர்ச்சி ஏற்படும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 7 | | | | | |
| | 5 | | | 8 | | 7 | | 6 |
| | 6 | | 1 | | 3 | | 5 | 8 |
| 3 | | | | 9 | | 1 | 2 | 4 |
| | | | 4 | 3 | 2 | | | |
| 5 | 2 | 4 | | 7 | | | | 9 |
| 2 | 4 | | 8 | | 5 | | 7 | |
| 6 | | 5 | | 1 | | | 9 | |
| | | | | | 4 | 6 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 5 | 6 | 3 | 2 | 9 | 4 |
| 5 | 9 | 6 | 4 | 1 | 2 | 3 | 8 | 7 |
| 3 | 4 | 2 | 7 | 9 | 8 | 6 | 5 | 1 |
| 7 | 6 | 1 | 8 | 3 | 4 | 9 | 2 | 5 |
| 9 | 8 | 5 | 6 | 2 | 1 | 4 | 7 | 3 |
| 2 | 3 | 4 | 9 | 7 | 5 | 1 | 6 | 8 |
| 4 | 2 | 7 | 3 | 5 | 9 | 8 | 1 | 6 |
| 8 | 5 | 9 | 1 | 4 | 6 | 7 | 3 | 2 |
| 6 | 1 | 3 | 2 | 8 | 7 | 5 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## பொன்னையா திருச்செல்வம்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர், தற்போதைய பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர், தமிழரசுக் கட்சி)

திருநாவலூர், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திருச்செல்வம் 07.11.2012 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதிரம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நீலாதேவியின் அன்புக் கணவரும், கவிதா (வவுனியா), முரளி (வவுனியா), சுதன் (லண்டன்), நீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயசீலன் (பொறியியலாளர், NWS & DB), தயாளினி (வவுனியா), சஞ்சிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், வசந்தாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), விக்னேஸ்வரன் (கனடா), ஜெயதேவி, சோமஸ்கந்தன் (Health Coordinator, வவுனியா), சிவகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வேலும்மயிலும் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), செல்வராசா (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கமநல சேவைகள் திணைக்களம்), சாந்தினி (கனடா), நிறஞ்சனா (ஆசிரியர்), சிவபாலன் (PHI), காலஞ்சென்ற லலிதா மற்றும் தர்மராசா (நோர்வே), காலஞ்சென்ற பரமானந்தராசா மற்றும் சுசீலா, பத்மலோசனி, மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வருணப்பிரியன், பிரசோத்மன், ஸஜானிகா, அக்ஷயன், ஜதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருநாவலூர், பருத்தித்துறை.

(சி/4725) (2.6.7)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் திருஞானசம்பந்தன்



காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.31, மணல்தரை லேன், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் திருஞானசம்பந்தன் (08.11.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிளாக்கர் அம்பலவாணர்-ஆச்சிமுத்து தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான E.S.பேரம்பலம்-மாணிக்கம் தம்பதியரின் மூத்த மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும், சண்முகநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் ஞானேஸ்வரி(ஆசிரியை/முத்துத்தம்பி ம.வி.), சண்முகரட்ணம்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாமதி(ஜேர்மனி),சுரேணுகா(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வானதி, ஆரதி,சுவாதி(ஜேர்மனி), நிவேதன், கவிதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் ஆசை அப்பப்பாவும், திருச்சிற்றம்பலம் (இங்கிலாந்து),தியாகராஜா(கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் திருநீலகண்டன்(இங்கிலாந்து), திருவாதவூரர் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, E.S.P.நாகரத்தினம்,அன்னபாக்கியம்,காலஞ்சென்ற பாலாமணி மற்றும் E.S.P.கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

இல.31,மணல்தரை லேன்,
கந்தர்மடம்.

(25191)(5-6-7)

## மந்த கதியில் புனரமைப்புப் பணிகள்

வவுனியா,நவ.10

வவுனியா நெடுங்கேணி நயினாமடு வீதியின் புனரமைப்புப் பணிகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவடக்கு நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுமார் நான்கு கிலோ மீற்றர் நீளமான பிரதேச சபைக்குச் சொந்தமான நயினாமடு - சின்னடம்பன் வீதியின் புனரமைப்புப் பணிகள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கடந்த ஆறு மாத காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் அந்தப் பணிகள் இன்று வரை நிறைவுறுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவதைக் காண முடிகின்றது.

இதனால் மக்கள் இந்த வீதியில் பயணிக்கும்போது இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது பருவ மழை பெய்வதுடன் மழை நீர் வீதியில் தேங்கிக் காணப்படுகின்றது. இதனால் வாகனங்களில் பயணிக்க முடியாத நிலையில் இந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது. (சு-6)

# முக்கிய அறிவித்தல்

எமது நிறுவனத்தில் CIFLயாழ் கிளையில் கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தரான **செல்வி தர்ஷிகா துரைநாயகம்** (NIC 916042671V) என்பவர் கடந்த 04.09.2012 தொடக்கம் சேவையில் இல்லாதமையினால் எமது நிறுவனம் தொடர்பான எந்தவித தொடர்புகளையும் (கொடுக்கல் வாங்கல் உட்பட) மேற்கொள்ள வேண்டாம் என வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். மேற்படி திகதியின் பின்னர் மேற்குறிப்பிட்டவருடன் மேற்கொள்ளும் எமது நிறுவனம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்கு நாம் பொறுப்பானவர்கள் அல்ல என நாம் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனிதவள நிர்வாக முகாமையாளர்**
**இன்ரவெஸ்ட் கோப்பரேசன்**
**HEAD OF HR & ADMINISTRATION**
**INTERVEST CORPORATION**

(சி/4779)(5-6-7)

# துயர் பகிர்கின்றோம்



## பொன்னையா திருச்செல்வம்

*(பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் - தமிழரசுக்கட்சி)*

இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரும் தற்போதைய பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினருமான பொன்னையா திருச்செல்வம் அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயர்பகிர்வோர்
இலங்கை தமிழரசுக் கட்சி
இளைஞர் அணி, யாழ். மாவட்டம்.

(சி/4726)(45.6.7)

# மரண அறிவித்தல்



## திருமதி பிலோமினா சூசைப்பிள்ளை (அரியராணி)

கரம்பொன் கிழக்கை, பிறப்பிடமாகவும் பெரியபுலம் வீதி, நாரந்தனை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா சூசைப்பிள்ளை 06.11.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை -அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சூசைப் பிள்ளையின் அன்பு மனைவியும், நீற்றாவின் சகோதரியும், காலஞ்சென்ற அல்பிறட்டின் மைத்துனியும் , அன்ரனி நோபேட் (பேராசிரியர் - புவியியல்துறை -கொழும்பு பல்கலைக்கழகம்), றொபேட், டிசன்ரா (டென்மார்க்), பேணாட் (ஜேர்மனி), ஜெராட் (ஜேர்மனி), றெஜினோல்ட், சுபத்திரா ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஷ்ணவேணி (பேராசிரியை நுண்கலைப் பீடம் - யாழ். பல்கலைக்கழகம்), தயாளம், காலஞ்சென்ற யேசுதாசன் மற்றும் சில்வியா, வலன்ரீனா (ஆசிரியை - கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி) ஆகியோரின் மாமியும், பிரஹல்யா (HSBC கொழும்பு), பிரதர்ஷனா, கமல், சுதா, நீக்கலஸ், மோனிஷா, ஜஸ்மின், யூலியா, தர்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.11.2012) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாரந்தனை புனித பேதுரு பவுல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியபுலம் வீதி,
நாரந்தனை.

தகவல்:
குடும்பத்தினர்.

(25158) (45.6.7)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம்
29.05.1942

ஒடுக்கம்
07.10.2012

## அமரர் நடராசர் பாலகணேசன்

எங்கள் குலவிளக்கு அணைந்து திங்களொன்று கடந்து விட்டது. நினைவுகள் நெஞ்சை விட்டகலாத நிலை. மனம் நொந்து தினம் வாடும் நாம் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வை இன்று (10.11.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் நடத்த உள்ளோம். அத்தருணம் தாங்களும் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, வருகை தரவும்)

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(25165) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Avarankal Kids

## PreSchool



**அன்பான பெற்றோர்களே!**

**இன்றைய உலகில் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் ஆங்கிலக் கல்வியின் தேவை அவசியமாகும். அதனை ஈடு செய்யும் வகையில் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை விருத்தி செய்யும் வகையில் எமது கல்வியானது அமையும்.**

## இன்றே நாடுங்கள்

உங்கள் குழந்தைகளின் கல்விக்காக

## AVARANKAL KIDS

Preschool



புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 02.01.2013
வயது - 3 - 5 வயது வரை
மேலதிக விவரங்களுக்கு
காலம் - 10.11.2012 முதல்
தொடர்பு - காலை 9.00 - 12.00
தொலைபேசி இல- 0213212252, 0776565258

குறிப்பு -
ஆலோசகர் - அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர்)
ப.பாலமுகுந்தன் (ஆசிரியர்)

AVARANKAL KIDS
PreSchool
10th Mile Post,
Sanganamawatha, Avarankal.

(சி/4753)(9.14) **நிர்வாகி.**

---

**வாகனம் விற்பனைக்கு**

NP LE - xxxx
இலக்க இசுஸ் கன்டர் (250) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0779462840

---

advt@uthayan.com
0215671111

---

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 02.11.2012 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது சபையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி தயாளினி நவசசன் அவர்களின் அன்புத் தந்தை

***சீனிவாசகம் பொன்னுத்துரை***

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).

(சி/4745)(3.14)

---

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 ஆம் ஆண்டு பிறந்த பரணி நட்சத்திரம் (கிரகபாவம் 34) உடைய அரசு உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0711576097
0774345654
(சி/4722)(3.14)

---

**சேவை**

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............
றெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(3.6.7) தொ.பே - 0212219686

---

**விற்பனைக்கு**

V T Series உள்ள HONDA UNICON BIKE விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 6203 045
(25199)(6-7-45)

---

**லொறி விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Ashok Leyland லொறி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 3008 766
(சி/4737)(6-7-45)

---

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
வருடாந்த பரிசில் தினவிழாவும், இருபத்தோராவது அகவை நிறைவும்
தலைவர்:- **திருமதி பாலராணி சிறீதரன் (கல்லூரி அதிபர்)**
இடம்:- **கல்லூரி மண்டபம்**
காலம்:- **10.11.2012 காலை 9.00 மணி**
பிரதம விருந்தினர்:- **திரு.சிவலிங்கம் சத்தியசீலன்**
*(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்)*
*பரிசில் வழங்குபவர்:-* ***திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன்***
*இந்நிகழ்வில் பரிசில் பெறும் மாணவ சாதனையாளர்களைப் பாராட்டுவதுடன், தொடரும் காலங்களிலும் கல்வி மற்றும் இணைப்பாடவிதான நிகழ்வுகளில் நிறைந்த சாதனைகளை நிலைநாட்ட எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகள் துணையிருக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.*
- பழைய மாணவர் சங்கம், யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
(சி/4750)
(2-6)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம..........

## மரண அறிவித்தல்

### *தர்மலிங்கம் குணலட்சுமி*



இராஜ வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் குணலட்சுமி 07.11.2012 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தர்ம லிங்கத்தின் அன்பு மனைவியும், விமலாதேவி, வசந்தா தேவி (அச்சுவேலி மத்திய கல்லூரி, ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியை), ரஞ்சனா தேவி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி சங்கீத ஆசிரியை), கலாதேவி (முன்னாள் டாக்டர் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சங்கானை - London) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் விஜயரட்ணம் (London), நவரட்ணம் (London), காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் பாக்கியலட்சுமி (London), கனகலட்சுமி (London) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வைத்தியநாதன் (Chanthiran Gems, Jaffna), அருளானந்தம் (இடைக்காடு மகாவித்தியாலயம் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரும், உப அதிபரும்), சுப்பிரமணியம் (புண்ணிய மூர்த்தி, வதனி ஜிவலறி), சிவநாதன் (London) ஆகியோரின் அன்பு மாமியும், தர்மிந் (London), அபர்ணா (HR Executive) விதுஷன் (Hotel School - SLITHM, Colombo) ஜான்சி (மாணவி - சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), அபிரம்மியா (London) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(வசந்தாதேவி - சங்கீத ஆசிரியை,
அருளானந்தம் - ஆங்கில ஆசிரியர்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.


(25205)(3.6)

---

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பாலகிருஷ்ணன் (இராசையா)

(இளைப்பாறிய இலங்கை புகையிரத நிலைய கொன்றோலர் அதிபர் (S.M), மருதானை)



மலேசியாவைப் பிறப்பிட மாகவும் காரைநகர், தீர்த்தக்கரை றோட் சிவன் கோயிலடியையும் புகுந்த வீடு சடாளி யையும், இல. 38, செட்டித்தெரு நல்லூரையும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலகிருஷ்ணன் நேற்று (09.11.2012) வெள்ளிக்கிழமை தினைகரம்பிட்டி வைரவ சுவாமி திருப்பதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான - ஆசைப்பிள்ளை (டாக்டர் R.M.P மலேசியா) தம்பதியரின் அன்புமருமகனும், சுகிர்தத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தம், மகேசன் (லிங்கி, ஆங்கில ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மாகாணசபை ஆலோசகர் திருகோணமலை கல்வித் திணைக்களம்) மற்றும் பால சிங்கம் (கனடா - முன்னாள் விஞ்ஞான, கணித ஆசிரியர் - காரைநகர் யாழ்ரன் கல்லூரி, அதிபர்- அரியாலை பார்வதி மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற சிவசோதி (லண்டன்) மற்றும் அருட் சோதி (Radio, Malaysia), பரம்சோதி (லண்டன்), ஞானசோதி (லண்டன்), ஜெகசோதி (சந்திரன் அகில இலங்கை சமாதான நீதிவான் (J.P) நல்லூர்), பிரபல பாணந்துறை S.S.S.சண்முகத்தின் மனைவி புனிதவதியின் அன்புச் சகோதரனும், ஸ்ரீ (லண்டன்), சாந்தா (கனடா), சறோயா (கனடா), முரளி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.
AVE #1510
Scarborough - ont
mit. 1 A7 Canada

(25208)(6.8.14)

தகவல்:
க. ஜெகசோதி ( சந்திரன்),
அகில இலங்கை சமாதான நீதிவான்
71, செட்டித்தெரு நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வாழ்த்து

Happy Birth Day



பின்தங்கிய பிரதேசமான நெடுந்தீவின்
அபிவிருத்திக்கும் எமது பல.நோ.கூ.
சங்கத்தின் வளர்ச்சிக்கும் அளப்பரிய
பங்களிப்பை வழங்கிய
பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில்
அபிவிருத்தி அமைச்சரும் ஈ.பி.டி.பி. கட்சியின்
செயலாளர் நாயகருமான

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களின் 55 ஆவது பிறந்த நாளையொட்டி
எல்லா நலன்களும் பெற்று எமது மக்களின் உரிமைக்காகவும்
அபிவிருத்திக்காகவும் தொடர்ந்தும் பணியாற்றி நீடூழி வாழ
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வாழ்த்துவோர் :-*

**தலைவர், உறுப்பினர்கள், முகாமையாளர், பணியாளர்கள்.**
[ச/4736][2-6-7] **நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்.**



சிவமயம்

## வள்ளியம்மன் திருமணப்படலமும் கந்தபுராண பூர்த்தியும்

நாளை (11.11.2012) ஞாயிற்றுக்கிழமை வள்ளியம்மன் திருமணப்படலமும் கந்தபுராண பூர்த்தியும் சிறப்பாக நடந்தேற இறையருள் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு காலைப் பூசை ஆரம்பமாகும். காலை 7.30 மணிக்கு வள்ளியம்மன் திருமணப்படலம் ஆரம்பமாகும். பிற்பகல் 4.00 மணியளவில் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று முருகப் பெருமான் எழுந்தருளி வீதி வலம் வந்து அருள் பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். அனைவரும் வருக முருகன் அருள் பெறுக.

**தர்மகர்த்தா சபையினர்,**
**தச்சன்தோப்பு, சிந்தாமணி விநாயகர் ஆலயம்,**
**கரவெட்டி.** (ச/4742) (2-6.7)



## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
*No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd), Jaffna*
Phone - 0212228250

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2012**

அனைத்து கற்கைநெறிகளும் 80% கட்டணக்கழிவுடன்
அண்மைய பதிப்பு மென்பொருட்களுடாக வரையறையற்ற
செய்முறை பயிற்சியுடன்

| Courses | Fee | Duration |
|---|---|---|
| Dip.in Microsoft Office -2007 | 2000 | 3Months |
| Dip.In Desktop Publishing | 2000 | 4Months |
| Dip.in Webpage Designing | 2000 | 4Months |
| Dip.in Graphic Designing | 2000 | 4Months |
| Dip.in Hardware | 2000 | 3Months |
| Dip.in Accounting Package | 3000 | 4Months |
| Dip.in Multimedia | 3000 | 4Months |
| Dip.in Video Editing | 3000 | 3Months |

**வகுப்புக்கள் ஆரம்பம் 10AM / 03PM**
**Batch I : 10.11.2012 Batch II : 11.11.2012**
**Batch III : 14.11.2012 Batch IV : 16.11.2012**

(25187)(2 6 7)



**வீட்டுக்கிருத்திய நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது**

இன்று (10.11.2012) சனிக்கிழமை
நடைபெற இருந்த
திருமதி பொன்னையா இராசம்மாவின்
வீட்டுக்கிருத்திய நிகழ்வு தவிர்க்க
முடியாத காரணத்தினால் நடை
பெறமாட்டாது. இது பற்றிய விபரம்
பின்னர் அறிவிக்கப்படும்.

குடும்பத்தினர்.
சங்கானை. (ச/4735)(5 6 7) 077 659 2048


## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக்
கடமையாற்றும் திருமதி தயாளினி நகேசன்
அவர்களின் அன்புத் தந்தை

**சீனிவாசகம் பொன்னுத்துரை**

கடந்த 02.11.2012 வெள்ளிக்கிழமை அன்று
இறைபதமடைந்துவிட்டார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**

(ச/4735)(5-6-7)

## ஈக்களின் பெருக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

குடாநாட்டில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில் தற்போது ஈக்களின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தற்போதைய காலநிலை வேறுபாடே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யாழ். நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் இவற்றின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

பகல் வேளைகளில் ஈக்களும் இரவு வேளைகளில் நுளம்புகளும் மக்களை வாட்டி வதைக்கின்றன.

அதிகரித்துக் காணப்படும் ஈக்கள், நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, வடிகால்கள் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாமையும் ஈக்கள், நுளம்புகள் பெருக வாய்ப்பாக உள்ளது என்றும் கூறப்பட்டது.

(ம-17)

## கைதடியில் நூலக தின நிகழ்வு

கைதடி, நவ.10

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடிப் பொது நூலக தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு தினமும் இன்று முற்பகல் 9 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கிக் கைதடிக் கிளை முகாமையாளர் செல்வி. சுமங்களா நடராசாவும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் செல்வி தி.தர்சினி, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ச.ஜெகதீஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (16-288)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



உதய நிலவே-நின்
உறவு வெளி வானத்தின்
உறக்கம் கலைந்ததம்மா!
உன் அயல் நட்சத்திரங்கள்
ஒவ்வொருநாள் இரவோடும்
உருகிக் கிடக்குதம்மா!
காயமே பொய்யென்று
கலைத்து விட முடியாதுன் நினைவு!
அம்மா காயத்திரி !
ஆறாத காயத்தோடெம்
அழுகுரல் கேட்காத தூரத்தில்-
அதற்கிடையில்- ஏனம்மா?

மலர்வு
06-06-1970

உதிர்வு
09-10-2012

### திருமதி காயத்திரி பாலமுரளீதரன்
**( ஆசிரியை, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி)**

கடந்த (09.10.2012)அன்று அமரத்துவமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் திருமதி காயத்திரி பாலமுரளீதரன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (10.11.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை சொர்ணாம்பிகை மண்டபத்தில் (T.C.T) இடம்பெறும். இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இல: 19, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(ச/4733) (2-6-7)

## மரண அறிவித்தல்

### சண்முகரட்ணம் பிறேமசுதன்



யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகரட்ணம் பிறேமசுதன் நேற்று முன்தினம் (08.11.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகரட்ணம் - ஜெகஜோதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும் வசந்தியின் அன்புக் கணவரும், கோபிநாத் (சுவிஸ்), பிரசன்னாத் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேம்குமார் (Bank of Cylon), பிறேம்மோகன் (சுவிஸ்), பிறேமஜெகன் (சுவிஸ்), பிறேம தர்சினி (இத்தாலி), பிறேமலோஜினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மீரா (சுவிஸ்), மதுரா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், தருமநாயகி, செந்தில்செல்வம் (சுவிஸ்), பவானி (சுவிஸ்), சாந்தி (சுவிஸ்), காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தில்குமரன் (சுவிஸ்), அருள்குமரன், புரந்தகி (சுவிஸ்), கோகுலன் (லண்டன்), துவாரகி (கனடா), கோகிலா (லண்டன்), விஜி, அபி ஆகியோரின் அன்பு மாமனும், சாரங்கன், சாம்பவி, சாகிஷன், யாதனா, ஆரவன், நேமி, மேகா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.11.2012) திங்கட்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்னவாசா",
[illegible] வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
**மருமகன், மகள்**
(திரு.திருமதி குமரன் மதுரா)

(25200) (2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோம்ஸ் வெற்றிக் கிண்ணக் கூடைப்பந்தில் யாழ்.இந்து, திருக்குடும்பக் கன்னியர் வாகை

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் விளையாட்டு அவையும் இணைந்து பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் நடத்திய டபிள்யூ.டி.ஹோம்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடமும், ஆண்கள் பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரியும் சம்பியனாகின. இந்தத் தொடரின் இறுதியாட்டங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

## பெண்களுக்கான இறுதியாட்டத்தில்....



யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட அணி வீராங்கனைகள்



போட்டியின் ஒரு கட்டத்தில்

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட அணி 33:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 26:18 என்ற புள்ளி அடிப்படையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியை வீழ்த்தி மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இந்தத் தொடரில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி சார்பில் கிருசாந்தினி, உடுவில் கல்லூரி அணி சார்பில் கமலினி மில்ஸ், யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட அணி சார்பில் துஷாரா, இராமநாதன் மகளிர் கல்லூரி அணி சார்பில் சுவிஸ்சனா ஆகியோர் சிறந்த வீராங்கனைகளாகத் தெரிவுசெய்யப் பட்டனர்.

அத்துடன் இறுதியாட்டத்தில் ஆட்ட வீராங்கனையாக யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட அணியைச் சேர்ந்த பெனிட்ராவும் தொடர் ஆட்ட வீராங்கனையாக இராமநாதன் மகளிர் கல்லூரி அணியைச் சேர்ந்த குணதீபாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ங-23)



## ஆண்களுக்கான இறுதியாட்டத்தில்....





யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரர்கள்



மோதலில் வீரர்கள்

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் கிருஷாந்தன், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் அனோஜன், யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் சதீஸ்குமார், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் மதுமியன் ஆகியோர் சிறந்த வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.**

ஹோம்ஸ் வெற்றிக் கிண்ண ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது.

நான்கு சுற்றுக்களைக் கொண்ட போட்டியாக நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் மூன்று சுற்றுக்கள் முடிவடைந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நடைபெறவில்லை. அதன்போது முதல் மூன்று சுற்றுக்களிலும் ஆதிக்கம் செலுத்திய யாழ்.இந்துக் கல்லூரி அணி 32:24 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

எனவே நான்காவது சுற்றை விளையாட முடியாத நிலை ஏற்பட்டதால், இரு அணிகளின் தலைவர்களுடனும் கலந்துரையாடிய பின்னர், முதல் மூன்று சுற்றுக்களிலும் முன்னிலை பெற்றிருந்த யாழ்.இந்துக் கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இதேவேளை இறுதியாட்டத்துக்கு முன்னதாக ஆண்களுக்கான மூன்றாமிடத்துக்கான ஆட்டம் நடைபெற்றது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இந்தப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 28:21 என்ற புள்ளி அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வெற்றிகொண்டு மூன்றாமிடத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இந்தத் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி சார்பில் கிருஷாந்தன், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் அனோஜன், யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் சதீஸ்குமார், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் மதுமியன் ஆகியோர் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாட்டத்தில் ஆட்டநாயகனாக யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரன் [illegible] தொடர் நாயகனாக யாழ்.மத்திய கல்லூரி அணி வீரன் தயாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்மராட்சி கல்வி வலயத்தின் சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 10

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான தனிநபர் சதுரங்க சுற்றுப்போட்டி அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வை தென்மராட்சி கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் தலைமையேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் போட்டிகளை தென்மராட்சி கல்விவலய ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீகாந்தா வழிநடத்த, மத்தியஸ்தராக தி.இராஜசிங்கம் கடமையாற்றினார். இந்தச் சுற்றுத் தொடரில் வெற்றிபெற்றோர் விவரம் :-

**9 வயதின் கீழ் - ஆண்கள்**

1 ஆம் இடம் : சி.பிரவீன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

2 ஆம் இடம் : ச.சஜிந்தன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

3 ஆம் இடம் : ந.ஆகாஷ், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை.

**9 வயதின் கீழ் - பெண்கள்**

1 ஆம் இடம் : சி.வினோஜா, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

2 ஆம் இடம் : ம.நித்தியா,சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

3 ஆம் இடம் : பு.கிருஷாலி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**10 வயதின் கீழ் - ஆண்கள்**

1 ஆம் இடம் : சி.கஜிந்தன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

2 ஆம் இடம் : அ.பிரணவன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

3 ஆம் இடம் : செ.கீர்த்திகன், சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரி.

**10 வயதின் கீழ் - பெண்கள்**

1 ஆம் இடம் : கு.திசோதா, சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரி.

2 ஆம் இடம் : க.கவிசனா, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

3 ஆம் இடம் : கோ.சஞ்சிகா, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**11 வயதின் கீழ் - ஆண்கள்**

1 ஆம் இடம் : க.கஜராஜ், சாவகச்சேரி, இந்து ஆரம்பப் பாடசாலை.

2 ஆம் இடம் : ஜெ. தேனுஜன், கச்சாய் அ.த.க. பாடசாலை.

3 ஆம் இடம் : க.அரவிந்தன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**11 வயதின் கீழ் - பெண்கள்**

1 ஆம் இடம் : உ.மிதுலா, சாவகச்சேரி, மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் : த.சஜீகா, கொடிகாமம் ஆரம்ப பாடசாலை.

3 ஆம் இடம் : ஜெ.ஜெயமதுரா, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**12 வயதின் கீழ் - ஆண்கள்**

1 ஆம் இடம் : ச.அஜந்தன், சாவகச்சேரி, இந்துக் கல்லூரி.

2 ஆம் இடம் : பா.கிந்துஜன், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

3 ஆம் இடம் : உ.தர்மிலன், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.

**12 வயதின் கீழ் - பெண்கள்**

1 ஆம் இடம் : சி.சங்கவி, சாவகச்சேரி, இந்துக் கல்லூரி.

2 ஆம் இடம் : க.லாவண்யா, மீசாலை, வீரசிங்கம் மத்திய கல்லூரி.

3 ஆம் இடம் : இ.கேதுஷா, கொடிகாமம், திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். (ங-253)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் இளைஞர் அபிவிருத்தி பணிப்பாளர் டாக்டர் மானில் பெனாண்டோ, பிரதம நிறைவேற்று அதிகாரி கிருஷாந்த பேரேரா, உதவி நிறைவேற்று அதிகாரி அனுர டீசில்வா, போட்டிக்குழுத் தலைவர் காமிரத்தின ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தபோது யாழ்.லீக்குக்காக அமைக்கப்பட்டு வரும் கட்டட நிர்மாணப் பணிகளை பார்வையிட்டனர். (ங-23)



# ஆபிரிக்காவின் அசத்தல் ஆரம்பம்

அம்லா, கலிஸ் ஜோடியின் அபார ஆட்டத்தினால் தென்னாபிரிக்க அணி முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் 2 இலக்குகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது.

பிறிஸ்பேணில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றைய நாள் ஆட்ட முடிவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதலாவது இலக்காக அணித்தலைவர் கிரேம் ஸ்மித்தை அணி 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தென்னாபிரிக்கா இழந்தது. எனினும் இரண்டாவது இலக்குக்காக அல்விரோ பீற்றர்சனும், ஹசிம் அம்லாவும் 90 ஓட்டங்களையும், அதன் பின்னர் மூன்றாவது இலக்குக்காக ஹசிம் அம்லாவும், ஜக்ஸ் கலிஸும் பிரிக்கப்படாத 139 ஓட்டங்களையும் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களையும், ஜக்ஸ் கலிஸ் ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜேம்ஸ் பற்றின்சன், நதன் லையன் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். (5)

# டெஸ்ட் ஆட்டங்களைக் கொல்ல வேண்டாம்

டெஸ்ட் போட்டியைப் பாதுகாக்குமாறு இலங்கைக் கிரிக்கெட் சபையை இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க கோரியுள்ளார். அடுத்த வருடம் இடம்பெறவிருந்த தென்னாபிரிக்காவிற்கெதிரான டெஸ்ட் தொடரைப் பிற்போட இலங்கைக் கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளதையடுத்தே அர்ஜுன ரணதுங்க இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

டெஸ்ட் தொடரொன்றை இல்லாது செய்தல் மாபெரும் குற்றமெனத் தெரிவித்த அர்ஜுன ரணதுங்க, இந்தத் தீர்மானத்திற்குப் பின்னாலுள்ள சிந்தனையைத் தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை எனத் தெரிவித்தார்.

தொடரொன்றைத் தாமதப்படுத்துதல் என்ற பேச்சில் தனக்கு நம்பிக்கையில்லை எனத் தெரிவித்த அவர், நடத்துவதற்கு தங்களுக்கு நேரம் கிடையாது எனத் தெரிவித்து இலங்கைக் கிரிக்கெட் சபை அடுத்த வருடம் இந்தத் தொடரைக் கைவிடுவதாக அறிவித்தாலும் தான் ஆச்சரியப்படப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

இந்த முடிவு தொடர்பாக இலங்கையின் சிரேஷ்ட வீரர்கள் கருத்தெதனையும் தெரிவிக்காது காணப்படுகின்றமை குறித்துத் தான் ஆச்சரியமடைவதாகத் தெரிவித்த அவர், ஆனால் இலங்கையின் இளைய வீரர்கள் குறித்துத் தான் அதிகம் கவலையடைவதாகத் தெரிவித்தார்.

டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன போன்ற வீரர்கள் டெஸ்ட் தொடர்களில் பங்குபற்றுவதன் மூலம் ஏராளமாகக் கற்றுக் கொள்ள முடியும் எனவும், அந்த வாய்ப்பு அவர்களுக்கு மறுக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர், இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.(5)

# இலங்கை டெஸ்ட் அணி அறிவிப்பு

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடருக்கான இலங்கை டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹேல ஜெயவர்தன தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியில் தரிந்து கௌஷால் புதுமுக வீரராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

15 வீரர்கள் கொண்ட குழாமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியில் இலங்கையின் வழக்கமான வீரர்களே இடம்பெற்றுள்ளனர்.

துடுப்பாட்ட வீரர்களாக மஹேல ஜெயவர்தன, அன்ஜலோ மத்தியூஸ், குமார் சங்ககார, திலகரட்ண டில்ஷான், தரங்க பரணவிதான, பிரசன்ன ஜெயவர்தன, டினேஷ் சந்திமால் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பந்துவீச்சாளர்களாக சுராஜ் ரந்தீவ், ரங்கன ஹேரத், நுவான் குலசேகர, சானக வெலகெதர, ஷமின்ட எரங்க, தம்மிக்க பிரசாத், தரிந்து கௌஷால் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். குறிப்பிடத்தக்க வீரர்களாக திஸர பெரேரா, லஹிரு திரிமன்ன ஆகியோருக்கு இந்தத் தொடரில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**அறிவிக்கப்பட்டுள்ள 15 பேர் கொண்ட அணி:**

மஹேல ஜெயவர்தன, அன்ஜலோ மத்தியூஸ், குமார் சங்ககார, திலகரட்ண டில்ஷான், தரங்க பரணவிதான, திலான் சமரவீர, பிரசன்ன ஜெயவர்தன, சுராஜ் ரந்தீவ், ரங்கன ஹேரத், டினேஷ் சந்திமால், நுவான் குலசேகர, சானக வெலகெதர, ஷமின்ட எரங்க, தம்மிக்க பிரசாத், தரிந்து கௌஷால். (5)

# காணொலி பார்த்துப் படிக்கும் இங்கிலாந்து

இந்திய சுழலை சமாளிக்க, டிராவிட்டின் பழைய காணொலிகளைப் பார்த்து துடுப்பாட்ட நுணுக்கங்களைக் கற்க இங்கிலாந்து வீரர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்திய துணைக்கண்டத்து ஆடுகளங்களில், இங்கிலாந்து அணியினர், பொதுவாக சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் திணறுகின்றனர். எதிர்வரும் இந்தியத் தொடரிலும் சுழல் சோதனை தொடரும் என்று, இங்கிலாந்து வீரர்கள் நம்புகின்றனர்.

இந்த நிலையில், ஓய்வு பெற்ற இந்திய வீரர் டிராவிட், சுழற்பந்து வீச்சுக்கு எதிராக விளையாடும் காணொலிகளைப் பார்த்து, பாடம் கற்க முடிவு செய்துள்ளனர். இதுகுறித்து இங்கிலாந்து வீரர் இயன் பெல் கூறுகையில், சுழற்பந்து வீச்சாளர்களை சந்திக்கும் போது டிராவிட் எப்படி கால்களை நகர்த்தி விளையாடுகிறார், பந்தை அடிக்கும் போது என்ன செய்கிறார் என்பதை, அவரது காணொலிகளைப் பார்த்து கற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளோம், என்றார்.

**வெற்றிக்கு முயற்சிப்போம்**

மற்றொரு இங்கிலாந்து வீரர் பிரையர் கூறியதாவது:

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் எப்போதுமே சவாலானது. இங்கு டெஸ்ட் தொடரை வென்று 28 ஆண்டுகள் ஆகியுள்ளது. இந்த முறையும் டெஸ்ட் தொடர் மிகவும் பரபரப்பாக இருக்கும்.

இருப்பினும், இந்திய பந்து வீச்சாளர்களுக்கு எதிராக எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் எப்படி செயல்படுகின்றனர் என்பதைப் பொறுத்து தொடரின் முடிவு அமையும். கடந்த காலங்களில் செய்த தவறுகளை தவிர்த்து, வெற்றிக்கு முயற்சிப்போம்.

**ஸ்ரோரஸ் இழப்பு**

கடந்த 2006 இல் பிளின்டொப், 2008 இல் ஸ்ரோரஸ் தலைமையில் வந்த அணிகளை விட இப்போதுள்ள அணி அதிக அனுபவம் வாய்ந்தது. பீட்டர்சன், இயன் பெல், அலெஸ்டர் குக் ஆகியோர் இந்தியாவில் விளையாடியுள்ளனர். அதேநேரம், முன்வரிசை வீரர் அனுபவ ஸ்ரோரஸ் இல்லாதது இழப்பு தான்.

ஏனெனில், சுழற்பந்து வீச்சை நன்றாக எதிர்கொள்ளும் திறன்படைத்த இவர் போட்டியின் முடிவை மாற்றி விடுவதில் வல்லவர். அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் ஸ்டீவன், ஸ்டூவர்ட் புரோட் இருவரும் முதல் டெஸ்ட் ஆரம்பிக்கும் முன்னர் குணமடைந்து விடுவார்கள் - என்றார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலதுறை வீரர் சிந்தக்க ஓய்வு

இலங்கையின் சகலதுறை வீரர் சிந்தக்க ஜெயசிங்க முதற்தரப் போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். இந்த ஓய்வினை அவர் கொழும்பில் நேற்று முன்தினம் வைத்து அறிவித்தார்.

இலங்கை அணி சார்பாக 5 'ரி-20' சர்வதேசப் போட்டியில் பங்குபற்றிய அவர் ஒரு சகலதுறை வீரராவார்.

5 'ரி-20' சர்வதேசப் போட்டியில் 3 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய அவர் அதிகபட்சமாக 38 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஏனைய இரண்டு இன்னிங்ஸ்களிலும் ஆட்டமிழந்திருக்கவில்லை. அவர் இறுதியாக 2010 ஆம் ஆண்டு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

142 முதற்தரப் போட்டியில் பங்குபற்றிய அவர் 11 சதங்கள், 34 அரைச்சதங்கள் உட்பட 31.61 என்ற சராசரியில் ஓட்டங்களைப் பெற்றதோடு, 104 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார். அவரது அதிகபட்ச ஓட்டங்களாக ஆட்டமிழக்காத 173 ஓட்டங்கள் காணப்படுவதோடு, சிறந்த பந்துவீச்சாக 44 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளைக் கைப்பற்றியமை காணப்படுகிறது.

14 வருடங்கள் உள்ளூர்ப் போட்டியில் பங்குபற்றிய போதிலும் இலங்கையின் தேர்வாளர்கள் தனக்கான வாய்ப்புக்களை வழங்கவில்லை எனத் தெரிவித்த அவர், கடந்த ஒரு தசாப்தமாக தேர்வாளர்கள் சில வீரர்களுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கியதாகவும், அவர்கள் சிறப்பாகப் பிரகாசிக்காத போதும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

34 வயதான சிந்தக்க ஜெயசிங்க, எதிர்வரும் காலங்களில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ளூர் லீக் போட்டியில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். (5)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

விற்பனைக்கு
பல இன புதியவகை பூங்கன்றுகள், பூச்சாடிகள் மிகக்குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு.
917,933, 939 தட்டாதெரு சந்தி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(25211)(3.14)

விசேட கருத்தரங்கு
24 ஆம் திகதி நடைபெறவுள்ள மக்கள் வங்கி போட்டிப்பரீட்சைகான விசேட கருத்தரங்கு
By: P. உமாசங்கர் கமல்தாசன்
காலம்: 14.11.2012 புதன் 9.00 - 5.00
Note: இறுதியாக நடைபெற்ற வங்கி போட்டிப் பரீசைக்கான வினாத்தாள்கள் உட்பட புதிய வினா முறைகள் ஆராயப்படும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்
மேலதிக தொடர்பு: 0774696695
நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி/4757)(3.14)

அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு
எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று 10.11.2012 சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் ( ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
- இயக்குநர்.
(சி/4560)(6.7.8)

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
G.C.E O/L மாணவர்களுக்கான
English Paper Class (துரித மீட்டல்)
By: B.SUBATHEESAN
Commencement - 11.11.2012 (ஞாயிறு - 4.30 pm)
Classes - Monday - Friday (6.30 am - 7.30 am)
Venue - Veenus College, Sivaparakasam Rd, Vannarpannai.
English பாடத்தில் உயர்சித்திக்கு விரையுங்கள்.
T.P:0774004033
(25187)(3.14.6)

கணினி திருத்தம்
(Computer Repair)
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.
அழையுங்கள்- 0779086737
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.

கருத்தரங்கு
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மக்கள்வங்கி பரீட்சைகளுக்கான கருத்தரங்குகள் சனி, ஞாயிறு தினங்களில் 12.00 - 5.00 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ்.ஆஸ்பத்திரி வீதி,கொமர்ஷல் வங்கியருகில்).

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
ஆலோசனை இறுதிநாள் 15.12.2012
மீளவும் எப்போ ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை - எனவே அரியவாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துவோம்.........
* ஆஸ்திரேலியா விசா ஆலோசனையில் வடபுலத்தில் தனித்துவமான பல வெற்றிகளைச் சந்தித்து வரும் உங்கள் "திசைகாட்டியில்"........
* இலங்கையின் தென்பகுதியிலிருந்தும் விசா ஆலோசனை செயற்திட்டங்களிற்குரிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுவது வெளிப்படை உண்மை.
* இதனால் கிடைத்த பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களிற்கு உரிய பரிகாரம் இயற்றப்பட்ட பின்னரே
* புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என எம் கௌரவ இயக்குநர் சபை தீர்மானத்துள்ளது.
* எதிர்வரும் 15.12.2012 உடன் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்படும் மேற்படி ஆலோசனை வழங்கல் எப்போ ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.
எனவே விரைந்து வாருங்கள்
திசை காட்டி பிறைவேற் லிமிட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016
(25194)(3.6)
டிசெம்பர் 1 ஆம் திகதி முதல் பஸ் போக்குவரத்துள்ள 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு "திசைகாட்டி" இடம்மாறும்.
புதன்கிழமை விடுமுறை

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்
Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
புதிய வகுப்புக்கள் Batch I - 05-11-2012 Batch II - 07-11-2012 Batch III - 10-11-2012
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

புத்தகம் இணையத்தளம், தமிழ் மென்பொருள்
- அறிமுக விழா -
இடம் : நாவலர் மண்டபம் - யாழ்ப்பாணம்
காலம் : 10 கார்த்திகை 2012 சனிக்கிழமை இன்று
நேரம் : மாலை 3.30 (10/11/2012)
ஈழத் தமிழர்களின் சர்வதேச புத்தகக் கடை!
புத்தகம்.com




வெளியிடப்படும் மென்பொருள்கள்
மென்தமிழ், பொன்மொழி, பொன்பேனா
மென்தமிழ்
தமிழ்ச் சொல்லாளர் - சொற்பிழை திருத்தி, சந்திப்பிழை திருத்தி, தமிழ் எழுத்துரு மற்றும் குறிமாற்றி, எண் - எழுத்து மாற்றி, பலவகை அகராதிகள்
பொன்மொழி
தமிழுக்குத் தரமான, விரிவான சொல்திருத்தியுடன் அகராதி, அகரவரிசைபாக்கம் என வசதிகளைக் கொண்ட ஒரு மென்பொருள்.
பொன்பேனா
உங்களது கையெழுத்தினை உடனடியாக தமிழில் தட்டச்சு செய்துதரும் மென்பொருள்.
தொடர்புகளுக்கு : 078 284 5010
- அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் -

தீபாவளியை முன்னிட்டுஇன்று மட்டும்
மாபெரும் ஏல விற்பனை
இந்த அரிய சந்தர்ப்பத்தினை தவறாது பயன்படுத்திக்கொள்ளுங்கள்
உங்கள் பணத்தினை மிச்சப்படுத்த மங்களா காட்சியறை நிறுவனத்தினர் தீபாவளியை முன்னிட்டு இன்று மட்டும் ஒரு இடத்திலும் வாங்க முடியாத விலையில் பொருள்களை நீங்கள் ஏலத்தில் விலையினை தீர்மானித்து பெற்றுக் கொள்ளலாம்.
கட்டில் - 2000/=
டபிள் மெத்தை - 2000/=
பிளாஸ்ரிக் ரீப்போ - 100/=
Stell அலுமாரி - 4000/=
Tv Stand - 3500/=
Roling Chair - 2500/=
Computer Table - 2500/=
நில கண்ணாடி மேசை - 2000/=
இன்னும் பல பல பொருள்கள் பிரத்தயோகமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி தொடக்கம் 3 மணி வரை,
ஏல விற்பனை நேரம் : பி.ப 3 மணி தொடக்கம் பி.ப. 6 மணி
குறிப்பு : ஏலத்தில் நீங்கள் எடுக்கும் பொருள்களை உடனடியாக பணத்தினை செலுத்தி எடுத்து செல்லவேண்டும்.
மங்களா காட்சியறை 53 [illegible] யாழ்ப்பாணம். 021 222 8367, 021 4921099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நம்பிக்கை
எதிர்காலத்துக்கு ஒளி
அளிக்கும்.
-தாமஸ்மூர்

வார வசந்தம்

01

உதயன் 10 நவம்பர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு




# வெறுப்பு எனும் கறுப்பை துடைத்தெறிவோம்

"வெறுப்பு எனும் கறுப்பு உணர்வை துடைத்து எறிய வேண்டும். அது முடியுமா? ஏன் முடியாது. குழந்தைகளாக இருக்கும்போது அந்த உணர்வு இல்லையே. வளர வளரத்தானே வெறுப்பு உணர்வும், வேர்விட்டு படர்ந்து விருட்சமாக வளர்ந்தது. வெறுப்பு என்ற விரும்பத்தகாத ஒரு குணத்தை மட்டும் நீங்கள் கைவிட்டுப் பாருங்கள், உலகில் உள்ள அனைவருமே உங்களுக்கு நண்பர்களாகத்தான் இருப்பார்கள்.

உலகில் உங்கள்முன் எதிர்ப்படும் எல்லோரையும் நண்பர்களாக்கிக் கொள்ள விரும்புகிறீர்களா?

அப்படியானால் வெறுப்பு எனும் கறுப்பு உணர்வை துடைத்து எறிய வேண்டும். அது முடியுமா? ஏன் முடியாது. குழந்தைகளாக இருக்கும்போது அந்த உணர்வு இல்லையே. வளர வளரத்தானே வெறுப்பு உணர்வும், வேர்விட்டு படர்ந்து விருட்சமாக வளர்ந்தது. வெறுப்பு என்ற விரும்பத்தகாத ஒரு குணத்தை மட்டும் நீங்கள் கைவிட்டுப் பாருங்கள், உலகில் உள்ள அனைவருமே உங்களுக்கு நண்பர்களாகத் தான் இருப்பார்கள்.

குழந்தைகளாக இருக்கும் போது மனதில் துளிர்விடாத வெறுப்பு, சூழ்நிலையின் தாக்கத்தாலும், உடன் பழகுபவர்களாலும், வளர்ப்பாலும் நம் மனதில் மெல்ல மெல்ல குடிபுகுகிறது. விளைவு? பக்கத்து வீட்டுக்காரரிடமிருந்து, பக்கத்து நாடு வரை நமது வெறுப்பைக் காட்ட நேரிடுகிறது.

இந்த வெறுப்புணர்வால் நமக்கு கிடைப்பது ஒன்றுமில்லை. நண்பர்களின் வழிகாட்டல், உறவினர்களின் உதவி, பெற்றோர்களின் பாசம், ஆகியவற்றை இழப்பதுதான் மிச்சம். கடைசியில் நாம் தனிமரமாக நிற்க வேண்டியதுதான்.

பல வகைகளில் வெறுப்பு உருவெடுக்கும். ஒருவரின் இனம், குணம், நிறம், பேச்சு, மதம், பொருளாதாரம், பழக்கவழக்கம் உள்ளிட்ட பல காரணங்களால் இந்த நச்சுக் குணம் நம் மனதில் குடி கொள்ளும். நாம் பேசும் வெறுப்பான வார்த்தைகள், நம்மிலிருந்து தெறித்து, எதிர்ப்படுபவர் மீது விழும்போது, அவர்களுடைய மனநிலையைப் புரிந்து கொள்ள தவறிவிடுகிறோம். உங்கள் மனதிற்குள் வெறுப்புணர்வு நுழைந்து விட்டால் அவ்வளவுதான். அனைவருமே உங்களுக்கு எதிரியாகத் தோன்றுவார்கள். பிறருடைய வளர்ச்சி உங்களை ஏளனம் செய்வது போலத் தெரியும். வெறுப்புணர்ச்சியை ஒழிக்க இங்கே தரப்பட்டுள்ள 10 வழிகள் நிச்சயம் உங்களுக்கு உதவும்.

**செயற்பாடு-**

நீ எவ்வாறு நினைக்கிறாயோ அவ்வாறே வளர்வாய். இது ஒரு பழமொழி. உங்களுடைய நினைப்பும், செயற்பாடும் மிகவும் முக்கியம். உங்களின் செயற்பாடும், பேச்சும் எவ்வாறு அமைய வேண்டும். பொறுமையையும், அன்பையும் வெளிக்காட்டுவதாக இருக்க வேண்டும். உங்களுடைய செயற்பாடே, அனைத்து கெட்ட நிகழ்வுகளுக்கும், நல்ல நிகழ்வுகளுக்கும் அடிப்படை. உங்களுடன் பழகுவோரிடம் பொறுமையையும், அன்பையும் உணர்த்த வேண்டும். இனம், நிறம், சாதி, மதம் பொருளாதாரக் காரணிகளால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு இருக்கும் மக்களிடம் நாம் அன்பு காட்ட வேண்டும். அவர்களுக்கு ஆதரவான, ஆறுதலான வார்த்தைகளை வழங்க வேண்டும். நம்முடன் பழகுவோரிடமும் இந்த வெறுப்புக் காரணிகளை வெளிக்காட்டக் கூடாது. இந்தப் பழக்கத்தை உங்கள் மனதில் தொடர்ந்து நிலைநிறுத்தினால், நாளடைவில் உங்கள் வெறுப்புணர்வு ஒழிந்து அன்பு மலரும்.

**ஒருங்கிணைப்பு -**

தனிப்பட்ட நபர் மீதோ, அல்லது குழு மீதோ உங்களுக்கு வெறுப்புணர்ச்சி இருக்கலாம். அந்தக் குழுவினரையோ அல்லது தனிப்பட்ட நபரையோ நீங்கள் ஒதுக்கி வைப்பதுபோல், வேறு பலரும் ஒதுக்கி வைக்கலாம். வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நீங்கள் இருக்க வேண்டும். வெறுப்புணர்ச்சி உள்ளவர்களை ஒன்றிணைத்து, பொறுமையின் முக்கியத்துவத்தையும், வெறுப்புணர்ச்சியின் பாதிப்புகளையும் எடுத்துரைக்க வேண்டும். வெறுப்புணர்ச்சி ஏன் மனதில் தோன்றுகிறது என்பதை ஒவ்வொருவரிடமும் கேட்டறிந்து அதை மனதிலிருந்து அகற்றுவதற்கான ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். தொடக்கத்தில் வெறுப்புணர்ச்சி உள்ளவர்களை ஒன்றிணைப்பது சிறிது சிரமமாக இருக்கும். நாளடைவில் குழு முறையில் அமர்ந்து அவர்களுடன் நீங்கள் கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டும். இதன் மூலம் விரைவில் நல்ல மாற்றம் ஏற்படுவது நிச்சயம். பல்வேறு குணங்களைக் கொண்டோருடன் கலந்துரையாடி, மனம் விட்டுப் பேசுவதன் மூலம் நட்புறவு வளர்ந்து வெறுப்பு மறைவதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே, வெறுப்புணர்ச்சியுள்ள நபரை ஒருங்கிணைத்து அவர்களுடன் கலந்துரையாடுங்கள். அந்தக் குணத்தை களைவதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

**ஆதரவு -**

நமது வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு ஆதரவு அளிப்பது மிகவும் முக்கியம். உடல் ரீதியாக, மன ரீதியாக, பாலின ரீதியாக மட்டுமின்றி, இனம், நிறம், சாதி பொருளாதார அடிப்படையில் கூட வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம். தாக்கப்பட்டிருக்கலாம். அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளில் இருந்து, சட்ட உதவிகள் வரை அனைத்து வகையிலும் ஆதரவு அளிப்பது அவசியம். மற்றவர்களுக்கு உதவி செய்வதை சிலர் ஏற்றுக் கொள்ள மறுப்பார்கள். வேறு சிலரோ, யாரேனும் உதவி செய்ய முன் வர மாட்டார்களா என்று ஏங்கியிருப்பார்கள். அத்தகைய நபர்களை இனம் கண்டு ஆதரவு அளிப்பது வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும். நாம் மட்டும் ஆதரவு அளித்தால் போதாது. நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கும்படி செய்ய வேண்டும்.

வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்ட பிரிவினரை நாம் அடிக்கடி சந்தித்து பேச வேண்டும். அவர்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டும். வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்டோம் என்ற உணர்வு அவர்களுக்குள் மெல்லமெல்ல மறைவதற்கு இவை உதவும். நீங்கள் தனியாக இல்லை. நான் உங்களுடன் இருக்கிறேன் என்ற நம்பிக்கையை அளிக்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். மதநம்பிக்கை உடையவர்களாக இருந்தால், அந்தந்த மதத்திற்குரிய சின்னங்கள், கடவுள்களின் படங்களை அளித்து நம்பிக்கை ஊட்டலாம். வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் வெறுப்புணர்வை பரப்பும் குழுக்களால் பாதிக்கப்படலாம். வார்த்தைகளாலோ அல்லது உடல்ரீதியாகவோ அவர்கள் தாக்கப்படலாம் என்று நீங்கள் நினைத்தால் அத்தகையோருக்கு பாதுகாப்பு அளிக்கலாம்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி
மெய்யியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்

# பல்கலைக்கழக கல்வியின் தரத்தை உயர்த்தப்பாடுபட்ட துணைவேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது வளர்ச்சிப் பாதையில் 34 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இந்தக் காலத்துள் பல்கலைக்கழகச் சூழலில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த காலம் எனக் கூறமுடியாது. பல்கலைக்கழக வளர்ச்சியைப் பலவீனப்படுத்தும் பல்வேறு தடைகள், இடர்பாடுகள், அமைதியற்ற அசாதாரண சூழ்நிலைகள் நிறைந்தே காணப்பட்டன. ஆயினும் இந்தக் கால எல்லைக்குள்ளும் கல்வித் துறையில், ஆராய்ச்சிப் பணியில் குறிப்பிட்ட வளர்ச்சியை, சாதனைகளை அது நிகழ்த்தியுள்ளது. பல்கலைக்கழகத்தை வழி நடத்திய துணைவேந்தர்களும் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்த கல்வியாளர்கள், நிர்வாக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரின் பங்களிப்பும் அதில் உள்ளது. அவர்களுள் இன்றும் எல்லோராலும் நன்றியுடன் நினைவு கூரப்படும் உயர்ந்த மனிதர்களில் ஒருவர் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அமரர் அழகையா துரைராஜா அவர்கள்.

உயர்ந்த பதவியில் இருக்கும் போது ஒருவரைப் பலரும் புகழ்ந்து போற்றுவதும், பதவியை இழந்ததும் அவரை இகழ்ந்து பேசுவதும் இன்று எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் காணப்படும் மரபாகிவிட்டது. ஆனால் இந்த நடைமுறைகளுக்கு அப்பால் பதவியில் இருந்த போதும், பதவி விட்டு விலகிய போதும் எல்லோராலும் கருத்து வேறுபாடுகளை மறந்து போற்றப்படும் உயர்ந்த மனிதராக அமரர் துரைராஜா காணப்பட்டார். நிர்வாக ஆளுமை, ஆற்றல், சமூக ஒன்றிணைவு என்பன அவர் பதவி வகித்த கால சூழ்நிலையால் தீர்மானிக்கப்படுகின்றது. அமரர் துரைராஜா பல்கலைக்கழக மாணவர் கல்வியில், அவர்களின் தனிப்பட்ட நலனில், ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி என்பனவற்றில் புதிய துறைகளை அறிமுகப்படுத்தியவர், நிர்வாக ஒழுங்கமைப்பில் அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றில் வெற்றி காண விளைந்தவர். ஆயினும் இவற்றுள் சிலவற்றை அவர் நடைமுறைப்படுத்த முனைந்த போது மூதவையிலும், பேரவையிலும் அவர் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானார். தூர நோக்கில் அவரது திட்டங்கள் பிற்காலத்தில் நன்மையான முடிவுகளைத் தரும் என்ற எதிர்வாதங்களும் அப்போது எழுப்பப்பட்டன. அந்த எதிர்வாதங்கள் நியாயப்படுத்த முடியாதவை. ஆனால் அமரர் துரைராஜாவின் பார்வையில் அவர் பதவி வகித்த கால கட்டச் சூழ்நிலையில் அவரது எண்ணங்கள், திட்டங்கள் பல்கலைக்கழக வளர்ச்சிக்கு அவசியம் என்று கருதினார். அவற்றுள் சிலவற்றை துணிவுடன் நடைமுறைப்படுத்தியும் காட்டினார். இவை ஆளுமையுள்ள துணைவேந்தருக்கு இருக்க வேண்டிய அணிகலன்களாகும். இவற்றையெல்லாம் அவர் நடைமுறைப்படுத்தும் போது மாற்றுக் கருத்துள்ளவர்களையும் தன்னுடன் அரவணைத்து பல்கலைக்கழகத்தினுள் நாகரிகமான கல்விச் சூழல்களை ஏற்படுத்திய பெருமை அமரர் துரைராஜா அவர்களுக்கு உண்டு. அதனாலேயே பலரது அன்பிற்கும் மதிப்பிற்கும் அவர் உரியவராகத் திகழ்ந்தார்.

1943 ஆம் ஆண்டு வடமராட்சியில் இமையாணன் என்ற கிராமத்தில் பிறந்தார். அந்தக் கிராமச் சூழலில் கல்வி கற்று வளர்ந்து அங்கிருந்தே இலங்கைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவானார். கடின உழைப்பால் முதல் வகுப்பில் சித்தி பெற்று விரிவுரையாளர், பேராசிரியர், பீடாதிபதி, துணைவேந்தர் எனப் படிப்படியாக வளர்ந்தார். அவரது வாழ்க்கை வட்டத்தின் முப்பது ஆண்டு காலம் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட காலம் எனலாம்.

அவற்றுள் ஆறு ஆண்டுகாலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்தார். ஒரு பல்கலைக்கழகத்தின் பிரதான பணி கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி என்பதில் அக்கறை காட்டிய அவர் இளம் ஆசிரியர்கள் ஆராய்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக ஏற்படுத்திய ஆராய்ச்சி நிதியம், வசதியற்ற மாணவர்கள் நிதிக் கஷ்டம் இன்றி கல்வியைத் தொடர அவர் ஏற்படுத்திய துணைவேந்தர் நிதியம் என்பன எல்லோராலும் பாராட்டப்பட்ட நிதியங்களாகும். திட்டமிடப்பட்ட புறநிலைப்படிப்பு அலகு, வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் இவர் காலத்திலேயே வளர்ச்சி பெற்றன. இன்று பலரின் கவனத்தைக் கவர்ந்து வரும் இராமநாதன் நுண்கலைப் பிரிவு தனிப்பெரும் துறையாக வளர்வதற்கு முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை அவர்களுடன் இணைந்து



**முன்னாள் துணைவேந்தர் அமரர் அழகையா துரைராஜாவின் 79 ஆவது பிறந்த தினம் இன்று சனிக்கிழமை ஆகும்.**

ஏற்படுத்திய மாற்றங்கள், விவசாய பீடத்தை தரமுயர்த்தியமை என்பன கல்வியாளர் மத்தியில் என்றும் நன்றியுடன் நினைவு கூரத்தக்க முயற்சிகளாகும்.

அமரர் துரைராஜாவை நினைவுபடுத்துவன இன்று பல்கலைக்கழகத்துக்குள்ளே மட்டும் அடங்கவில்லை. பல கல்லூரிகளின் மண்டபங்களுக்கும் நூலகங்களுக்கும் அவர் பெயரே இடப்படும் வகையில் அவரின் நாமம் நிலைத்துள்ளது. அவரின் பெயர் எமது கல்விப் பராம்பரியத்தின் குறியீடாக மாறியுள்ளதென்றே கூறலாம். அமரர் மறைந்து 14 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவரின் ஆத்ம விசுவாசிகள் அவர் பிறந்த நாளையும், மறைந்த நாளையும் காலம் தப்பாது நினைவுபடுத்தி வருகின்றனர். இந்த நினைவுகள் அமரரை மட்டும் கௌரவப்படுத்துவதோடு அமையாது எமது பல்கலைக்கழகம் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்பதையும் நினைவுபடுத்துகிறது. அமரரின் 14ஆவது நினைவுப் பேருரையில் எமது பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் க.கந்தசாமி அவர்கள் கூறிய ஒரு கருத்து எனது ஞாபகத்துக்கு வருகிறது. ''ஒருவர் வாழும் போது எமது சமூகம் அவரைப் பகைவராகக் கருதியிருந்தாலும், அவர் இறந்ததும் அவரின் ஆத்மா சாந்தி பெற கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து பிரார்த்திப்பார்கள். ஆனால் அவர் வாழும் போது அவர் நீண்டகாலம் வாழ வேண்டும் என எல்லோரும் ஒன்றிணைந்து பிரார்த்திக்கும் பாக்கியம் ஒரு சிலருக்கே கிடைக்கும். அந்த பாக்கியத்தை பெற்ற பெருமை அமரர் துரைராஜாவுக்கே உரியது'' இக்கூற்றுக்குள்ளே அமரரின் பெறுமதி முழுமையாக அடங்கியுள்ளதைக் காணலாம். எமது கல்விப்பாரம்பரியம் வளர்வதற்கு அமரரின் நினைவுகள் என்றும் நிலைக்கட்டும்.

# மறதியே உயிரை வாழ வைக்கும்

மதுமிதா

மக்களின் நன்மை கருதி அப்படியே ஏற்றுக் கொள்ளும் சகிப்புத்தன்மை மறக்கப்பட்டு விட்டது. இவையெல்லாம் எந்தக் காலத்திலும் நினைவுகொள்ளத்தக்கது. ஆனால் இவை எளிதாய் சாதகமாய் இப்போது மறக்கப்பட்டு விட்டது.

ஒரு அறிவியல் அறிஞர் பரிசோதனைச் சாலையில் நேரம் காலம் இல்லாது ஆராய்ச்சி செய்வார். பல அறிவியல் கண்டுபிடிப்புச் சாதனங்களை உலகிற்கு அளித்த மாமேதை.

அவர் கதவைத் திறந்து வெளியே வருகையில் அவரின் வளர்ப்புப் பூனை அவரைக் காண வேகமாய் குதித்தோடி வந்தது. அதன் அன்பினை அறிந்து, அது எப்போதெல்லாம் அவரைக் காண விரும்புகிறதோ அப்போது தடையில்லாமல் அவரின் அறைக்கு வந்து செல்லும் வகையில், கதவில் ஒரு துளையிட எண்ணினார். அப்போது அந்தப் பூனையின் குட்டியும் ஓடோடி வந்தது. உடன் பூனையும் அதன் குட்டியும் கதவு வழியே அவரின் ஆராய்ச்சி அறைக்கு வர சிறியதுளை ஒன்று பெரியதுளை ஒன்று என கதவில் இரு துளைகள் போடப்பட்டன. பெரியதுளை வழியே பூனைக்குட்டியும் வரலாம் என்பது அந்த மாமேதைக்கு நினைவுக்கு வராத அளவில் மறதி.

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு ஓர் அயல்நாட்டுப் பிரதமர் வருகை தந்திருந்தார். இருவரும் கலந்து கொண்ட விழாவில் இரு நாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. இந்திய தேசியகீதம் இசைக்கப்பட்டபோது இந்திராகாந்தி மரியாதை நிமித்தம் எழுந்து, பாடல் முடியும் வரையிலும் நின்று கொண்டிருந்தார். ஆனால் வந்திருந்தவரது தேசத்து தேசிய கீதம் இசைக்கப்பட்ட பொழுது அவர் அமர்ந்திருந்ததைப் பார்த்து வியந்து இந்திரா அம்மையார் காரணம் கேட்க, அவர் அளித்த பதிலில் அதிர்ச்சியுற்றார். இசைக்கப்பட்ட பாடல் அவர் தேசத்து தேசியகீதம் அல்ல. வேறு நாட்டினுடையது. தவறுகண்டு அதிர்ந்து பதறிய இந்திராகாந்தியைப் பார்த்து அவர் சாதாரணமாகக் கூறியது பதறவேண்டாம். இதில் அதிர்ச்சி ஒன்றுமில்லை. உங்கள் தந்தையின் ஆட்சிக் காலத்திலும் நான் வருகையில் இதே பாடல்தான் இசைக்கப்பட்டது. அரச மறதியின் மகிமை எவ்வளவு சுலபமாக எடுத்தாளப்பட்டுள்ளது.



எல்லா மதங்களும் போதிப்பது அன்பையே. இலக்கு ஒன்று, மார்க்கங்கள் தான் வேறு. எனினும் வசதியாக எல்லாம் மறந்து அன்பினைத் துறந்து அழிவுக்கு வித்திடுகிறோம்.

அரசியல் மத தீங்குகளை வசதியாக மறந்து விடுகிறோம் அடுத்த தேர்தல் வருகையில். அரசியல் தலைவர்களும் கொடுத்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்ததும் அடியோடு மறந்து விடுகின்றனர். ஒரு கொடுப்பினை இந்த மறதி.

''வாழு வாழவிடு'' என்பது போல் ''மறப்போம் மன்னிப்போம்'' என்பதும் உயர்ந்த விஷயம் தான். எதனை மறப்பது, எதனை நினைவு கொள்வது என்பதில் தான் வேறுபாடு.

எதனை எப்படி மறக்கவேண்டும் எதனை எப்போது நினைவு கொள்ள வேண்டும் எனும் கலை கைவந்துவிட்டால் வாழ்வில் துயரேது.

கற்போம் கற்பிப்போம் மறக்கும் கலையினை. வாழ்வோம் வாழவைப்போம் மொத்த உலகினை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள்



குறளைத் தந்த வள்ளுவர்
இருளை அகற்றி வாழ்கிறார்
அறம், பொருள் இன்பங்கள்
அள்ளி அள்ளித் தருகிறார்
ஆயிரத்து முந்நூற்று
முப்பது குறள் கருத்துக்கள்
அன்பு நெறிகள் சொல்லிடும்
துன்ப இருளை மாற்றிடும்

ஜெ. கதிர்நிலவன்,
சென்பிலிப்நேரிஸ் முன்பள்ளி.


## அறிந்து கொள்வோம்...

* அர்த்த சாஸ்திரம் என்ற நூலை எழுதியவர் கௌடில்யர்
* பஞ்ச சித்தாந்தம் என்ற நூலை எழுதியவர் வராகமித்தர்
* மண்டை ஓடுகள் பற்றி ஆராய்ச்சி செய்தவர் கிரேனியாலஜி
* மிக வெப்பமான நட்சத்திரத்தின் நிறம் நீலம்
* கால்கள் இருந்தும் நடக்காத பறவை ரீங்காரப் பறவை

## நாடுகளின் தேசியப் பறவைகள்



இலங்கை – காட்டுக்கோழி



இந்தியா – ஆண்மயில்

## மருந்துக்கு பயன்படும் 'ஒக்டோபஸ்ட் விஷம்

மெல்போர்ன் பல்கலைக்கழகம், நோர்வேஜியன் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப்பல்கலைக்கழகம், ஹம்பர்க் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு அந்தாட்டிக்கா கடற்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, அங்குவாழக்கூடிய நான்கு புதிய ரக ஒக்டோபஸ்களைக் கண்டுபிடித்துள்ளனர். அவை மிகவும் விஷத்தன்மை வாய்ந்தவை. அவ்வாறு விஷத்தன்மை வாய்ந்த ஒக்டோபஸ்களில் இருக்கக்கூடிய விஷத்தை எடுத்து பரிசோதனைகளை மேற்கொண்ட போது, அவற்றின் மூலம் மருந்துகளைத் தயாரிக்கலாம் எனக் கண்டறியப்பட்டது.

இவை தவிர; கணவாய், ஸ்க்யூட் போன்ற மீன்களின் விஷத்திலிருந்தும் மருந்துகளைத் தயாரிக்கலாம் எனவும் குறிப்பிடுகின்றனர். இவை 0 டிகிரி வெப்பநிலையை உடைய ஆழ் கடலில் வாழ்கின்றமையாலேயே இவற்றின் விஷத்தைப் பயன்படுத்தலாம் என தெரிவிக்கின்றனர் விஞ்ஞானிகள்.

க. கீர்த்தன்
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி,புத்தூர்.

## விளையாட்டுத் தகவல்கள்

* இலங்கையில் விளையாட தடை செய்யப்பட்டுள்ள விளையாட்டு - போலோ
* டெனிஸ் விளையாட்டின் தாயகம் - இங்கிலாந்து
* கோல்ப்பந்தின் உள்ளே இருப்பது - தேன்
* உலகின் மிகப்பெரிய மிதக்கும் விளையாட்டரங்கு - சிங்கப்பூர் மெரினா மிதக்கும் அரங்கு
* உலகின் மிகப் பழமையான விளையாட்டு - நீச்சல்
* ... விளையாட்டின் பிறப்பிடம் - ஸ்கொட்லாந்து.

ர.ஜோகினி,
தரம் 9பி,
யா/ வேம்படி ம.உ. பா சாலை.

## எல்லாம் நன்மைக்கே

முன்னொரு காலத்தில் தவசி என்ற பெயருடைய ஒருவர் வாழ்ந்து வந்தார். தனது வாழ்வில் எத்தனை பெரிய துன்பம் வந்தாலும் ''இறைவன் அருளால் எல்லாம் நன்மைக்கே'' என்று கூறுவார்.

ஒரு நாள் அவருடைய ஆடு ஒன்று காணாமல் போய்விட்டது. அந்த ஊர் மக்கள் வந்து அனுதாபத்துடன் ஆறுதல் கூறினார்கள். தவசி இறைவன் அருளால் எல்லாம் நன்மைக்கே என்றார். உடனே எல்லோரும் அவரைப் பைத்தியம் என்று பழித்துவிட்டனர்.

ஒரு வாரம் கழித்து காணாமல் போன ஆடு காட்டிலிருந்து வேறு சில ஆடுகளை அழைத்துக் கொண்டு திரும்பி வந்தது. இந்தச் செய்தியைக் கேட்ட மக்கள் தவசியைப் பற்றி பெருமையாகக் கதைத்தனர்.

இதேபோல் தவசியின் மகன் ஆடுகளுக்கு இலை ஒடிக்கும் போது தவறுதலாக மரத்திலிருந்து வீழ்ந்து கால் முறிந்துவிட்டது. மீண்டும் அந்த ஊர் மக்கள் அனுதாபத்துடன் ஆறுதல் கூறும் போது, ''எல்லாம் நன்மைக்கே'' என்று கூறினார். இறைவன் எது செய்தாலும் நன்மைக்கே என்று நினைப்பவர் தவசி.

மறுநாள் கொள்ளைக்காரர்கள் அந்தக் கிராமத்தையே சூறையாடினார்கள். கொள்ளையர்கள் செல்லும் போது அந்த ஊர் இளைஞர் சிலரை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றனர். கால் முறிந்த நிலையிலிருந்த தவசியின் மகனை அவர்கள் விட்டுச் சென்றனர்.


இரண்டு மாதத்திற்கு பின்னர் கொள்ளைக் கூட்டத்தினரால் பயிற்சி பெற்ற இளைஞர்கள் அரசினால் தண்டிக்கப்பட்டனர். இதற்கு பிறகு அந்த ஊர் மக்கள் தவசியை கேலி செய்வதை நிறுத்திவிட்டனர்.

இறைவன் அனுமதியின்றி எதுவும் நடைபெறாது. இறைவன் நன்மையே செய்வான் என்ற உறுதியுடன் இருந்தால் எல்லாம் நன்மையுடன் நடைபெறும்.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்

## வஞ்சக நரியும் முயல்களும்

நந்து...



அது ஒரு அடர்ந்த காடு. அதனுள்ளே அழகிய ஒரு பூஞ்சோலை, அருவிகள் ஆகா! என்ன அழகு. அந்தக் காட்டிலே ஓர் அழகிய வெண்பஞ்சுக் கூட்டங்கள் போன்ற செவ்விழி உருட்டிய முயல்குட்டிகள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. அவைதம் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக உள்ளதைப் பார்க்கும் போது சந்தோசமாக இருந்தது. இதனை ஒரு குள்ள நரி கண்டது. அதற்கு அந்த முயல் குட்டிகளை எப்படியாவது பிடித்துச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை தலை விரித்தாடியது. அது தந்திரமாக அந்த முயல் குட்டிகளை எப்படியாவது பிடிக்க எண்ணியது. அவற்றுடன் நட்புக்கொள்ள நினைத்தது.தன் கொழு கொழு என கொழுத்திருந்த உடலையும் அழகான தன் வாலையும் ஆட்டி ஆட்டி அப்பாவித் தனத்துடன் அவை விளையாடும் இடத்துக்கு வந்தது. ''ஓ முயல் குட்டிகளே உங்களை நான் எப்படியும் என் உணவாக்காமல் விடமாட்டேன். என் தந்திரத்தை பாருங்கள், உங்களை முதல் என்னை நம்பும் படி என் வலையில் விழச்செய்கிறேன்'' என மனதுக்குள் எண்ணியவாறு மெதுவாகச் சென்றது.''ஹாய் முயல் குட்டிகளே வணக்கம்,என்ன செய்து கொண்டிருக்கிறீங்க? நானும் உங்களுடன் சேர்ந்து விளையாட வரவா?'' என கேட்டபடி அருகே சென்றது. முயல் குட்டிகள் முதலில் தயங்கினாலும் அதன் அப்பாவித்தனத்தை பார்த்ததும் சந்தோசத்துடன் அருகே சென்றன. உடனே அண்ணா முயல் அவற்றை தடுத்து ''அவன் நல்லவனல்ல. அவனுடன் சேராதீர்கள், அவன் எமது எதிரி'' எனக்கூறியது. அதனைக் கேளாது சின்ன முயல் குட்டிகள் இரண்டும் அம் முயலை அவமதித்துவிட்டு நரியுடன் விளையாட ஓடின. குள்ள நரியும் அன்புடன் விளையாடியது.

மாலை ஆனதும் வீட்டுக்குச் சென்ற பெரிய முயல் தாயிடம் தம் புதிய சினேகிதத்தைப் பற்றிக் கூறியது. ஆனால் குட்டி முயலோ ''அம்மா அவன் நல்லவனாகத் தெரிகிறான். அண்ணா வீணாக கோபப்படுகிறான்'' எனக்கூறியது.இவை இரண்டும் சண்டை இட்டுக்கொண்டன. ''அமைதி அமைதி, ஏன் வீணாக இருவரும் சண்டை போடுறீங்க நான் பாத்துக்கொள்கிறேன் கவலப்படாம தூங்குங்கள்'' என சமாதானப்படுத்தியது தாய்.

நாள்கள் சில சென்றன. தாய் முயல் பிள்ளைகளை அழைத்தது.''நான் உங்கள் புதிய நண்பனை புரிந்து கொள்ள ஒரு வழி சொல்கிறேன் கேளுங்கள். ஓர் இடத்தில் குழியொன்று அமைத்து வைப்பேன். நீங்கள் விளையாடி விட்டு குட்டியனை மட்டும் தூர அவனுடன் அனுப்பி வையுங்கள். பிறகு பாருங்கள்'' எனக்கூறியது. அவையும் தாய் சொற்படி கேட்டு நடக்க ஒப்புக்கொண்டன.

குள்ள நரியுடன் சந்தோஷமாக விளையாடிவிட்டு மற்றய இரண்டு முயல்களும் களைத்துப் போய் உட்கார்ந்து இருப்பது போல் பாவனை செய்தன. குட்டி முயல் மட்டும் துள்ளித் துள்ளித் தன் தாய் சொன்ன இடத்துக்கு அதனை அழைத்துச் சென்றது. குள்ள நரியோ மனதுக்குள் மகிழ்ச்சி அடைந்தது. அதன் நாவில் உமிழ் நீர் சுரந்தது. தன் வலையில் முயலே வந்து சிக்கி விட்டது என நினைத்து சந்தோஷம் அடைந்தது. குழி வந்ததும் முயல் மெல்ல களைத்தது போல் பதுங்கியது. இந்தச் சந்தர்ப்பத்தை ஆவலுடன் காத்திருந்த நரி உடனே அதன் மேல் பாய்ந்தது உடனே முயல் துள்ளி ஓட நரி குழிக்குள் விழுந்து விட்டது. என்ன செய்வது என தெரியாது திகைத்து நின்ற நரியை நோக்கி அனைத்து முயல்களும் வந்தன. ''ஏய் குள்ள நரியே எங்களை நம்ப வைத்து ஏமாற்ற முயன்றாயே உனக்கு தக்க தண்டனை தருகிறோம் பார்'' எனக் கூறி தம்மை நம்ப வைத்து ஏமாற்ற முயன்ற நரியை அடித்துக் கொன்றன. அதன் பின் குட்டி முயல் ஓடி வந்து தன் தாயை கட்டி அணைத்தது... ''அம்மா நான் நரியை நம்பி அண்ணாவை [illegible] இனி மூத்தோர் சொல்லும் வார்த்தையை மதித்து நடப்பேன் [illegible] கண்டு ஏமாறமாட்டேன்.'' என அழுதவாறு தன் அண்ணனை கட்டியணைத்தது. மீண்டும் அந்த முயல் குட்டிகள் சந்தோஷமாக வாழ்ந்தன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஓவிய உலகம்



திருமண வீட்டில் மணப்பெண்ணின் கைகளில் இரவு முழுக்க அமர்ந்து மருதாணிக் கோலம் போட்ட காலங்கள் நினைவுக்கு வருகிறதா?. இப்போதெல்லாம் அழகுக் கலை நிபுணர்கள் வந்து சட்டென வேலையை முடித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். உடல் ஓவியத்தின் ஒரு வகை இது!

கிரிக்கெட் விளையாட்டு நடக்கும் போதோ, உலகக் கோப்பை கால்பந்து விளையாட்டு நடக்கும்போதோ விளையாட்டரங்கில் ஆட்டம் போடும் ரசிகர்களைப் பாருங்கள். உடலில் படம் வரைந்து கொண்டு வீரர்களை உற்சாகமூட்டும் பலர் கண்களுக்குத் தெரிவார்கள்.

ஹொலிவூட் நடிகர்களின் உடலில் வரையப்பட்டிருக்கும் டாட்டுக்களும், திரிஷா உடலில் எட்டிப் பார்க்கும் நிமோ மீனும் இந்த உடல் ஓவியம் எனும் பெரிய வட்டத்துக்குள் அடங்கி விடுகின்ற விடயங்களே.

உடல் பெயிண்டிங் பழங்காலத்தில் மண் அல்லது தாவரங்களின் சாறுகளினால் உண்டாக்கப்பட்டது. அது பல்வேறு முன்னேற்றங்களைத் தாண்டி இன்றைக்கு பச்சை குத்துவது, டாட்டூ போடுவது, தற்காலிக பெயிண்டிங், நிரந்தர பெயிண்டிங் என பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கிறது. சுவாரஸ்ஸியமான விடயம் என்ன தெரியுமா? நாம் கற்காலம் தொட்டே பயன்படுத்தி வரும் மருதாணி கடந்த இருபது ஆண்டுகளாக மேலை நாடுகளில் மிகப் பிரசித்தம் !

இந்த உடல் ஓவியங்களுக்கென்று உலக அளவில் போட்டிகளும் நடக்கும். ஆஸ்திரேலியாவில் நடக்கும் உலக உடல் ஓவிய விழா மிகப் பிரபலம். 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஓவிய விழா வழக்கமாக ஜூலை மாதம் கொண்டாடப்படும். உலகெங்கும் உள்ள மக்கள் உடலில் ஓவியங்கள் வரைந்து கொண்டு வியப்பூட்டுவார்கள். இதில் உலகப் புகழ் ஓவியர்கள் முதல், கத்துக் குட்டிகள் வரை பலரும் கலந்து கொள்வார்கள்.


இந்த ஓவியங்கள் வரைவதில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று நிர்வாணமான உடலில், அல்லது அரைகுறை நிர்வாணமான உடலில் ஓவியம் வரைவது. இதில் ஒட்டு மொத்த உடலே ஒரு புதிய ஓவியத்தால் உருவம் மாறி பிரமிப்பூட்டும். இன்னொரு வகை உடைகள் மறைக்காத முகம், கை, கால்கள் போன்ற இடங்களில் மட்டும் ஓவியம் வரைந்து வசீகரிப்பது. உலக அளவில் பல்வேறு கலைஞர்கள் இந்தத் துறையில் தங்கள் முத்திரையைப் பதித்திருக்கிறார்கள். நியூசிலாந்திலுள்ள ஜோனேகர், பிரான்ஸிலுள்ள வெஸ் கிலேன் போன்றவர்களெல்லாம் இந்தக் கலையில் வரலாற்றுப் புகழ் பெற்றவர்கள். இப்போது அந்தக் கலையில் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருப்பவர் ஜெஸின் மார்வெடல் எனும் பெண்மணி.


25 வயதாகும் ஜெசின் ஜேர்மனில் பிறந்தவர். 2005 இல் இந்தியாவிலும் சமூகப் பணி செய்திருக்கிறார். இசையும் கலையும் இவருக்கு இரண்டு கண்கள் போல. கூடவே மனித நேயமும் நிரம்பியதால் இவர் இன்னும் அழகாகிவிடுகிறார்.

மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பயிற்சியைப் பெற்றவர் இவர். ஜேர்மனின் டார்ட்மன்டில் அத்தகைய குழந்தைகளுக்காய் இசைப்பது, கலைகளைக் காண்பிப்பது என அவர்களை ஊக்கப்படுத்தும் பணியையும் செய்து வருகிறார். மற்றவர்களை விட வித்தியாசமாய் ஓவியம் வரைய ஆசைப்படுகிறேன். என்னோட விருப்பமான இடங்கள் ரியலிஸ்டிக், மற்றும் சர்ரியலிஸ்டிக் தான் என்கிறார் இவர்.

பறவையாக, இயற்கைக் காட்சிகளாக, நவீன ஓவியங்களாக, ஒளிவீசும் படங்களாக இவருடைய கைவண்ணத்தால் உடல்கள் உருமாறுவதை உலகமே வியப்புடன் பார்க்கிறது. இணையத்திலும், உடல் ஓவியக் கலை உலகத்திலும் பிரமிப்புடன் உச்சரிக்கப்படும் பெயராகி இருக்கிறார் ஜெஸின் மார்வேடெல். எந்தக் கலையிலும் முத்திரை பதிக்கலாம் என்பதை படம் வரைந்து நிரூபிக்கும் ஜெஸின் மார்வேடலை நாமும் வாழ்த்துவோம்!

**உடல் ஓவியங்களுக்கு என்று உலக அளவில் போட்டிகளும் நடக்கும். ஆஸ்திரேலியாவில் நடக்கும் உலக உடல் ஓவிய விழா மிகப் பிரபலம். 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஓவிய விழா வழக்கமாக ஜூலை மாதம் கொண்டாடப்படும். உலகெங்கும் உள்ள மக்கள் உடலில் ஓவியங்கள் வரைந்து கொண்டு வியப்பூட்டுவார்கள். இதில் உலகப் புகழ் ஓவியர்கள் முதல், கத்துக்குட்டிகள் வரை பலரும் கலந்து கொள்வார்கள்.**





மகிழ்ச்சியை மனத்தின் ஒரு நிலை என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். எனவே மனம்தான் அதன் நிலைக்களம், உற்பத்தி மையம் என்று தெரிகிறது. ஆனால் உண்மையான மகிழ்ச்சி என்ற நிலையை எவரும் தேடுவதில்லை. மகிழ்ச்சிக்குக் காரணமான சில பொருள்களையும் மனிதர்களையும் அனுபவங்களையும் தான் தேடுகின்றனர். அதனால் தான் மகிழ்ச்சி அவர்களை விட்டு விலகிப்போகிறது.

மகிழ்ச்சி என்பது எதிலிருந்து கிடைப்பது என நினைப்பதால்தான் அது கிடைப்பதில்லை. கிடைத்தாலும் நிலைப்பதில்லை. மகிழ்ச்சி தன்னிடமே தான் இருக்கிறது என்பதை உணர்ந்தால் மகிழ்ச்சியை தேடவேண்டிய அவசியம் குறைவு. ஞானிகள், உதாரணம் ஒன்றைக் கூறுகிறார்கள். நாய் ஒன்று எலும்பைக் கடிக்கும் போது அதன் பல்லிலிருந்து கசியும் இரத்தத்தை ஏதோ அந்த எலும்பில் இருந்து வருவதுபோல் நினைத்து சுவைக்குமாம். உண்மையில் தன்வாயில் இருந்து வெளிவரும் ரத்தம்தான் அது என்று அந்த நாய்க்குத் தெரியாது. அதுபோல் வேறு எதிலோ - எவரிடமோ கிடைக்கும் மகிழ்ச்சி, உண்மையில் தன்னிடம் இருக்கும் மகிழ்ச்சிதான் என்பது மனிதர்களுக்குத் தெரிவதில்லை.

பொருள்கள், மனிதர்கள் மூலமாய் மகிழ்ச்சி கிடைக்கும் என்று மகிழ்ச்சிக்காக அவற்றைச் சார்ந்திருப்பவர்கள், அவற்றின் மூலம் தங்கள் மகிழ்ச்சி குறையும் கூடும் என்பதை உணர வேண்டும். அது கிடைத்தால் - அது நடந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன், என்பது ஒரு மாயை. நடப்பதிலும் கிடைப்பதிலும் மகிழ்ச்சிக்கு எதிரான விடயங்கள் இருக்கலாம். நிமிடத்துக்கு ஒன்று மகிழ்ச்சியைத் தருகிறது என்றால், அடுத்த நிமிடத்தில் அது மகிழ்ச்சிக்கு எதிரானதாகவும் மாறலாம். நாமாக நம் மகிழ்ச்சியைக் காப்பாற்றிக் கொள்வதில்தான் வெற்றி இருக்கிறது.

மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பெரும்செல்வம், பெரிய

## இந்தோ – அரேபிய எ

(சென்றவாரத் தொடர்ச்சி)

சிலர் எண்களை எழுதுவதற்கு மரக்கட்டைகளில் வெட்டுக்களை உ
களில் கோடுகளை வரைந்து காட்டினார்கள். எகிப்து தேசத்து மக்கள் ஒன்று முத
எண்களைக் குறிக்க நேர்கோடுகளைப் பயன்படுத்தினார்கள். நூறு, ஆ
போன்ற எண்களுக்கு அவர்கள் வேறு விசேட குறிகளைக் கையாண்டா
தங்கள் மொழி எழுத்துக்களையே இலக்கங்களுக்கும் பயன்படுத்தினார்க
எண்களை எழுத ஒரு தனி வடிவத்தை வகுத்திருந்தனர். நம் நாட்டில்
கடிகாரங்களில் இந்த எழுத்தக்களைக் காணலாம். இந்த முறையிலே பெரிய எ
கடினமானதொன்றாகும். மேலும் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்த
கணிப்பது இலேசான காரியமுமல்ல. எனினும் ஐரோப்பா முழுவதி
காலமாக இம்முறைதான் வழக்கத்தில் இருந்தது. இதற்குச் சான்றுகளும்

அதேவேளை சீனமுறை, பபிலோனிய முறை ஆகியவையும் சேர்ந்துகொ
எழுதுவதற்கு இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட முறைகள் அனைத்திலும் அ
- அரேபிய முறையாகும். இந்த முறையை முதன் முதல் கண்டுபிடித்துப் ப
இந்தியர்களேயாவர். இதில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து,
ஒன்பது, பூச்சியம் என்னும் பத்து எழுத்துக்களே உள்ளன. இவற்றை உபே
பெரிய எண்களையும் எழுதிவிடலாம். பூச்சியம் இம்முறையின் தனிப்பெ
கருத முடியும். எந்த எண்ணோடும் பூச்சியத்தைச் சேர்த்து பெரிய எண்களை உ
ணமாக ஐந்துக்குப் பின்னால் ஒரு பூச்சியத்தைச் சேர்ந்தால் ஐம்பதாகின்றது
களைச் சேர்த்தால் ஐநூறு. அதேபோல் மூன்று பூச்சியங்களைச் சேர்ந்தல் ஐயாயிர
முறையை விட இந்த முறை மிகவும் சுலபம். கணிப்புக்களும் மிகவு
இந்தியாவுடன் வர்த்தகத்தை மேற்கொண்டு வந்த வியாபாரிகள் இந்த மு
அரபு நாடுகளில் பரப்பினார்கள் என்பதை சரித்திர வாயிலாக அறியமுடிகி
கிறிஸ்துவுக்குப் பின் எழுநூறில் இம்முறை ஐரோப்பா எங்கும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மழையைப் பிடிக்குமா?

வானத்துடன் கோபப்பட்டுத்தான்
சண்டைபிடித்து
மழை பூமி வந்து சேருகிறது
என்று
வானம் இருள் ஆனதும்
நான் நினைத்துக் கொள்வதும்,
வெயிலில் மழை
பூமி வந்து சேருகின்றபோது
நான் குழம்பிக் கொள்வதும்
வானமான என் மனதில்
அடிக்கடி நிகழ்வதுபோல்
இந்த வானமும் இருக்கிறபோது
ஒத்துப் போய்த்தான்
வாழ வேண்டும்.

மழையில் நனைந்து
சளி பிடித்து ஈரலிப்பாகின்ற
வரை
உன்னில் நனைந்து
ஈரலிப்பாகிறது எனது மனம்.
உன்னை ஞாபகப்படுத்த
என்னை நனைக்கத்தான்
உன்னால் முடிகிறது.
இருந்தபோதும்
நீ எனது வீட்டுக்குள் வந்து
என்னைத் தூங்கவிடாமல்
நனைக்கின்றபோதும்,
உன்னை வெறுப்பது
உனக்கே தெரியாமல்
போய்விடுகின்ற போதுதான்
ஊரையே சில வேளைகளில்
அழித்து விடுகிறாய் போலும்.

மழைகால நாட்குறிப்பேட்டில்
ஒரே மாதிரி எழுதி,
சொற்களைப்
புரிந்துகொள்ள முடியாமலும்
உடனேயே அழித்துவிடுகிறாய்.

உனக்கு எதிர்ப்புக் காட்டி
குடை பிடித்துச் செல்பவர்களை
அடையாளம் காட்டாமலும்
உன்னை பிடித்தோ பிடிக்காமலோ
நனைந்து செல்பவர்களை
இனங்காட்டி விடுகிறாய்.

தன்னைத் தெளிவாக்கிக் கொண்ட
வானமும்,
உலர்த்திக்கொண்ட மரங்களும்
கழுவிக்கொண்ட வீட்டு முற்றமும்
சூரியன் வந்து சில தினங்களில் மாறுபடும்
அன்றிலிருந்து
அடுத்த மழை காலத்தை
எதிர்பார்த்திருக்கிறன.

ஆரவாரப்பட்டு நீ வருவதற்கான
அடையாளத்தை காட்டிவிட்டு
வந்துசேரும் மழையே
நீ சொல்லாமல் கொள்ளாமல்
சென்றுவிடுவது
ஏனோ தெரியவில்லை

இடப்பெயர்வில்
கொட்டோ கொட்டென்று
கொட்டிய மழையில்
நனைந்தது தெரியாமல் நடந்தோம்.
ஒவ்வொரு அடியும் அழுதது தெரியாமல்
முகத்தை நனைத்து
கழுவி விட்டுக் கொண்டும்
ஒதுங்க இடமில்லாமல் இருந்தபோதும்
மழையில் தாகம் தீர்த்து
களைப்பில்லாமல்
இடம்பெயர உதவிய மழையே
அன்று வற்றிப் போன வானத்தில்
இன்றும் விடியல் இல்லை.

(வளரும்) – பிறைவாணன்

# றைந்திருக்கும்
# ழ்ச்சி...

ங்கிலத்
லக்களம்,
உண்மை
இல்லை.
பும் மனி
அதனால்
றது.
து என
த்தாலும்
ருக்கிறது
வண்டிய
ன்றைக்
ம் போது
கா அந்த
க்குமாம்.
ம்தான்
ல் வேறு
கிழ்ச்சி,
என்பது
கிடைக்
பவர்கள்,
கூடும்
- அது
மாயை.
திரான
ஒன்று
ட்டத்தில்
மாக நம்
வெற்றி
, பெரிய

பங்களா, கார் போன்றவை எல்லாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. யார் வேண்டுமானாலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அதற்குத்தேவை மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்ற மன உறுதி தான். மகிழ்ச்சி தான் முக்கியம் என்று கருதுபவர்களுக்கு மனத்தைக் கட்டுப்படுத்



மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பெரும் அளவான செல்வம், பெரிய பங்களா, கார் போன்றவை எல்லாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. யார் வேண்டுமானாலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அதற்குத்தேவை மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும் என்ற மன உறுதிதான்.

தும் பழக்கமும் வந்துவிடும். குறிப்பிட்ட சில விடயங்களால் அல்லது பிரச்சினைகளால் மகிழ்ச்சி குறையும் என்பதை நடைமுறை ரீதியாக ஒத்துக் கொண்டு தான் ஆக வேண்டும். சராசரி மனிதர்கள் எல்லாம் தவஞானிகள் அல்ல. ஆனால், இது நீங்கலாகப் பார்க்கும்போது யார் யார் மகிழ்ச்சியாக இருக்க முடியாது என்பதை ஒரு பொதுப் பார்வையாகப் பார்த்தால் அது பயனுள்ளதாக இருக்கும்:

மற்றவர்களைத் தேவையில்லாமல் ஆராய்பவன் தன்னுடைய மகிழ்ச்சியைக் கெடுத்துக்கொள்கிறான்.

மற்றவர்களுக்கு ஏதாவது கிடைத்தாலோ அல்லது யாராவது கொடுத்தாலோ, அதைப் பொறுக்கமுடியாதவனுக்கு மகிழ்ச்சி போய்விடுகிறது. கிடைத்ததிலும் இருப்பதிலும் திருப்தி அடையாத குணம் உள்ளவனுக்கு மகிழ்ச்சியும் நிலைக்காது. அணுஅணுவாக எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொள்பவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. ஏனென்றால், ஏமாற்றம், தோல்வி என்று வரும் போது அவர்கள் மனதின் சமநிலை கெட்டுப்போகும்.

தத்துவ மனப்பான்மை இல்லாதவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக்கொண்டு, வருவதையும் நடப்பதையும் பார்வையாளனாகப் பார்க்கும், பக்குவம் தத்துவமனப்பான்மை கொண்டவருக்கு உண்டு.

பிறர் பேசுவதையும், செய்வதையும் யதார்த்தமாக எடுத்துக்கொள்ளும் தன்மை எவ்வளவு குறைவாக உள்ளதோ, அந்த அளவுக்கு மகிழ்ச்சியும் குறையும். மனத்தையும் பேச்சையும் கட்டுப்பாடாக வைத்துக்கொள்ளத் தெரியாதவர்கள் அவ்வப்போது மகிழ்ச்சியை இழக்க நேரிடும். மனித உறவுகள் விடயத்தில் கவனமும் விழிப்புணர்வும் இல்லாது போனால் மகிழ்ச்சியை இழக்க நேரிடும்.

மற்றவர்களிடம் குறை அல்லது பிழை காண்பதை ஒரு வழக்கம் ஆக்கிக் கொள்பவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது.

மற்றவர்களின் விமர்சனங்களை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சரியான அணுகுமுறையைக் கற்றுக்கொள்ளாதவர்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அளவுக்கு மீறி விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் கவலையைத்தான் வளர்ப்பார்கள்.

மிகையான கோபமும் வெறுப்பும் எவரிடம் இருக்கின்றனவோ அவர்கள் மகிழ்ச்சியைத் தியாகம் செய்ய வேண்டியதுதான். மேற்கூறியவை குறிப்பிட்ட சில உதாரணங்களே. மகிழ்ச்சிக்கு எதிரானவற்றை அடையாளம் கண்டு அவற்றை ஒதுக்கினால் உண்மையான மகிழ்ச்சி என்னும் ஒளி தெரியும். எங்கிருந்தோ வருவது மகிழ்ச்சி என்று நினைப்பவர்களுக்கு அது எட்டாக் கனியாகத்தான் இருக்கும்.

# ...ரபிய எண்களின் பரிணாம வளர்ச்சி

...ர்ச்சி)

...ட்டுக்களை உருவாக்கினர். பானை
...க்கள் ஒன்று முதல் பத்துவரை உள்ள
...ர்கள். நூறு, ஆயிரம், பத்தாயிரம்
...க் கையாண்டார்கள். கிரேக்கர்கள்
...ன்படுத்தினார்கள். ரோமானியர்கள்
... நம் நாட்டில் கூட இன்றும் சில
...றயிலே பெரிய எண்களை எழுதுவது
...தக்கல், வகுத்தல் போன்றவற்றைக்
...ப்பா முழுவதிலும் பல ஆண்டு
... சான்றுகளும் உள்ளன.
...யும் சேர்ந்துகொண்டன. எண்களை
...னைத்திலும் அதி சிறந்தது இந்தோ
...ண்டுபிடித்துப் பயன்படுத்தியவர்கள்
...ான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு,
...இவற்றை உபயோகித்து எவ்வளவு
...றயின் தனிப்பெரும் சிறப்பு எனக்
...ய எண்களை உருவாக்கலாம். சாதார
...ம்பதாகின்றது. இரண்டு பூச்சியங்
...சேர்த்தல் ஆயிரமாகிறது. ரோமானிய
...க்களும் மிகவும் எளிதாகின்றது.
...ர்கள் இந்த முறையை நன்கு கற்று
... அறியமுடிகின்றது. அங்கிருந்து
...கும் பரவியது. இந்தியாவிலிருந்து

அரேபியர்கள் மூலம் ஐரோப்பாவில் பரவியதால் இந்த எண்களை இந்தோ - அரேபிய எண்கள் என்று அழைக்கின்றனர். அதுவரையில் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் ரோமன் எழுத்துக்களே பயன்பட்டு வந்தன. ஆரம்பத்தில் இந்தோ - அரேபிய எண்களைப் பயன்படுத்துவதற்கு கடும் எதிர்ப்பும் தடையும் ஏற்பட்டது. இது வேற்று நாடுகளின் கண்டுபிடிப்பு. இதனை ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தக் கூடாது என்று அரசு தடைவிதித்ததாம். ஆனால் இம்முறையைப் பயன்படுத்துவதில் ஏற்படுகின்ற எளிமையினாலும், வசதியினாலும் இம்முறையானது காட்டுத் தீ போல் அனைத்து நாடுகளிலும் துரித கதியில் பரவி இன்று சர்வதேசம் எங்கும் இந்தோ - அரேபிய எண்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது கண்கூடு.

நாசாவின் விண்வெளிக்கு ரொக்கட்டுக்களை ஏவும் மையத்திலிருந்து, வெளிக்கிளம்பும் விண்கலம் புறப்படுகின்ற வேளையில் கணினித் திரையில் சமகாலத்தில் பூச்சியம் தென்படுவதையும் காணமுடிகின்றது. இன்று உலகெங்கும் இந்தோ - அரேபிய எண்கள் பரிணமித்து உள்ளமை வெள்ளிடைமலை. அதேவேளை தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தமிழ் எண்கள் மிக அரிதாகக் கொண்டு வருகின்றமை நிதர்சனம் ஆகும். இந்தோ- அரேபிய எண்களின் பரிணாம வளர்ச்சி சொல்லும் தரமன்று எனலாம்.

அருணா தருமலிங்கம்.

பல்வேறு நாடுகளின் எண் குறிகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்தோ-அரேபிய எண் குறிகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| மாயா எண் குறிகள் | • | •• | ••• | •••• | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| கிரேக்க எண் குறிகள் | A | B | Γ | Δ | E | F | Z | H | Θ | I |
| பாபிலோனிய எண் குறிகள் | I | II | III | IIII | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| எகிப்திய எண் குறிகள் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| சீன எண் குறிகள் | 一 | 二 | 三 | 四 | 五 | 六 | 七 | 八 | 九 | 十 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல் - 'கலைத்தவசி'




'கலைத்தவசி' என்ற நாமம் தாங்கி, மன்னார் குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணி நயப்பு மலர் வெளிவந்துள்ளது. ஆசை இராசையாவின் ஓவிய வண்ணத்தில் ஒளிரும் கலைஞரின் எழில்வதனம் மலரின் அட்டையை அலங்கரிக்கிறது. ஆளுமை மிக்க குழந்தை செபமாலை அவர்களின் சமூக, கலைப் பணிகளின் மேன்மையை அவர் வாழுங்காலத்திலேயே ஆவணப்படுத்தி இந்த மண்ணுக்குக் கையளித்திருக்கும் கி.செல்மர்எமில் உள்ளிட்ட மலர்க்குழுவினரை சமூகமும் கலையுலகமும் என்றும் பாராட்டும்.

மலரின் உள்ளே மலர்ந்துள்ளவை யாவுமே மணம் வீசுகின்றன. நல்லதோர் அறிஞனைக் கலைஞனை வாழ்த்தியும் பாராட்டியும் தமது கருத்துரைத்துள்ள ஆண்டகைகள், அருட்தந்தைகள், சுவாமிகள் அவர் மீது கொண்டிருந்த மதிப்பும் பாசமும் வெளிப்படும் வகையான சிறந்த ஆக்கங்களைத் தந்துள்ளனர். ''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்ற வாக்குப் பொய்க்காத வாழ்வுக்கு உரித்துடைய பண்பாளர் பற்றி பேராசிரியர்களும், கலாநிதிகளும், அருட்பணியாளர்களும், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள் எனப் பலரும் விதந்துரைத்துள்ளனர். அவரை அறிந்தோர் யாவருமே அவர் மீது கொண்டதும் கண்டதுமான அன்பையும், அறிவையும், ஆற்றல்களையும் தத்தமது யதார்த்தப் பார்வையோடு எழுதியுள்ளனர். கவிஞர், எழுத்தாளர், நாடக அரங்காளர் எனப் பலரும் அவரது சேவைகளையும் கலைச் செம்மைகளையும் தமது ஆக்கங்களால் வெளிப்படுத்தி உள்ளனர்.


குழந்தை செபமாலை அவர்கள் வாழுங்காலத்திலேயே வெளிவந்த 'கலைத்தவசி' எனும் மலர் மூலம் அவரின் வாழ்வு கண்டு மகிழ்வோர், தமது பணிச் சிறப்புகளால் மேன்மையுற்று வாழவும், வழிநடக்கவும் தூண்டும் வகையில் மலர் வெளிவரக் காரணமானோர் பாராட்டுக்குரியவர்களே.

## நூல் - 'சமூகவியல் நிபுணரான முதலியாரின் வாழ்வும் வளமும்'




விவசாயிகளின் தோழனாக இருந்து விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்த விவசாயிகளின் தந்தை முதலியாரின் நினைவாக "சமூகவியல் நிபுணரான முதலியாரின் வாழ்வும் வளமும்" என்னும் ஆய்வுமலர் வெளிவந்துள்ளது.

அமரர் முதலியாரின் வாழ்க்கை வரலாறு கட்டுரை முதல் பக்கத்தை திறந்துள்ளது. அடுத்த பக்கங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், யாழ்.மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நீர் விநியோக திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன், யாழ்.நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி க.கருணாநிதி, பேராசிரியர் சிவராசா, அமரர் முதலியாரின் மகன் செந்தூர்ச் செல்வன், சட்ட ஆலோசகர் தேசமானிய இராமச்சந்திரன், தமிழ் காங்கிரஸ் தலைவர் இ.எ.ஆனந்தராஜா, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன், பூநகரி பிரதேச சபைத் தலைவர் பொ.சிறீஸ்கந்தராசா, வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் தொழில் நுட்பக் குழுத்தலைவருமான த.நடனேந்திரன், சுவிஸ் எழுத்தாளர் பொ.முருகவேள், உட்பட பலரின் இரங்கல் செய்திகள் ஆய்வுகளாக வெளிவந்துள்ளன. மேலும் 72 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் செய்திப் படங்களும், கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.



குடமியன் வரணியைச் சேர்ந்த காங்கேசு ராஜ்மோகன் சமாதான நீதிவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கொடிகாமம் வடக்கு எருவன் பிள்ளையார் கோயில் திருப்பணிச்சபை உபதலைவரும், குடமியன் பத்திரகாளி அம்பாள் கோயில் பரிபாலனசபை செயலாளரும், குடமியன் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், குடமியன் சிவில் குழுத் தலைவரும் ஆவார்.

இவர் தற்போது வவுனியா பிரதேச செயலக ஓமந்தை சமுர்த்தி வங்கியின் உதவி முகாமையாளராகக் கடமையாற்றுகின்றார்.



வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் பாலசுப்பிரமணியம் யாழ்.மாவட்ட நீதிபதி அ.ஆனந்தராசா முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வலிகாமம் கல்வி வலயம், யாழ்.மேலதிகக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் ஆகிய கல்வி அலுவலகங்களில் எழுதுவினைஞராகவும், முகாமைத்துவ உதவியாளராகவும், நல்லூர் பிரதேச சபையில் பிரதம முகாமை உதவியாளராகவும், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையில் நிர்வாக உத்தியோகத்தராகவும், கடமையாற்றியுள்ளார்.

இவர் தற்பொழுது வேலணை பிரதேசசபையின் வேலணைப் பகுதி உப அலுவலகப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றுகின்றார்.

# நடுவு நிலைமை



''நடுவு'' என்றால், இரண்டு பக்கத்திற்கும் நடுவில் என்று பொருள். இரண்டு பக்கங்களுக்கும் பொதுவாக ஒருவன், எல்லா நிலையிலும், எல்லாச் சூழலிலும், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இன்றி , எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் பொழுது, அவனை ''நடுநிலையாளன்'' என்று குறிப்பிடுகிறோம்.

உலகில் நெடுங்காலமாக நாடுகளிடையே சண்டைகள் நடைபெற்று வருகின்றன . பழைய காலத்தில், முடி ஆட்சிக் காலத்தில், தம்நாட்டின் எல்லையை விரிவுபடுத்தவும், தம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்யவும், தமது சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும், மன்னர்களுக்கு இடையே போர்கள் நிகழ்ந்தன. இன்றும் எல்லைத் தகராறிலிருந்து இனத்தகராறு வரையிலும் பல காரணங்களுக்காகப் போர்கள் நடைபெறுகின்றன. ஆட்சி அமைப்பில் எத்தகைய மாறுதல் ஏற்பட்டாலும், அறிவியல் வளர்ச்சியில் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டாலும் இன்றும் சண்டைகள் ஓயவில்லை. சண்டைகளை நிறுத்தவும், நாடுகளுக்கு இடையே சமாதானத்தை ஏற்படுத்தவும், ஐக்கிய நாடுகளின் சங்கம் (United Nations Organisation) என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது, இந்த அமைப்பு எந்தப் பக்கமும் சாராத ஒரு நடுநிலைமையோடு இயங்குகிறது, இயங்கவேண்டும்.

இன்றைய நிலையிலும் மட்டுமல்ல என்றைக்கும் தேவைப்படும் நடுவு நிலைமையின் பயனை வள்ளுவர் இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்திருந்தார். அதன் வெளிப்பாடே வள்ளுவர் நடுவு நிலமை பற்றிக் கூறும் கருத்துகள். நடுவுநிலைமை, அரசர்க்கும், நாடுகளுக்கும் இடையேயான அமைப்புகளுக்கு மட்டு மன்று; ஒரு குடும்பத் தலைவனுக்கும் தலைவிக்கும் தேவை. அதனால், அவன் குடும்ப்ம் மட்டும் அல்ல, அவன் சார்ந்த சமுதாயம் நல் உறவையும், அமைதியையும் பெறும்என்று வள்ளுவர் கருதினார். வள்ளுவரின் இந்தக் கருத்து நடுவுநிலைமை பிறழாமல் வாழ வேண்டும் என்ற தமிழர் பண்பாட்டின் வெளிப்பாடு ஆகும் நடுவு நிலைமையும் இல்வாழ்க்கையும்.

நடுவு நிலைமைக்கும், இல்வாழ்க்கைக்கும் என்ன தொடர்பு? குடும்ப வாழ்க்கையின் மகிழ்வுக்கும், அமைதிக்கும்,வெற்றிக்கும் காரணமே குடும்பத் தலைவனின் அல்லது தலைவியின் நடுவு நிலைமைக்கொள்கை தானே ? குழந்தைகளிடம் வெளிப்படுத்தும் அன்பு, செய்யும் உதவிகள், காட்டும் சலுகைகள் விருப்பு வெறுப்போடு இருந்தால், எல்லோரிடமும் அன்பைப் பெற முடியுமா? மரியாதையைத்தான் பெற இயலுமா? இல்லறத்தின் வெற்றி [illegible]

இல்வாழ்க்கையில் [illegible] நடுவுநிலைமை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை வள்ளுவர், மிக எளிமையாக ஓர்எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார். ''

தராசு நமக்கு அறிமுகமான ஒரு கருவி. எடை போடுவதற்குப் பயன்படுத்தும் ஒன்று, அது ஓர் இயந்திரம். அதற்கு விருப்புவெறுப்பு கிடையாது . தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடு இல்லை. எடை சரியாக இருந்தால், அது தன் கடமையைச் செய்து உண்மையான எடையைக் காட்டும்.இதுஅன்றாடம் காண்கின்ற ஒருகாட்சி. நம் அனுபவத்திற்கு உட்பட்ட ஒன்று, ஒரு பக்கம் உள்ளதட்டில் 100 கிராம் தங்கத்தையும், இன்னொரு பக்கம் உள்ள தட்டில்1 கிலோ இரும்பையும் இடுங்கள். 1 கிலோ இரும்பை விட 100கிராம்தங்கம் விலை அதிகம் உடையது. தன்மையிலும், தரத்திலும் உயர்ந்தது. இரும்பைவிட மக்கள் தங்கத்தையே விரும்புவர், இருப்பினும், தராசு, தங்கத்திற்காகத் தாழ்ந்து கொடுக்குமா? சலுகை காட்டுமா? காட்ட முடியுமா ? முடியாது. ஏன்? தராசிற்குத்தட்டிலிருக்கும் பொருளைப் பற்றிக்கவலை இல்லை. அதன் எடைதான் முக்கியம். அதை வைத்துத்தான், சீர்தூக்கிப் பார்க்கும்; முடிவை வெளிப்படுத்தும். அறிவு நிறைந்த சான்றோருக்கு உரிய சிறப்பைப் பற்றிச் சொல்லும் பொழுது வள்ளுவர்,

**சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து**
**ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி.** (குறள்: 118)

(கோல் - தராசு, ஒருபால் கோடாமை - ஒரு பக்கம் சாயாமை, அணி - அழகு) என்று குறிப்பிடுகின்றார்.

இயல்பாகச் சமனாக நின்று, தன்னிடத்தில் வைத்த பொருளின்எடையை வரையறுத்துக்காட்டுவது துலாக் கோல். அதைப்போல, சமநிலையாக இருந்து ஒருபக்கமும் சாயாது உண்மையை உரைத்தல் அறிவு நிறைந்தார்க்கு அணியாகும் என்கிறார் வள்ளுவர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றின்மை!

ஒரு ஜென் குரு அவருடைய சீடர்கள் சிலபேர் ஒரு பாதை வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

வழியிலே ஓர் ஆறு.

அதைக் கடக்க வேண்டியிருந்தது.

மிகவும் ஆழம் இல்லை.

அதனாலே எல்லோரும் இறங்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

அப்போது அந்தக் குரு கூறினாராம்.

"ஞானம் பெற்றவன் ஆற்றைக் கடக்கும் போது அவனுடைய கால்கள் ஒரு போதும் நனையாது! என.

இதைக் கேட்டதும் சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவர்கள் எல்லோரும் குழம்பிப் போய் விட்டார்கள்.

"ஞானம் பெற்றவர்களின் கால் தண்ணியிலே நனையாது என்று சொல்லுகின்றாரே எங்கள் குரு.. ஆனால் இவருடைய கால் இப்போது தண்ணீரிலே நனைகின்றதே.. அப்படி என்றால் இவருக்கு இன்னும் ஞானம் கிடைக்கவில்லை என்று அர்த்தமா? இப்படியெல்லாம் யோசிக்க ஆரம்பித்தார்கள்.

ஒரு சீடன் மெதுவாக கேட்டு விட்டான்.

"சுவாமி! ஞானியின் பாதங்கள் ஒருபோதும் நனையாது என்று சொல்கிறீர்கள்.. ஆனால் உங்களுடைய பாதங்கள் நனைந்து இருக்கின்றதே? என்றான்.

"முட்டாளே! நனைந்திருக்கிற பாதங்கள் என்னுடையது இல்லை என்றார் குரு.

அவர் சொல்லுவது சரிதான். அதில் ஒன்றும் குழப்பமில்லை.

அந்தத் தண்ணீர் அவரைத் தொடவில்லை.

தொட முடியாது.

குரு என்ன சொல்லுகிறார் தெரியுமா?

"எதுவும் என்னைத் தொட முடியாது. ஏன் என்றால் நான் இல்லை!" அப்படி என்கிறார். நானே இல்லை என்கிற போது எதுவும் என்னைத் தொட முடியாது!

இந்தக் கால் என்னுடையது என்கின்ற நினைப்பு இருந்தால் தானே, தண்ணீர் அதைத் தொடுகிறது எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு குருவுடன் தொடர்பு கொள்ளுகின்ற போது ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். அவர் எவராகவும் இல்லாத ஒருவர் -

நீங்கள் தொடர்பு கொள்ளுவது ஒரு பொருளுடன் அல்ல.

ஒரு தோற்றத்துடன் மட்டுமே!

இதுவெல்லாம் பெரியவர்கள் பேசுகின்ற பேச்சு.

அந்த அளவுக்கு 'நான்' என்கின்ற உணர்வே இல்லாமல் இந்த உலகத்திலே நம்மாலே வாழ முடியுமா?

அது நடைமுறை சாத்தியமா?

பற்றில்லாமல் வாழவேண்டும் என்று பலர் அறிவுரை சொல்லுகிறார்கள்.

நாங்கள் குறைந்த பட்சம் பேராசை இல்லாமலே வாழ்வதற்கு கற்றுக்கொண்டாலே போதுமானது.

ஒருவன் நிலத்தை உழுது கொண்டிருந்தான். ஏர் காலிலே தட்டுப்படுகின்ற மாதிரி தெரிந்தது. என்னவென்று பார்த்தான். அழகான ஒரு சிலை ஒன்று கிடைத்தது. நல்ல விலைக்கு இதை விற்க முடியும்! அதை அப்படியே மறைத்து வைத்திருந்து பொழுது சாய்ந்தவுடன் எவருக்கும் தெரியாமல் வீட்டிற்கு கொண்டு வந்து விட்டான்.

வீட்டிலே இருந்த மனைவி, பிள்ளைகள் எல்லாம் ஆள் ஆளுக்கு ஒரு கற்பனை செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

இந்த சிலையை விற்றுக் கிடைக்கும் பணத்திலே பெரிதாக வீடு ஒன்று கட்ட வேண்டும் என்ற எண்ணம் மனைவிக்கு!

கழுத்து நிறைய நகை செய்து போட வேண்டும் என்ற கற்பனை மகளுக்கு!

ஒரு நல்ல கார் வாங்கி அதிலே அமர்ந்து ஊர் சுற்ற வேண்டும் என்ற ஆசை மகனுக்கு!


இவ்வாறு வீட்டிலே இருந்த அனைவருக்கும் ஒவ்வொரு விதமான கற்பனை. சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த புதையலை எடுத்துக் கொண்டு வந்தவன் மட்டும் மிகவும் சோகமாக ஒரு மூலையிலே அமர்ந்து கொண்டான்.

"என்ன ஆகிவிட்டது உங்களுக்கு? ஏன் இப்படி எதையோ பறி கொடுத்த மாதிரி அமர்ந்திருக்கிறீர்களே? என்று கேட்டார் அவன் மனைவி!

அதுக்கு அவன் மெதுவாகத் தலையை உயர்த்தி பதில் சொல்லுகின்றான்:

"அந்த நாளில்... காணாமல் போனவை பதினெட்டு சிலைகள் என்று என் பாட்டனார் சொல்லுவார். இன்னும் பதினேழு சிலைகள் எங்கே புதைந்து உள்ளதோ தெரியவில்லையே!"

அப்படி என்று பெருமூச்சு விட்டான் அவன்!



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## இலக்கிய மன்றம் வளர உழைப்போம்

*" நான் மாற மாட்டேன்"*
*என்று பொக்கடித்த லாந்தராய்*
*புகைமண்டிக் கிடப்பதில்*
*என்ன பயன்?*

என்ற தொனிப்பொருளில் "மாறுகின்ற உலகில் நாம் மாறி விட்டோமா?" என்கின்ற தலைப்பில் சிறப்புக் கவியரங்கம் ஒன்று அண்மையில் பார்த்து ரசித்துக் கேட்டுச் சுவைக்கக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

மன்னார் சைவக்கலை இலக்கிய மன்றம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. மன்னார் சிவபூமியில் சைவம் தமிழோடு கலை வளர்க்கும் இம் மா மன்றம் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கலை விழாவை ஒழுங்குபடுத்தி, சபையோர் சுவைக்கவும், சுவைத்து திழைக்கவும் அரிய இனிய கலை விருந்தினை படைத்தளித்து வருகின்றமை பாராட்டிற்குரியதே.

மன்னார் சிவபூமியில் சைவத்தை நிலை நிறுத்தி தமிழுக்கு உரமேற்றி செய்தற்கரிய திருப்பணிகள் செய்த மகான் அமரர் கலாநிதி சபா. மனோகரக்குருக்கள். இவரின் நல்லாசியுடன் தோற்றம் பெற்ற இக்கலை மன்றம் ஆற்றும் பணி பிரகாசமான எதிர்காலத்தைப் பிரசவிக்கும் அளவிற்கு காத்திரமாய் உள்ளமை கண்கூடு.

கூட்டம் கூடுவதுடனும், கூடிக்கதைப்பதுடனும் ஆட்டம் காணும் மற்றைய கலை அமைப்புக்கள் போல் அல்லாமல், உறுதியான வழித்தடத்தில் பயணிக்க வேண்டுமென்பதே மன்னார் சைவத்தமிழ் கலா ரசிகர்களின் பேரவா. அந்த அவா ஈடேற இம்மன்றம் அர்ப்பணிப்புடன் கலைப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி என விரிவுபடுத்தி எங்கும் வியாபிக்க வேண்டும்.

இந்த இலக்கிய மன்றம் நல்லதோர் ஆரம்பம். சமகாலத்தின் தேவையும் கூட. நம் சமய நாயன்மார்கள் சம்பந்தர், சுந்தரர் எனப் பலரால் பாடப் பெற்ற புனித ஈஸ்வரத்தின் புனிதத்தைக் காக்கவும், உரிமையை உத்தரவாதப்படுத்தவும், மன்னார் சிவபூமி என்பதை இடித்துரைக்கவும் நாம் நிறையத் தொண்டாற்ற வேண்டியுள்ளது.

இந்தக் காலப் பணியை கைகளில் ஏற்க இந்துவாகப் பிறந்த எல்லோரும் ஒருமனதோடு ஒன்றித்துழைப்போம்!

**தேனாள் சுரேஷ்**
**மன்னார்.**

## மூக்குக் கண்ணாடி வியாபாரத்தில் முறைகேடு

மூக்குக் கண்ணாடிகளை வியாபாரம் செய்யும் விற்பனை நிலையங்கள் சில வியாபார நோக்குடன் செயற்படுவதால் பாவனையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில் மூக்குக் கண்ணாடி வியாபாரிகளால் ஜே/351 கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒரு பெண்மணி ஏமாற்றப்பட்டுள்ளார். 600 ரூபா பணத்தினை வாங்கி கண்ணாடியை வழங்கிவிட்டு பின்னர் வீட்டுக்கு வந்து வழங்கிய கண்ணாடியை மீளப் பெற்றுக் கொண்டு வேறு கண்ணாடி தருவதாகக் கூறிச் சென்றனர். இதுவரை அவர்கள் வரவில்லை.

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் மூக்குக் கண்ணாடி வியாபாரிகள் ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு விளக்கம் கூறி கண் பரிசோதனை மற்றும் மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வருகின்றனர்.

பொருத்தமான சாதனங்களைப் பயன்படுத்தி கண்பரிசோதனை செய்யாமை, கண் வைத்திய நிபுணர் மூலம் கண் பரிசோதனை செய்யாமல், கண்ணாடிகளை சிபாரிசு செய்தல், தரமற்ற மூக்குக் கண்ணாடிகளை அதிகரித்த விலையில் விற்பனை செய்தல் போன்ற இவர்களின் செயற்பாடுகளால் பொது மக்கள் ஏமாற்றப்படுவதாகக் கூறப்படுகின்றது.

கண்ணாடியைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடு இல்லாத நிலையில் மேற் கொள்ளப்பட்டு வரும் கண்பரிசோதனை மற்றும் கண்ணாடி விநியோகம் மூலம் எதிர்காலத்தில் பலர் பார்வை இழப்பிற்கும் பெரும் பாதிப்புக்கும் உள்ளாக வேண்டிய ஏது நிலை காணப்படுகின்றது.

பழைய இரும்பு கொள்வனவு, பாவித்த ஆடைகளை புதிய ஆடைகள் எனக் கூறி வீடு வீடாக விற்பனை செய்வது, கண்ணாடி விநியோகம், கண்பரிசோதனை போன்ற செயற்பாடுகளுக்கு ஓட்டோ மற்றும் சிறிய ரக வாகனங்களில் ஒலி பெருக்கிச் சாதனங்களை இணைப்புச் செய்து கிராமம் கிராமமாகப் பிரசாரம் செய்வது போன்ற செயற்பாடுகளை எவரும் கண்டுகொள்ளாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

**க.மாணிக்கவாசகர்,செயலாளர்,**
**கரணவாய் கிழக்கு,**
**கிராம அபிவிருத்திச் சங்கம்**

## தலைவிரி கோலம் ஒரு நாகரிகமா?

வாழ்வில் நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நாம் செய்யும் எதுவானாலும் சமூகத்துக்கு பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் நம்மைப் பற்றி இந்தச் சமூகம் குறைவான மதிப்பைக் கொண்டிருக்கும்.

இதனை ஆண்களும், பெண்களும் புரிந்து கொண்டு வாழ வேண்டும். பஸ்களில் பிரயாணம் செய்யும் சில பெண்கள் தலைவிரி கோலத்துடன் காட்சி கொடுப்பதால் அந்த பஸ்களில் பிரயாணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். பெண்கள் தலைவிரிகோலமாகச் செல்வது நாகரிகம் என்றால் மற்றவர்களுக்கு இடையூறினை ஏற்படுத்தாத வகையில் செல்ல வேண்டும்.

தலைவிரி கோலமாக பெண்கள் பஸ்களில் பிரயாணம் செய்வதால் அருகே நிற்பவர்கள் முகத்தில் தலைமுடிபடுவதால் அவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே சன நெரிசல் உள்ள இடங்களில் பெண்கள் தலைவிரி கோலமாகச் செல்லாது முடியைப் பின்னி விடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தலைவிரி கோலமாக பெண்கள் செல்வதால் சிரமத்தை அருகில் நிற்பவர்கள் மட்டுமல்ல அவர்களும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். எனவே தமது பாதுகாப்பு கருதி தலை முடியினை பின்னி கூட்டத்தின் மத்தியில் செல்லும் படி மேலும் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு சிலர் தலைவிரிகோலமாக செல்வதால் அவர்களைப் பார்த்து ஏனையோர்களும் பழகிக் கொள்கிறார்கள். எனவே இதனை மனதில் வைத்து நடக்கவும்.

**பாலன், முல்லைத்தீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெற்றிச்சுட்டி

## வைக்கும்போது கவனிக்க வேண்டியவை

திருமணப் பெண்ணுக்கு நெற்றிச் சுட்டி வைக்கும்போது அது நேராக நிற்காது அங்கும் இங்கும் அசைந்து ஓரத்தில் போய் நிற்கும். எந்த விசேடம் ஆனாலும் பூப்பெய்திய பெண்களுக்கு, திரு மணப் பெண்களுக்கு, வளைகாப்பு பெண்களுக்கு ஜடை தைத்து நெற்றி சுட்டி வைப்பார்கள். பிள்ளைகளுக்கும் பாடசாலையில் கலை நிகழ்வுகளில் நடனம் ஆடும்போது நெற்றிச் சுட்டி வைப்பார்கள். அப்போது அவர்கள் நடனம் ஆடும்போது நெற்றிச்சுட்டியும் சேர்ந்து ஆடும். ஒருங்கே அமைந்த செற் நெற்றிச் சுட்டி என்றால் பிரச்சினை இல்லை. அப்படியே தலைக்கு செற்றாகக் கிடைத்து விடும்.

அதற்கு முன்னர் வகிடு ஆரம்பத்தில் நெற்றிச் சுட்டியுடன் ஒரு சிறிய அரை அங்குல அளவுள்ள பித்தளை சேஃப்டி பின் பொன் நிறத்தில் இருக்கும் அதைக் குத்திவிட்டால் அதில் கைபோடத் தேவையில்லை. அது அப்படியே வைத்த இடத்தில் நிற்கும்.

அதேபோல் திருமணத்தில் நெற்றிச் சுட்டி வைத்து வருபவர்களுக்கும் அப்படி இவ்வாறு விலகிப் போய் நிற்கும். திருமண மணப்பெண்ணுக்கும் பதற்றம் இல்லை. தங்கத்தை பயன்படுத்துவதை விட பித்தளை சேஃப்டி பின்னை பயன்படுத்தலாம். இது தொலைந்து போகும் என்ற பதற்றம் இல்லாமல் இருக்கலாம்.

# முடி அதிகம் கொட்டுகிறதா?

## கவலையே வேண்டாம் இந்த உணவுகளைச் சாப்பிடுங்கள்

அதிகமானோர் சைவ உணவுகளால் கூந்தல் வலுவிழக்கிறது என்று நினைக்கின்றனர். உண்மையில் சைவ உணவுகளால் கூந்தலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆனால் எப்படியோ அந்த சைவ உணவுகளால் இதயம் ஆரோக்கியத்துடன் இருப்பதோடு உடல் எடையும் குறைகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஒரு சில சைவ உணவுகளாலும் கூந்தல் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

சைவ உணவுகள் சிலவற்றால் கூந்தல் நன்கு வலுவடைவதுடன் கூந்தல் உதிர்தலும் தடுக்கப்படும் என்று ஒரு ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்றைய காலத்தில் மாசடைந்து வரும் சுற்றுசூழல் காரணமாக கூந்தலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஏன், அந்தப் பிரச்சினைகளால் வழுக்கைத் தலை கூட ஏற்படுகிறது.

சொல்லப்போனால் கூந்தலை வைத்தே உடலின் ஆரோக்கியத்தைப்பற்றிச் சொல்லலாம். நீங்கள் ஆரோக்கியத்துடன் இருந்தால் கூந்தல் நன்கு ஆரோக்கியத்துடன் எந்த பிரச்சினையுமின்றி இருக்கும். இல்லையெனில் கூந்தல் உதிர்தல், பொடுகுத் தொல்லை, வறட்சி போன்றவை ஏற்படும்.



இவையெல்லாம் வருவதற்குக் காரணம், உடலில் போதிய சத்துக்கள் இல்லாமையே ஆகும். ஆனால் தற்போது அத் தகைய சத்துக்கள் அனைத்தும் சைவ உணவுகளில் உள்ளன. அதிலும் கூந்தல் வளர்ச்சிக்கு தேவை யான சத்துக்களான ஜிங்க், விற்றமின் சி, புரோட்டீன் போன்றவை உள்ள உணவுகளைச் சாப்பிட்டாலே, கூந்தலில் எந்தப் பிரச்சினையும் வராமல் இருக்கும்.



# உபயோக அழகுக் குறிப்புகள்

உங்கள் கண்களைச் சுற்றியுள்ள திசுக்களை மென்மையாக வைத்திருக்க சிறந்த கண் மாய்ஸ்ச் கரைசலை பயன்படுத்தவும். உங்கள் கண்கள் பொங்கியிருந்தால் இரண்டு டீ பேகுகளை குளிர் நீரில் நனைத்து அதனை கண் இமையின் மீது வைத்துக் கொள்ளவும்.

கண்களின் கரு வளையங்களைப் போக்க உருளைக் கிழங்கை நறுக்கி கண்களின் மீது தினமும் வைத்து வரவும். புருவங்களை சீராக்கிக் கொள்ள ரூத் பிரஷ்ஷை பயன் படுத்தினால் சிறப்பாக இருக்கும்.

சருமத்தின் சுருக்கத்தை மறைக்க அங்கு மெஹந்தி இட்டு மறைக்கலாம். அல்லது விற்றமின் ஈ எண்ணெயைத் தடவி மங்கச் செய்யலாம்.

நகம் வெட்டும் போது ஓரங்களை வெட்டினால் நகத்தை அது பலமிழக்கச் செய்யும். நகக்கணுக்கள் வறண்டு போகாமல் இருக்க விற்றமின் ஏ மற்றும் கல்சியம் அதிகமாக எடுத்துக் கொள்ளவும். நகத்தில் உள்ள வெள்ளைப் பொட்டுக்களை நீக்க துத்தநாகம் கலந்த மருந்தை எடுத்துக்கொள்ளவும்.

கால்களை நன்றாக அழகாக வைத்துக் கொள்ள கால்களில் நல்லெண்ணெய் தேய்த்து பின்னர் கால்களைக் கழுவவும். கால்களை நீங்களாகவே நன்றாக மசாஜ் செய்யுங்கள். இளமையுடன் உங்கள் கால்கள் இருக்க இதுவே சிறந்த வழி.

உள்ளங்கால்கள் கடுமையாக வறண்டு இருந்தால் சூடான மெழுகுத் திரவம் கொண்டு தடவவும். உங்கள் கால்கள் மிருதுவாகவும் அழகாகவும் இருக்க உங்கள் குளியலில் பாலைச் சிறிதளவு சேர்த்துக் கொள்ளுங்கள்.

# பட்டுப்போன்ற மேனிக்காக ஏக்கமா?



சில பெண்களுக்கு எத்தனை வயதானாலும் தோல் சுருங்காது. வளவளவெனச் சின்னப் பெண்ணைப் போலவே இருக்கும்! தோல் வறட்சி, கட்டம் கட்டமாகத் தோலின்மீது மெலிதான வெடிப்பு எதுவுமில்லாத பட்டுப்போன்ற மேனி வேண்டுமா?

**தண்ணீர் மருந்து**

தண்ணீர் கிடைக்காத காலத்தில் மருந்து மாதிரி தான் தண்ணீரைப் பருக வேண்டியிருக்கின்றது. ஆனால், ஒரு நாளைக்கு 1-2 லீற்றர் வரை தண்ணீர் பருகுபவர்களுக்கு வயிற்றுப் பிரச்சினை அதிகமாக வருவதில்லை!

வயிறு நலமாக இருந்தால், எமது உடம்பின் சருமமும் சுத்தமாக இருக்கும்.

**எலுமிச்சை உடம்புக்கு நல்லது!**

குளிப்பதற்கு முன் - ஒரு வாளித் தண்ணீரில் ஒரு மூடி எலுமிச்சையைப் பிழிந்து கொள்ளுங்கள். சோப்பைத் தேய்த்துக் குளித்த பின், கடைசியாக ஒரு 'எலுமிச்சைக்குளியல்' எடுங்கள். இதன் புத்துணர்வையும் சரும மினு மினுப்பையும் அனுபவித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.



**தேமலை விரட்டுங்கள்!**

நாட்டுமருந்துக் கடைகளில் கார்போக அரிசி என்று கேட்டால் தருவார்கள். இதைப்பொடி செய்து, மெல்லிய துணியில் சலித்து, ஒரு டப்பாவில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

தினமும் இதில் சிறிதளவு எடுத்துத் தண்ணீர் விட்டு பேஸ்ட் மாதிரி செய்து தோலில் தடவுங்கள். விரைவில் தேமல் இருந்த இடம் தெரியாமல் போகும்!

**[illegible] பப்பாளி!**

நன்கு பழுத்த பப்பாளியை நறுக்கி, மிக்ஸியில் போட்டு அடித்து, அத்துடன் ஒரு மூடி எலுமிச்சைச் சாறை விட்டுக் கலந்து உடம்பில் தேய்த்து ஒரு மணி நேரம் வரை ஊறவிட்ட பின்னர் குளிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org